எட்டாம் பாட புத்தகம்

(ஒன்பதாம் வகுப்பு)

மேரி யாசியார் கலாசாலைத் தமிழ்ப் பண்டிதரும்
'நல்லாசிரியன்' பத்திராதிபரும் ஆகிய
கா. நமச்சிவாய முதலியார்
எழுதியது

துரைத்தனத்தார் அங்கீகரித்தது

சென்னை :
ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்
1927
ரெஜிஸ்தர் செய்தது] [விலை 10 அணா

Printed at the "Aurora Press," Madras.

NOTE

The Eighth and Ninth Readers of this series are intended for the use of the pupils of the IV and V Forms of Secondary Schools. They include a large number of selections in Prose and Poetry from various authors. These have been arranged on a graduated scale, both in matter and in style.

The Readers will be found too big to be completed in the course of a year. They have been specially so designed, so as to afford a free scope to teachers for selecting portions in accordance with the varying standards of efficiency of the classes in different schools. It would, besides, enable teachers to vary the selection of lessons alternately every year, for the benefit of boys who are detained in the same class for two consecutive years.

In the selection of poetical pieces care has been taken to introduce the more important metres by way of introducing the pupils to the elements of Tamil scansion.

In accordance with the present views of the Educational authorities, more pages have been devoted to Prose than to Poetry. Prose extracts from various authors, both ancient and modern, are given, so that pupils may have a variety of models before them in their early attempts to form a style of their own. But the selections themselves have been made with particular regard to simplicity of style and directness of expression.

A Dramatic Interlude is given at the end of the book being the story of Gauri, a Tamil rendering of Tennyson's Dora. This may be enacted as a more serious sort of action-song on occasions of public entertainment.

Opportunity is taken to acknowledge indebtedness to the following gentlemen who have kindly permitted extracts to be taken from their valuable writings and included in the Readers.

1. M.R.Ry. Pandit Venkatarama Iyengar, Avl., 'On Travels' (தேச சஞ்சாரம்)

2. M.R.Ry. S. Anavaratavinayakam Pillai, Avl., M. A., L. T., F. M. U.,—'Life of Avvai' (ஔவையார் சரித்திரம்)

C. R. N.

பொருளடக்கம்

செய்யுட் பாடங்கள்

எண்	விஷயம்	பக்கம்
I.	கடவுள் வாழ்த்து	1
II.	நள வெண்பா—தமயந்தி சுயம்வரம் (புகழேந்திப் புலவர்)	2—5
III.	கபிலர் அகவல்	5—7
	உடல் நிலையாமை	5
	சாதி வேற்றுமை இன்மை ... (கபிலர்)	7
IV.	பட்டினத்தார் பாடல் ... ... (பட்டினத்துப் பிள்ளையார்)	8—12
V.	சீட்டுக் கவிகள்	12—15
	(அட்டாவதானம் - சரவணப் பெருமாள் கவிராயர்)	14
	(அந்தகக்கவி வீரராகவ முதலியார்)	15
VI.	கோவிந்த சதகம்	16—18
VII.	தனிப் பாடல்கள்	18—21
	காளமேகப் புலவர்...	18
	படிக்காசுத் தம்பிரான்	19
	இராமசந்திர கவிராயர்	20
	அந்தகக்கவி வீரராகவ முதலியார் ...	21

எண்	விஷயம்	பக்கம்
VIII.	திருக்குறள் ... ... (திருவள்ளுவர்)	22—24
IX.	குணவான் தன் குற்றம் உணர்வான் (கா. நமச்சிவாய முதலியார்)	24—34
X.	தாயுமானவர் பாடல் ... ... (தாயுமானவர்)	34—37
XI.	திருப்புகழ் ... ... (அருணகிரி நாதர்)	37—38
XII.	வைராக்கிய சதகம்... ... ... (சாந்தலிங்க சுவாமிகள்)	39—41
XIII.	திருக்குறள் ... ... (திருவள்ளுவர்)	41—43
XIV.	நீதி சாத்திரம் ... ... (கா. நமச்சிவாய முதலியார்)	44—46

வசன பாடங்கள்

I.	கம்பரும், சோழனும் ... ... (கா. நமச்சிவாய முதலியார்)	49—74
II.	தேச சஞ்சாரம் ... ... (வெங்கடராம ஐயங்கார்)	75—78
III.	லப்தஹானி (பேறழிவு) ... ... (தாண்டவராய முதலியார்)	79—100

எண்	விஷயம்	பக்கம்
IV.	ஔவையார் சரித்திரம் ஒரு பகுதி (அநவரதவிநாயகம் பிள்ளை, எம்.ஏ., எல்.டி.)	101—119
V.	அனுமான் தன் உருக்காட்டுதல் ...	119—136
VI.	சத்திமுற்றப் புலவர் ... ... (கா. நமச்சிவாய முதலியார்)	136—138
VII.	அறியாமை ... ... (லார்ட் கன்னிமரா பிரபு செய்த உபந்நியாசத்தின் மொழி பெயர்ப்பு)	139—143
VIII.	கௌரி (ஒரு சிறு நாடகம்) ... (கா. நமச்சிவாய முதலியார்)	145—160

எட்டாம் பாட புத்தகம்

I. கடவுள் வாழ்த்து

அன்றே என்றன் ஆவியும்
உடலும் உடைமை யெல்லாமும்
குன்றே யனையாய் என்னையாட்
கொண்டபோதே கொண்டிலையோ
இன்றோர் இடையூ றெனக்குண்டோ
எண்டோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழைசெய்வாய்
நானோ இதற்கு நாயகமே. (1)

— திருவாசகம்

வேதமும் வேதம் விளம்புமெய்ப் பொருளும்
அப்பொருள் விதங்களும் பஞ்ச
பூதமும் புலனும் புலன்களின் பயனும்
அப்பயன் பொலிவுற நுகரும்
ஞாதமும் உலகம் படைத்தளித் தழித்து
ஞானமாய் அகிலமும் நிறைவுற்
ருதியும் நடுவும் முடிவுமாய் நின்ற
ஆதியான் அடியிணை பணிவாம். (2)

— பாரதம்

II. நள வெண்பா

(தமயந்தி சுயம்வரம்)

காமர் கயல்புரளக் காவி முகைநெகிழத்
தாமரையின் செந்தேன் தளையவிழப் — பூமடந்தை
தன்னாட்டம் போலுந் தகைமைத்தே சாகரஞ்சூழ்
நன்னாட்டின் முன்னாட்டு நாடு. (1)

கோதை மடவார் குலவுமெய் யிற்றிமிர்ந்த
சீதக் களபச் செழுஞ்சேற்றால் — வீதிவாய்
மானக் கரிவழுக்கும் மாவிந்தம் என்றுளதோர்
ஞானக் கலைவாழ் நகர். (2)

ஓடாத தானை நளனென் றுளனொருவன்
பீடாருஞ் செல்வப் பெடைவண்டோ — டூடா
முருகுடைய மாதர் முகநணைக்குந் தண்டார்
அருகுடையான் வெண்குடையான் ஆங்கு. (3)

வாங்குவளைக் கையார் வதன மதிபூத்த
பூங்குவளைக் காட்டிடையே போயினான்—தேங்குவளைத்
தேனாடி வண்டு சிறகுலர்த்தும் நீர்நாடன்
பூநாடிச் சோலை புக. (4)

நீணிறத்தாற் சோலை நிறம்பெயர நீடியதன் [தான்
தாணிறத்தாற் பொய்கைத் தலஞ்சிவப்ப — மாணிறத்
முன்னப்புள் தோன்றும் முளரித் தலைவைகும்
அன்னப்புள் தோன்றிற்றே யாங்கு. (5)

பேதை மடவன்னந் தன்னைப் பிழையாமல்
மேதிக் குலமேறி மென்கரும்பைக் — கோதிக்
கடித்துத்தான் முத்துமிழும் கங்கைநீர் நாடன்
பிடித்துத்தா என்றான் பெயர்ந்து. (6)

அன்னந் தனைப்பிடித்தங் காயிழையார் கொண்டுபோய்
மன்னன் திருமுன்னர் வைத்தலுமே — அன்னம்
மலங்கிற்றே தன்னுடைய வான்கிளையைத் தேடிக்
கலங்கிற்றே மன்னவனைக் கண்டு. (7)

அஞ்சல் மடஅனமே உன்றன் அணிநடையும்
வஞ்சி யனையார் மணிநடையும் — விஞ்சியது
காணப் பிடித்ததுகாண் என்றான் களிவண்டு
மாணப் பிடித்ததார் மன். (8)

திசைமுகந்த வெண்கவிகைத் தேர்வேந்தே உன்றன்
இசைமுகந்த தோளுக் கிசைவாள் — வசையில்
தமயந்தி யென்றோதுந் தையலாள் மென்றோள்
அமையந்தி யென்றோர் அணங்கு. (9)

அன்னமே நீயுரைத்த அன்னத்தை என்னாவி
உன்னவே சோரும் உனக்கவளோ — டென்ன
அடைவென்றான் மற்றந்த அன்னத்தை முன்னே
நடைவென்றாள் தன்பால் நயந்து. (10)

வீமன் திருமடந்தை மென்மாலை உன்னுடைய
வாம நெடும்புயத்தே வைகுவிப்பேன் — சேம
நெடுங்குடையாய் என்றுரைத்து நீங்கியதே அன்னம்
ஒடுங்கிடையாள் தன்பால் உயர்ந்து. (11)

இவ்வளவிற் செல்லுங்கொல் இவ்வளவிற் காணுங்கொல்
இவ்வளவிற் காதல் இயம்புங் கொல் — இவ்வளவில்
மீளுங்கொல் என்றுரையா விம்மினான் மும்மதத்தின்
றாளுங்கொல் யானை அரசு. (12)

மன்னன் விடுத்த வடிவிற் றிகழ்கின்ற
அன்னம்போய்க் கன்னி அருகணைய — நன்னுதலும்
தன்னாடல் விட்டுத் தனியிடஞ்சேர்ந் தாங்கதனை
என்னாடல் சொல்லென்றாள் ஈங்கு. (13)

செம்மனத்தான் தண்ணளியான் செங்கோலான் மங்கையர்
தம்மனத்தை வாங்குந் தடந்தோளான் — மெய்ம்மை
நளனென்பான் மேனிலத்தும் மானிலத்தும் மிக்கான்தன்
உளனென்பான் வேந்தன் உனக்கு. (14)

வாவி யுறையும் மடஅனமே என்னுடைய
ஆவி உவந்தளித்தாய் ஆகியால் — காவினிடைத் [ள்
தேர்வேந்தற் கென்னிலைமை சென்றுரைத்தி என்றுரைத்தா
பார்வேந்தன் பாவை பதைத்து. (15)

போயழுது சொல்லென்ற தென்னப் பிறைநுதன்மேல்
நீரரும்பத் தன்பேதை நின்றாளைப் — பாராக்
குலவேந்தன் சிந்தித்தான் கோவேந்தர் தம்மை
மலர்வேய்ந்து கொள்ளு மணம். (16)

மங்கை சுயம்வரநாள் ஏழென்று வார்முரசம்
எங்கும் அறைகென் றியம்பினான் — பைங்கமுகின்
கூந்தன்மேற் சங்கைக் கொழுந்தோடி தன்னுடன்
வேந்தர்மேல் தூதோட விட்டு. (17)

புள்ளுறையுஞ் சோலைகளும் பூங்கமல வாவிகளும்
உள்ளூர் புறமும் இனிதுறைந்தார் — தெள்ளரிக்கண்
பூமகளைப் பொன்னைப் பொருவேல் விதர்ப்பன்றன்
கோமகளைத் தம்மனத்தே கொண்டு. (18)

சடைச்செந்நெல் பொன்விளைக்குந் தன்னாடு பின்னைக்
கடற்றானை முன்னாகக் கண்டான் — அடற்கமைந்த
வில்லியரும் பொற்றேர் வீமன் திருமகளாம்
நல்லுயிரும் வாழு நகர். (19)

மன்னர் விழித்தா மரைபூத்த மண்டபத்தே [துச்
பொன்னின் மடப்பாவை போய்ப்புக்காள் — மின்னிறத்
செய்யதாள் வெள்ளைச் சிறையன்னம் செங்கமலப்
பொய்கைவாய்ப் போவதே போன்று. (20)

மன்னர் குலமும் பெயரும் வளநாடும்
இன்ன பரிசென் றியலணங்கு — முன்னின்று
தார்வேந்தன் பெற்ற தனிக்கொடிக்குக் காட்டினாள்
தேர்வேந்தர் தம்மைத் தெரிந்து. (21)

மின்னுந்தார் வீமன்றன் மெய்ம்மரபிற் செம்மைசேர்
கன்னியான் ஆகிற் கடிமாலை — அன்னந்தான்
சொன்னவனைச் சூட்ட அருளென்றாள் சூழ்விதியின்
மன்னவனைத் தன்மனத்தே வைத்து. (22)

திண்டோள் வயவேந்தர் செந்தா மரைமுகம்போய்
வெண்டா மரையாய் வெளுத்தவே — ஒண்டாரைக்
கோமாலை வேலான் குலமாலை வேற்கண்ணாள்
பூமாலை பெற்றிருந்த போது. (23)

கணிமொழிந்த நாளில் கடிமணமும் செய்தார்
அணிமொழிக்கும் அண்ண லவர்க்கும் — பணிமொழியார்
குற்றேவல் செய்யக் கொழும்பொன் அறைபுக்கார்
மற்றேவர் ஒவ்வார் மகிழ்ந்து. (24)

III. கபிலர் அகவல்

(உடல் நிலையாமை)

உலகத் தீரே உலகத் தீரே
நாக்கடிப் பாக வாய்ப்பறை யறைந்து
சாற்றக் கேண்மின் சாற்றக் கேண்மின்
மனிதர்க்கு வயது நூறல்ல தில்லை
ஐம்ப திரவில் அகலும் துயிலினால்
ஒட்டிய இளமையால் ஓரைந்து நீங்கும்
ஆக்கை யிளமையில் ஐம்மூன்று நீங்கும்
எழுபது போகநீக் கிருப்பன முப்பதே

அவற்றுள்
இன்புறு நாளும் சிலவே அதாஅன்று
துன்புறு நாளும் சிலவே யாதலால்
பெருக்கா றொத்தது செல்வம் பெருக்காற்
றிடிகரை யொத்த திளமை இடிகரை
வாழ்மர மொத்தது வாழ்நாள் ஆதலால்
ஒன்றே செய்யவும் வேண்டும் ஒன்றும்
நன்றே செய்யவும் வேண்டும் நன்றும்
இன்றே செய்யவும் வேண்டும் இன்றும்
இன்னே செய்யவும் வேண்டும் இன்னும்
நாளை நாளை பென்பீ ராகில்
நமனுடை முறைநா ளாவதும் அறியீர்
நம்முடை முறைநா ளாவதும் அறியீர்
எப்போ தாயினும் கூற்றுவன் வருவான்
அப்போ தந்தக் கூற்றுவன் றன்னைப்
போற்றவும் போகான் பொருளொடும் போகான்
சாற்றவும் போகான் தமரொடும் போகான்
நல்லா ரென்னான் நல்குர வறியான்
தீயா ரென்னான் செல்வரென் றுன்னான்
தரியான் ஒருகணம் தறுகண ணாளன்
உயிர்கொடு போவான் உடல்கொடு போகான்
ஏதுக் கழுவீர் ஏழை மார்ந்தர்காள்
உயிரினை யிழந்தோ உடலினை யிழந்தோ
உயிரிழந் தழுதுமென் றோதுவி ராகில்
உடலினை யன்றலா தின்றும் காண்கிலிர்
உயிரினை யிழந்த உடலது தன்னைக்
களவு கொண்ட கள்வனைப் போலக்
காலும் ஆர்த்துக் கையும் ஆர்த்துக்
கூறை களைந்து கோவணம் கொளீஇ

ஈமத் தீயை எரியெழ மூட்டிப்
பொடிபடச் சுட்டுப் புனலிடை மூழ்கிப்
போய்த்தம ரோடும் புந்திநைந் தழுவது
சலமெனப் படுமோ சதுரெனப் படுமோ.

சாதிவேற்றுமை இன்மை

மாரிதான் சிலரை வரைந்து பெய்யுமோ
காற்றும் சிலரை நீக்கி வீசுமோ
மாணிலம் சுமக்க மாட்டே னென்னுமோ
கதிரோன் சிலரைக் காயே னென்னுமோ
மேல்நான்கு சாதிக் குணவு நாட்டிலும்
கீழ்நான்கு சாதிக் குணவு காட்டிலுமோ
திருவும் வறுமையும் செய்தவப் பேறும்
சாவதும் வேறிலை தரணி யோர்க்கே
குலமும் ஒன்றே குடியும் ஒன்றே
இறப்பும் ஒன்றே பிறப்பும் ஒன்றே
வழிபடு தெய்வமும் ஒன்றே யாதலால்
முன்னோ ருரைத்த மொழிதவ றுமல்
எந்நா ளாயினும் இரப்பவர்க் கிட்டுப்
புலையும் கொலையும் களவும் தவிர்ந்து
நிலைபெற அறத்தில் நிற்பதை யறிந்து
ஆணும் பெண்ணும் அல்லலை யுணர்ந்து
பேணி யுரைப்பது பிழையெனப் படாது
சிறப்பும் சீலமும் அல்லது —
பிறப்பு நலந்தருமோ பேதை யீரே.

IV. பட்டினத்தார் பாடல்

பொருளுடை யோரைச் செயலினும் வீரரைப் போர்க்களத்தும், தெருளுடை யோரை முகத்தினும் தேர்ந்து தெளிவதுபோல், அருளுடை யோரைத் தவத் திற் குறைவில் அறிவினில், இருளறு சொல்லி னுங் காணத் தகுங்கச்சி யேகம்பனே. (1)

அப்பென்றும் வெண்மைய தாயினும் ஆங்கந் நிலத்தியல்பால், தப்பின்றி யேகுண வேற்றுமை தான் பல சார்தலினால், செப்பில் அபக்குவ பக்குவ மாயுள்ள சீவனிலும், இப்படி யேநிற்பன் எம்பி ரான்கச்சி யேகம்பனே. (2)

நாயாய்ப் பிறந்திடில் நல்வேட்டை யாடி நயம் புரியும், தாயார் வயிற்றில் நராய்ப் பிறந்துபின் சம்பந் நராய், காயா மரமும் வறளாங் குளமுங்கல் லாவு மென்ன, ஈயா மனிதரை யேன்படைத் தாய்கச்சி யேகம்பனே. (3)

ஊற்றைச் சரீரத்தை ஆபாசக் கொட்டிலை ஊன் பொதிந்த, பீற்றல் துருத்தியைச் சோறிடுந் தோற் பையைப் பேசரிய, காற்றிற் பொதிந்த நிலையற்ற பாண்டத்தைக் காதல்செய்தே, ஏற்றுத் திரிந்துவிட் டேனிறை வாகச்சி யேகம்பனே. (4)

கொன்றேன் அநேக உயிரையெல் லாம்பின்பு கொன்று கொன்று, தின்றே னதன்றியும் தீங்குசெய் தேனது தீர்க்கவென்றே, நின்றேனின் சந்நிதிக் கேயத னாற்குற்றம் நீபொறுப்பாய், என்றே யுனைநம்பி னேனி றை வாகச்சி யேகம்பனே. (5)

காம்பிணங் கும்பணைத் தோளார்க்கும் பொன்னுக்கும் காசினிக்கும், தாம்பிணங் கும்பல ஆசையும் விட்டுத் தனித்துச் செத்துப், போம்பிணந் தன்னைத் திரளாகக் கூடிப் புரண்டினிமேல், சாம்பிணம் கத்துதையோவென் செய் வேன்றில்லைச் சங்கரனே. (6)

முடிசார்ந்த மன்னரும் மற்றுமுள் ளோரும் முடிவிலொரு, பிடிசாம்ப ராய்வெந்து மண்ணாவ துங் கண்டு பின்னுமடந்தப், படிசார்ந்த வாழ்வை நினைப்ப தல் லாற்பொன்னி னம்பலவர், அடிசார்ந்து நாமுய்ய வேண்டுமென் றேயறி வாரில்லையே. (7)

பொன்னுற்ப்ர யோசனம் பொன்படைத் தாற் குண்டு பொன்படைத்தான், தன்னுற்ப்ர யோசனம் பொன்னுக்கங் கேதுண்டத் தன்மையைப்போல், உன்னுற்ப்ர யோசனம் வேணதெல் லாமுண் டுனைப்பணியும், என்னுற்ப்ர யோசனம் ஏதுண்டு காளத்தி யீசுரனே. (8)

கையொன்று செய்ய விழியொன்று நாடக் கருத்தொன்றெண்ணப், பொய்யொன்று வஞ்சக நாவொன்று பேசப் புலால்கமழும், மெய்யொன்று சாரச் செவியொன்று கேட்க விரும்புமியான், செய்கின்ற பூசையெவ் வாறுகொள் வாய்வினை தீர்த்தவனே. (9)

கண்ணுண்டு காணக் கருத்துண்டு நோக்கக் கசிந்துருகிப், பண்ணுண்டு பாடச் செவியுண்டு கேட்கப்பல் பச்சிலையால், எண்ணுண்டு சாத்த எதிர்நிற்க ஈசன் இருக்கையிலே, மண்ணுண்டு போகுதையோகெடு வீரிந்த மானிடமே. (10)

வாதுற்ற திண்புயர் அண்ணாமலையார் மலர்ப்பதத் தைப், போதுற்றெப் போதும் புகழுகிலை நெஞ்சே யிந்தப் பூதலத்தில், தீதுற்ற செல்வமென் தேடிப் புதைத்த திரவியமென், காதற்ற வூசியும் வாராது காணுங் கடை வழிக்கே. (11)

செல்வரைப் பின்சென்று சங்கடம் பேசித் தினந் தினமும், பல்லினைக் காட்டிப் பரிதவி யாமல் பரானந் தத்தின், எல்லையிற் புக்குநல் லேகாந்த மாயெனக் காமிடத்தே, அல்லலற் றென்றிருப் பேனத்த னேகயி லாயத்தனே. (12)

நானெத் தனைபுத்தி சொன்னாலும் கேட்டிலை நன் னெஞ்சமே, ஏனிப் படிக்கெட் டுழலுகின் றாயினி யேது மிலா, வானத்தின் மீனுக்கு வன்றூண்டி யிட்ட வகை யதுபோல், போனத்தை மீள நினைக்கின் றனையென்ன புத்தியிதே. (13)

பட்டினத்தார் தாயார் தகனக்கிரியை

ஐயிரண்டு திங்களா யங்கமெலாம் நொந்துபெற்றுப்
பையலென்ற போதே பரிந்தெடுத்துச் — செய்யவிரு
கைப்புறத்தி லேந்திக் கலசப்பால் தந்தாளை
எப்பிறப்பிற் காண்பேன் இனி. (14)

முந்தித் தவங்கிடந்து முந்நூறு நாளளவும்
அந்திபக லாய்ச்சிவனை யாதரித்துத் — தொந்தி
சரியச் சுமந்துபெற்ற தாயார் தமக்கோ
எரியத் தழல்மூட்டு வேன். (15)

வட்டிலிலும் தொட்டிலிலும் மார்மேலும் தோள்மேலும்
கட்டிலிலும் வைத்தென்னைக் காதலித்து — முட்டச்
சிறகிலிட்டுக் காப்பாற்றிச் சீராட்டுந் தாய்க்கோ
விறகிலிட்டுத் தீமூட்டு வேன். (16)

நொந்து சுமந்துபெற்று நோவாம லேந்திப்பால்
தந்து வளர்த்தெடுத்துத் தாழாமே — அந்திபகல்
கையிலே கொண்டென்னைக் காப்பாற்றுந் தாய்தனக்கோ
மெய்யிலே தீமூட்டு வேன். (17)

அள்ளி யிடுவ தரிசியோ தாய்தலைமேல்
கொள்ளிதனை வைப்பேனோ கூசாமல் — மெள்ள
முகமேல் முகம்வைத்து முத்தாடி என்றன்
மகனே எனஅழைத்த வாய்க்கு. (18)

வெந்தாளோ சோணகிரி வித்தகா நின்பதத்தில்
வந்தாளோ என்னை மறந்தாளோ — சந்ததமும்
உன்னையே நோக்கி உகந்து வரங்கிடந்தென்
றன்னையே யீன்றெடுத்த தாய். (19)

வீற்றிருந் தாளன்னை வீதி தனிலிருந்தாள்
நேற்றிருந்தாள் இன்றுவெந்து நீறானாள் — பாற்றெளிக்க
எல்லீரும் வாருங்கள் ஏதென் றிரங்காமல்
எல்லாம் சிவமயமே யாம். (20)

விட்டுவிடப் போகுதுயிர் விட்டவுட னேஉடலைச்
சுட்டுவிடப் போகின்றார் சுற்றத்தார் — பட்டதுபட்
டெந்நேர முஞ்சிவனை ஏத்துங்கள் போற்றுங்கள்
சொன்னேன் அதுவே சுகம். (21)

காலன் வருமுன்னே கண்பஞ் சடையுமுன்னே
பாலுண் கடைவாய்ப் படுமுன்னே — மேல்விழுந்தே
உற்றார் அழுமுன்னே ஊரார் சுடுமுன்னே
குற்றாலத் தானை நீ கூறு. (22)

இப்பிறப்பை நம்பி யிருப்பையோ நெஞ்சகமே
வைப்பிருக்க வாயில் மனையிருக்கச் — சொப்பனம்போல்
விக்கிப்பற் கிட்டக்கண் மெத்தப்பஞ் சிட்டப்பைக்
கக்கிச்செத் துக்கொட்டக் கண்டு. (23)

போது விருக்க விரும்பினையே வெள்ளிமலையோன்
சேலை மறந்திலையே சிந்தையே — கால்கைக்குக் [உடல்
கொட்டையிட்டு மெத்தையிட்டுக் குத்திமொத்தப் பட்ட
கட்டையிட்டுச் சுட்டுவிடக் கண்டு. (24)

V. சீட்டுக் கவிகள்

பண்டைக்காலத்து நூல்கள் பலவும் செய்யுட்களாலேயே யாக்கப்பட்டுள்ளன. இலக்கண இலக்கியங்களே யன்றி கணிதமும் ஆயுர்வேதமும் அரதனம் முதலியவற்றைப் பற்றிய விஷயங்களை உணர்த்துவனவும் செய்யுள் நூல்களே. இவையே யன்றி, கவிவாணர் கடிதம் எழுத நேரினும் கவிதையே வரைந்து அனுப்புவர். அது **சீட்டுக் கவி** எனப் பெயர் பெறும். காவலர்க்கும் கனவான்களுக்கும் அப் பாவாணர் பரிந்து அனுப்பும் சீட்டுக் கவிதையில், இக்காலத்து வழங்கும் அங்கில முறைபோல், இன்னாரிடத்திலிருந்து இன்னாருக்கென்று எழுதுவதே வழக்கமாயிருந்தது. அப்புலவர்

தம் கூற்றைப் புரவலரும் பொன்னேபோற் போற்றி நடப்பர். பாவாணரை நேரிற் காணின் எதிர்கொண்டழைத்து முகமன் கூறி உபசரிப்பதே போல், அவர்கள் எழுதிய நிருபத்தினையும் நிருபர்கள் எதிர்கொண்டு சென்று கையிலேற்று மகிழ்வர் என்பது கீழ்க் குறித்த கவிகளால் நன்கு விளங்கும். சீட்டுக் கவிதையில் கவி விடுக்கும் புலவர் தம் ஆற்றல் தோன்றத் தம்மைச் சாலப் புனைந்துகூறுவர். பின் பாட்டுடைத்தலைவன் வண்மையும் தோன்ற வரைவர். இன்னணம் தம்மைத் தாமே புனைந்துரைத்தல் தற்புகழ்ச்சியின்பாற் படாதோவெனின் அற்றன்று,

'மன்னுடை மன்றத்து ஓலைத் தூக்கினும்
தன்னுடை ஆற்றல் உணரா ரிடையினும்
மன்னிய அவையிடை வெல்லுறுபொழுதினும்
தன்னை மறுதலை பழித்த காலையும்
தன்னைப் புகழ்தலும் தகும்புலவோற்கே,'

என ஆன்றோர் கூற்று இடந்தருதலின், அத்தகைய சீட்டுக் கவிகளில் சிலவற்றை ஈண்டுக் கூறுவோம்:

கல்விச் சமுத்திரம் கமலால யம்தமிழ்க்
கடன்மடை திறந்த வெள்ளம்
கற்பனை பிறப்பிடம் கலைமக ளிருப்பிடம்
கவிமாரி பொழியு மேகம்
சொல்விற் பனம்விளையு மதுரக் களஞ்சியம்
தோன்றுகற் பூர தீபம்
சுகிர்தகுண அவதானி சரவணப் பெருமாள்கை
தொட்டெழுதி விட்ட சனது

வில்லுக் கருச்சுனன் சொல்லுக் கரிச்சந்த்ரன்
வெற்றிக்கு விக்ர மார்க்கன்
வித்தைக் ககத்தியன் முத்துக் கறுப்பண
விலட்சண னெதிர்ந்து காண்க
மல்வெற்றி யாயென்று தாயென்று நீ யென்று
மாலென்று வேலோன் றுசா
மாவென்று காவென்று நாவொன்று பாவொன்று
வருகின்ற தருள்புரி கவே. (1)

மகபதி நராதிபதி நீதிபதி சேதுபதி
வாசற் ப்ரசண்ட வாக்கி
வடிதமிழ்ச் சோமசுந் தரகுரு சுவாமியடி
மைக்குமடி மைக்கு மடிமை
மயில்வாக னக்கடவுள் அருளிஞ லுபயசா
மரவிருது கொண்ட துய்யன்
மலையாள ராசனருள் தந்தபல் லக்குவெகு
மதிபெற்ற சார்வ பௌமன்
உலகெலா மிசைபெறு மந்தைசம ராஜனெப்போர்
ஏழடி யழைத்த நிபுணன்
உசிதனஜ ரதுநபா பிருகையால் தருவரிசை
ஒருகையால் வாங்கு கவிஞன்
உற்றசிவ கங்கையிற் கவுரிவல் லவராஜன்
உதவுவள நாடு பெற்றோன்
உயரிலங் கைப்பூமி ராஜசமு கத்தினிலும்
ஒருகோடி வரிசை கொண்டோன்
ககனமு தண்டபிர மாண்டமும் துதிகொளக்
கவிபுகழ் படைத்த வரவோன்
காசிமுத லாகரா மேசுரம் வரைக்கும்
கவித்துவச நாட்டு விஜயன்

கற்றுச்சொ லிக்கும்வரு தானப திக்குமிரு
கனகதண் டிகைகொ டுத்தோன்
கவிமதக் குஞ்சரம் சரவணப் பெருமாள்
கவிச்சக்ர வர்த்தி யோலை
புகழ்மேவு சிங்கைநகர் வளருங் குமாரவேல்
பூபனெதிர் கொண்டு காண்க
பொரவரா வேங்கைகை பாராத தாதுசெப்
புக்குளமை யாத சாமி
புவியிலிரு ளாவமம் மேய்ந்துவள ராமாடு
பொங்கிவே காத காணம்
பூண்டொடி படாஅந்த மறுபடா உடல்வழு
பொதிதந்து நீவா ழியே. (2)

ஏடாயி ரங்கோடி யெழுதாமல் தன்மனத்
தெழுதிப் படித்த விரகன்
இமசேது பரியந்தம் எதிரிலாக் கவிவீர
ராகவன் விடுக்கு மோலை
சேடாதி பன்சிரம் அசைத்திடும் புகழ்பெற்ற
திரிபதகை குலசே கரன்
தென்பாலை சேலம் புரந்துதா கந்தீர்த்த
செழியனெதிர் கொண்டு காண்க
பாடாத கந்தருவம் எறியாத கந்துகம்
பற்றிக்கொ லாத கோணம்
பறவாத கொக்கனற் பண்ணுத கோடைவெம்
படையிற்றொ டாத குந்தம்
சூடாத பாடலம் பூவாத மாவொடு
தொடுத்துமுடி யாத சடிலம்
சொன்னசொற் சொல்லாத கிள்ளையொன் றெங்கும்
துதிக்கவர விடல் வேண்டுமே. (3)

VI. கோவிந்த சதகம்

படிக்கரசனிருந்தாற் குடிக்கொரு சேதமில்லை

செடிக்கொரு வேங்கை குடிகொண்ட காடெனத் தோற்றிடுமே, அடிக்கொரு திப்புரோய் வாரைத் தூரத் தாமலிந்தால், படிக்கொரு மன்னனுண்டானல் உழுது பயிரிடுமோ, குடிக்கொரு சேமமுண்டோவச்சு தாநந்த கோவிந்தனே. (1)

கொட்டினுற்றேள் கொட்டாவிட்டால் பிள்ளைப்பூச்சி

கட்டாண்மை வேந்தர் பெருமையென் ணூதவன் கண்ணாடி, பட்டாலல் லாமல் வணங்கார் விடமுட் படாமற் பின்னர, தொட்டால் அதுபின்னைப் பூச்சியென் பார்முட் கருக்கெனவே, கொட்டாமல் தேனென்பரோ வச்சு தானந்த கோவிந்தனே. (2)

கொடுத்தாற் குறைவாராது

எடுத்தாலும் ஊறும் இறைத்தாலும் ஊறும் இடைநடுவே, மடித்தால் மறிபடு மோமணைக் கேணித் தண் ணீரதுபோல், அடுத்தாரை வாழ்விக்கச் செல்வ முண்டானவர் அன்புடனே, கொடுத்தாற் குறைவரு மோவச்சு தாநந்த கோவிந்தனே. (3)

குளத்துக்கு மழை குந்தாணிபோற் பெய்யுமோ ?

எந்தா யெனச்சென் றிரப்பவர்க் கீபவர் எவ்வளவு, தந்தாலும் போதும் இதுவொன் றைதெங்கும் சஞ் சரித்து, வந்தார் பருகும் குளத்துக்குப் பெய்யும் மழைத்துளிகள், குந்தாணி போற்பெய்யு மோவச்சு தாநந்த கோவிந்தனே. (4)

கோடாலிக் காம்பு குலத்துக்கு ஈனம்

பீடார் குலத்தினில் ஆகாத பிள்ளைதற் பெற்றெடுத்தோர், வாடாது வாடக் குலநாச மாக்கிடும் மற்றதுதான், தாடாண்மை யாளர்கைக் குள்வாய்த் தருக்குலம் சாயவெட்டும், கோடாலிக் காம்பல்ல வோ அச்சுதாநந்த கோவிந்தனே. (5)

பொல்லாக் குணத்துக்கு
நல்ல மருந்துண்டோ ?

உணத்தக்க நன்மருந் தாற்பிணிபோமென் றுலகிலுள்ளோர், பணத்துக்குக் கொண்டு பரிகரிப் பார்விடம் பாய்ந்துசெத்த, பிணத்துக்கும் பச்சிலை உண்டு புல்லோர்க்குப் பிறக்கும் பொல்லாக், குணத்துக்கு நன் மருந் தேதச்சு தாநந்த கோவிந்தனே. (6)

பொற்குடத்துக்குப் பொட்டழகேன் ?

சடத்துக் கழகென்பர் தான்கற்ற கல்வி தருமமதல்லால், இடத்தக்க பூடணம் தானணி யாவிடில் ஏசுவரோ, புடத்துட் படத்தங்கக் கட்டி யுருக்கிப் புதுக்கியபொற், குடத்துக்குப் பொட்டழ கேன்அச்சு தாநந்த கோவிந்தனே. (7)

கங்கையில் முழுகினுலும் காக்கை
அன்னமாகாது

ஒளித்தாலும் துர்க்குணம் போமோ குருவுபதேசமந்த்ரம், அளித்தாலும் புல்லர்நல் லோராவரோ சென்றடுத்தடுத்துக், களித்தா யிரந்தரம் காகம் முழுகிக்கங் காநதியில், குளித்தாலும் அன்னமொவ் வாதச்சுதாநந்த கோவிந்தனே. (8)

கொடிக்குக் காய் கனமா ?

அடுத்தமு தூட்டி வளர்த்திடும் தாய்தன் அக மெலிவாய், மிடுக்கிடு னுட்பெற்ற பிள்ளைக ளைக்கை விடநினையாள், பொடித்தெழும் பிஞ்சு திரளாயும் பாரம் பொறுக்கும்படி, கொடிக்கென்ன காய்கனமோ அச்சு தாநந்த கோவிந்தனே. (9)

குடியிருக்கும் வீட்டில் கொள்ளி வைத்தாற்போல

நள்ளிருட் போதில் விளக்கிட்ட தாம்நல் லவ ரிருந்தால், தெள்ளிய சீர்பெறும் வீட்டிக் கழகென்பர் நிம்பர்வந்தால், கள்ளி விடாமல் குடிவைத்துக் கொள் ளில் மதிலத்தில், கொள்ளிவைத் தங்கொண்ட தாம் அச்சுதாநந்த கோவிந்தனே. (10)

VII. தனிப் பாடல்கள்

காளமேகப் புலவர்

வைக்கோலுக்கும் யானைக்கும் சிலேடை

வாரிக் களத்தடிக்கும் வந்தபின்பு கோட்டைபுகும்
போரிற் சிறந்து பொலிவாகும் — சீருற்ற
செக்கோல மேனித் திருமலைரா யன்வரையில்
வைக்கோலும் மால்யானை யாம். (1)

மீனுக்கும் பேனுக்கும் சிலேடை

மன்னீரி லேபிறக்கும் மற்றலையி லேமேயும்
பின்னீச்சிற் குத்தும் பெருமையால்—சொன்னேன்கேள்
தேனுந்து சோலைத் திருமலைரா யன்வரையில்
மீனும்பே னும்சரியா மே. (2)

முக்கால் முதல் கீழரைவரையும் உள்ள
எண்கள் வரப்பாடியது

முக்காலுக் கேகாமுன் முன்னரையில் வீழாமுன்
அக்கா லரைக்கால்கண் டஞ்சாமுன் — விக்கி
இருமாமுன் மாகாணிக் கேகாமுன் கச்சி
ஒருமாவின் கீழரையின் றோது. (3)

தண்ணீர் கலந்த மோரைக் குறித்துப் பாடியது

காரென்று பேர்படைத்தாய் ககனத் துறும்போது, நீரென்று பேர்படைத்தாய் நெடுந்தரையில் வந்ததற் பின், வாரொன்று பூங்குழலார் ஆச்சியர்கை வந்ததற் பின், மோரென்று பேர்படைத்தாய் முப்பேரும் பெற்றாயே. (4)

படிக்காசுத் தம்பிரான்

சீதக்காதி என்னும் சீமான்மீது
பாடியவை

ஓர்தட்டி லேபொன்னும் ஓர்தட்டி லேநெல்லும் ஒக்கவிற்கும், கார்தட் டியபஞ்ச காலத்தி லேதங்கள் காரியப்பேர், ஆர்தட்டி னுந்தட்டு வாராம லேயன்ன தானத்துக்கு, மார்தட் டியதுரை மால்சீதக் காதி வரோதயனே. (5)

ஈயாத புல்லர் இருந்தென்ன போயென்ன எட் டிமரம், காயா திருந்தென்ன காய்த்துப் பயனென்ன கைவிரித்துப், போயா சகமென் றிரப்போர்க்குச் செம் பொன் பிடிபிடியாய், ஓயாமல் ஈபவன் வேள் சீதக் காதி ஒருவனுமே. (6)

பொல்லாத மூர்க்கருக் கெத்தனை தான்புத்தி போதிக்கினும், நல்லோர்க்குண் டான குணம்வரு மோ நளிர் காலத்திலே, கல்லாப் புடவை குளிர்தாங்குமோ பெருஞ் சந்தையினில், செல்லாப் பணஞ்செல்லுமோ தில்லை வாழுஞ் சிதம்பரனே. (7)

கேட்பாரற்ற இக்காலத்து எவரும் புலவரெனத்
திரிதல் கூடுமெனல்

குட்டுதற்கோ பிள்ளைப்பாண் டியனிங் கில்லை
குறும்பியளவாக் காதைக் குடைந்து தோண்டி
எட்டினமட் டறுப்பதற்கோ வில்லி யில்லை
இரண்டொன்றாய் முடிந்துதலை யிறங்கப் போட்டு
வெட்டுதற்கோ கவியொட்டக் கூத்த னில்லை
விளையாட்டாக் கவிதைதனை விரைந்து பாடித்
தெட்டுதற்கோ அறிவில்லாத் துரைக ளுண்டு
தேசமெங்கும் புலவரெனத் திரிய லாமே. (8)

இராமசந்திர கவிராயர்

ஏதிலே வறியவர்க்கும் இனியகவிப் புலவருக்கும் இரங்கி யீகைப், போதிலே தனங்கொடுக்குந் தஞ்சைநகர்க் குருவப்ப பூபனெற்கும், கோதிலே கிடந்துழலும் பலிடத்திற் சென்றுதமிழ் கூறா வண்ணம், காதிலே யொட்டுவிட்டுக் காடையின்மேல் நற்கடுக்கன் தானிட் டானே. (9)

கல்லாத வொருவனைநான் கற்றா யென்றேன்
காடெறியும் மறவனைநா டாள்வா யென்றேன்
பொல்லாத வொருவனைநான் நல்லா யென்றேன்
போர்முகத்தை யறியானைப் புலியே றென்றேன்

மல்லாரும் புயமென்றேன் சூம்பற் றேளை
வழங்காத கையனை நான் வள்ள லென்றேன்
இல்லாத சொன்னேனுக் கில்லை யென்றான்
யானுமென்றன் குற்றத்தா லேகின் றேனே. (10)

வஞ்சகர்பால் நடந்தலைந்த காலிற் புண்ணும்
வாசல்தொறும் முட்டுண்ட தலையிற் புண்ணும்
செஞ்சொல்லை நினைந்துருகு நெஞ்சிற் புண்ணும்
தீருமென்றே சங்கரன்பாற் சேர்ந்தே னப்பா
கொஞ்சமல்ல பிரமபடியின் புண்ணும் வேடன்
கொடுங்காலா லுதைத்தபுண்ணும் கோவ மாகப்
பஞ்சவரி லொருவன்வில்லா லடித்த புண்ணும்
பாரென்றே காட்டிநின்றான் பரமன் றானே. (11)

புல்லுக் கட்டும் விறகுஞ் சுமந்தபேர்
பூர்வ காலத்துப் புண்ய வசத்தினால்
நெல்லுக் கட்டும் பணக்கட்டும் கண்டபின்
நீலக் கல்லிற் கடுக்கனும் போடுவார்
சொல்லுக் கட்டுடை புலவரைக் கண்டக்கால்
தூறிப் பாய்ந்து கதவை யடைத்தெதிர்
மல்லுக் கட்டும் மடையரைப் பாடவோ
மலயச் சாரலில் வாழ்பெரி யம்மையே. (12)

அந்தகக்கவி வீரராகவ முதலியார்

கட்டுச்சோற்றைப் பறிகொடுத்துப் பாடியது

சீராடை யற்ற வயிரவன் வாகனம் சேரவந்து, பாராரு நான்முகன் வாகனந் தன்னைமுன் பற்றிக் கௌவி, நாரா யணனுயர் வாகன மாயிற்று நம்மை முகம், பாரான்மை வாகனன் வந்தே வயிற்றினிற் பற்றினனே. (13)

VIII. குறள்

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு. (1)

விசும்பின் துளிவீழின் அல்லான்மற் றாங்கே
பசும்புல் தலைகாண் பரிது. (2)

செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார். (3)

சிறப்பீனும் செல்வமும் ஈனும் அறத்தினூஉங்
காக்கம் எவனோ உயிர்க்கு. (4)

துறந்தார்க்குந் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வா னென்பான் துணை. (5)

தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை. (6)

தம்பொருள் என்பதம் மக்கள் அவர்பொருள்
தந்தம் வினையான் வரும். (7)

அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு. (8)

விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று. (9)

இனிய வுளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று. (10)

நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது நன்று. (11)

சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க் கணி. (12)

அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும். (13)

யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு. (14)

ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும். (15)

ஒறுத்தார்க் கொருநாளை யின்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ். (16)

கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்
உண்பதூஉம் இன்றிக் கெடும். (17)

அறங்கூறா னல்ல செயினும் ஒருவன்
புறங்கூறான் என்றல் இனிது. (18)

பயனில்சொற் பாராட்டு வானை மகனெனல்
மக்கட் பதடி யெனல். (19)

தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும். (20)

கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்
டென்னாற்றுங் கொல்லோ உலகு. (21)

நல்லா றெனினுங் கொளல்தீது மேலுலகம்
இல்லெனினும் ஈதலே நன்று. (22)

ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்ல
தூதிய மில்லை உயிர்க்கு. (23)

அருட்செல்வம் செல்வத்துட் செல்வம் பொருட்செல்வம்
பூரியார் கண்ணும் உள. (24)

தன்னூன் பெருக்கற்குத் தான்பிறிதூன் உண்பான்
எங்ஙனம் ஆளும் அருள். (25)

உள்ளத்தால் உள்ளலும் தீதே பிறன்பொருளைக்
கள்ளத்தாற் கள்வேம் எனல். (26)

IX. குணவான் தன் குற்றம் உணர்வான்

நாட்டினில் உயிர்கட் கெல்லாம்
நலம்பல விளைப்ப தென்னும்
நாட்டமே நாளுங் கொண்டு
தன்னலம் நயக்க கில்லான்
தேட்டமே பயனா எண்ணித்
திறைபல விதிப்ப தோரான்
நீட்டிய புகழின் வாழ்வோன்
நிறைகுணன் என்னும் வேந்தன். (1)

கல்வியே உயர்ச்சிக் கெல்லாம்
காரண மாதல் கண்டான்
நல்விவே கத்தால் தன்னோர்
நாட்டினர் நன்மை யெய்த
சொல்லிய இயல்நி றைந்தோர்
தூய்மையர் துலங்கு சீர்த்தி
எல்லையில் கல்விச் சாலை
எங்கணும் இயற்று வித்தான். (2)

மன்னிய அறிவின் நோயாம்
மடமையை மாற்றி யாங்கே
பின்னிய உடலுக் காகும்
பிணியையும் பெயர்க்க எண்ணி
உன்னிய குறிப்பான் நோயின்
உறுநிலை உணருங் கோளார்
துன்னிய மருத்து வர்க்கும்
தொழின்முறை வகுத்திட் டானல். (3)

சாதியாற் பேத மில்லான்
சமயத்தான் மாறு கொள்ளான்
மாதிர மதிக்கும் செல்வ
மாட்சியும் மனத்து ளெண்ணுன்
ஓதிய கல்வி தன்னுல்
ஒழுக்கத்தால் உயரும் மாந்தர்
நீதியால் அடைதற் குற்ற
நிலையெலாம் உதவு நீரான். (4)

உரிமையை உணர்ந்து நாடின்
உவப்புடன் உதவும் வேந்தன்
அரியதம் கடமை தம்மை
ஆற்றிடா தகன்று ளோரைப்
பரிவுடன் உணர்த்தி அன்னுர்
பதம்பெற ஒறுக்க மாருன்
அரிவையர் தமக்கும் ஆன்ற
அறிவினை யளிக்கும் அன்னுன். (5)

பரிசனர் திறமும் அன்னுர்
பான்மையும் பார்க்க எண்ணித்
தெரியகில் லாமல் ஆங்கண்
சென்றவர் செய்தி காண்பான்

விரியுறுந் திறத்த பற்பல்
　　வினையினை யியற்று வார்தம்
பரிபவம் அனைத்துங் கேட்டுப்
　　பரிந்துடன் தீர்க்க வல்லான். (6)

உடலுறும் உறுப்பிங் கெல்லாம்
　　உஞற்றிடும் பயனைக் கொண்டே
அடலுற அவற்றைக் காக்கும்
　　அருந்துணை வயிறு கொண்ட
மிடலுறும் அடைவே வேந்தன்
　　மேவுறும் அடைவ தென்னக்
கடலுறுங் கருணை வள்ளல்
　　கருதியே காவல் செய்தான். (7)

மன்பதை உளத்தி லென்றும்
　　மகிழ்வுற விளங்கு மன்னன்
அன்புற வைக லொன்றில்
　　அருஞ்சிறைச் சாலை யுற்றுத்
துன்புறு மாந்தர் கொண்ட
　　துயரினை நீக்க எண்ணி
மின்பெறு சகட மூர்ந்தே
　　வியப்புற அடைந்தான் ஆங்கண். (8)

அடைதலும் காவற் கூடத்
　　ததிபர்கள் முறையிற் போந்து
அடைவினின் வணங்கி நின்றே
　　அரையனை வாழ்த்தி அன்னான்
புடையுறத் தொடர்ந்து சென்றார்
　　புரவலன் புகுந்தாங் காங்கே
நடையுறு கரும மெல்லாம்
　　நவின்றிட உணர்ந்து கொண்டான். (9)

உற்றவச் சிறைக்கோட் டத்தே
ஒருசிறை நண்ணுங் காலே
பற்றிய கால்யாப் போடே
பணிபுரி மாந்தர் சில்லோர்
கொற்றவன் வரவு கண்டு
குலவிய மகிழ்ச்சி யாலே
மற்றவன் மலர டிக்கண்
வணங்கினர் நிற்பக் கண்டான். (10)

காண்டலும் அவரை அண்மிக்
கனிவொடுஞ் சிலமொ ழிந்து
ஈண்டுநீர் வருதற் கான
இழிதொழில் யாது செய்தீர்
வேண்டுவ நுமக்கி யாவை
விளம்புக எனமுன் நின்றோன்
ஆண்டகை அடிவ ணங்கி
அறைந்திட லுற்று னன்றே. (11)

(வேறு)

அறம்வளர்க்கும் பெருந்தகையே
அண்ணலே நாயடியேன்
மறமொன்றும் செய்தறியேன்
மனத்தாலும் நினைத்தறியேன்
புறமொன்று காவலர்கள்
பொய்க்கரிகள் பலகாட்டித்
திறமொன்றப் புரிந்ததனுற்
சேர்ந்தேனிச் சிறைக்களமே. (12)

எனக்கேட்ட இறையவனும்
இரண்டாவான் றனைநோக்கி
நினக்கான குறையாது
நிகழ்த்திடா யெனக்கேட்ப
மனக்கவலை மாற்றவரு
மாண்புமிகு மன்னவனே
எனக்கான முறைப்பாட்டை
என்னென்பேன் என்னென்பேன். (13)

பாவமோ ரிடமாயின்
பழியாவ தோரிடமா
ஆவதெனும் அறமொழியை
அடியேன்பால் அறிகின்றேன்
தாவுபல தீமைபுரி
சழக்கரையான் சார்ந்ததனால்
காவலுறுஞ் சிறைக்கோட்டம்
கண்ணுற்றேன் எனமொழிந்தான். (14)

மொழிந்தமைகேட் டெழில்வேந்தன்
மூன்றாவான் றனைமுன்னி
அழிந்தமனத் தொடுநின்றாய்
அறைமதிநின் குறையென்ன
பொழிந்தகரு ணைக்கிறையே
புண்ணியநற் புரவலனே
இழிந்தவினை இதுகாறும்
ஏதொன்றும் இயற்றறியேன். (15)

எந்தாயிந் நீதிபதிக்
கென்றனக்கை யியற்றியதாம்
நந்தாத குறையொன்றை
நாணாளும் மனத்துன்னிச்

சிந்தாத கடுஞ்சினமே
சிறியனேன் வயிற்கொண்டு
முந்தாகக் காட்டியதால்
முன்னினேன் சிறைக்களமே (16)

என்றுகூ றிடக்கேட்டவ்
விறையவனும் சிரமசைத்து
நன்றுநின் செய்தியென
நாலாவான் தனைநண்ணிக்
கன்றியநின் கதையாது
கழறிடா யெனப்புகல
ஒன்றுமுரைத் திடற்கின்றி
ஒருசிறிது நினைத்ததற்பின். (17)

சொல்லுமா றறியாது
சோர்வுற்றேன் அதுகொண்டு
வல்லவர்கள் என்சொல்லில்
வாய்மையிலை யெனவகுத்தார்
மல்லுயர்திண் டோள்வேந்தே
மற்றதனாற் குற்றமுற்றுச்
செல்லலுற அடைந்திட்டேன்
சிறைக்கோட்டம் யானென்றான். (18)

கடையாக நின்றானைக்
காவலனும் கண்ணுற்றே
அடைவாகத் தலைதாழ்த்திங்
ககங்குழைந்து முகம்புலர்ந்து
விடையேதுங் கூறாது
விழுமமுற நிற்கின்றாய்
இடையாது நின்மாற்றம்
இயம்புகென்றான் இறையோனே. (19)

(வேறு)

அன்பினால் உலகாளும் ஆண்டவனே
கருணையுரு வான மேகமே
வன்பினால் வாதிடுவோர் வழியிற்செல்
என்னெஞ்சே வருந்துகின்ற
துன்பினால் துயர்கின்றோர் தன்னெஞ்சம்
உணராக் குற்றம் படைத்தோர்
இன்பினால் விளைகின்றீர் என்செய்வேன்
என்னென்றிக் கேட்ட தேவே. (20)

வறுமையெனும் படையான் வாட்டிடவே
நிலைகுலைந்து மாறு செய்யும்
செருமாறோர் அல்லலுக் கொடுமையிடம்
தலைக்கேறிக் கிளைக்க பாய்ச்சி
அறிவிழந்து சிறுமைக்கும் ஆசைக்கு
கடவுட்பரி படைக் கலனாய்
தெரிவிழந்து திரிகின்ற கண்கெட்ட
மாடென்ன நிற்ப தேனோ. (21)

தொழிலொன்று கிடைத்திருப்பின் கொளுகொட்டா
அலைக்கொண்டேன் சொல்லில் போக்கில்
பழியொன்று மில்லாத பான்மையினைப்
பெற்றிருப்பேன் பசிநோய் போக்க
வழியொன்றுங் காணேனே பிறர்பொருளை
மனமார வவ்விடற்கே
விழிகொண்டே செய்திட்டேன் அதுகண்ட
காவலர்கள் விழித்தா ரன்றே. (22)

பற்றியே கொடு சென்றார் நீதிபதி
முன்நிறுவிப் பகர்ந்தார் யாவும்
உற்றவா றுய்த்துணர்ந்து கண்டார்கள்
கண்டவா றுரைப்பக் கேட்டே
குற்றமே கண்டவர்தாம் கடுங்காவல்
தண்டனையாக் குறித்தா ரெற்கே
கொற்றவர்தங் கோமானே நற்றமிலேன்
நின்னன்பு கூடு தற்கே. (23)

விதித்தநாள் வருந்தனையும் இக்காவற்
கடுஞ்சிறையை வீடாக் கொண்டு
பதித்தமுறை வழுவாமற் பணிசெய்து
கழித்திடலே பான்மை யாகும்
மதித்தஅறி வினையுடையார் செய்தபிழை
சிறிதெனினும் மகத்தாம் அன்றே
உதித்தமதிக் குற்றகறை உலகெங்கும்
குறைகூற வுற்ற தாலே. (24)

(வேறு)

என்று கூறி இருந்தவன் நெஞ்சமே
கன்றி நின்ற கருத்தினைக் காவலன்
ஒன்றி யுள்ளத் துவகைமிக் கோங்குற
நன்றி யெண்ணி நவிறலுற் றனரோ. (25)

குற்ற முற்றவன் என்று குறித்தநீ
குற்ற மோர்சிறி தின்றிக் குலவுமிவ்
வுத்த மத்துறை யாருடன் ஒன்றியிங்
குற்று வாழ்தல் ஒருமுறை யாகுமோ. (26)

இன்னு மோர்கணம் இங்ஙனி ராமலே
மன்னு மிச்சிறை வாயிலே விட்டுநீ
என்னு டைச்சவைக் கேகி இருக்கென
மின்னு மாமுடி மன்னன் விளம்பினன். (27)

உண்மைக் கொன்றும் ஒருகுறை யில்லென
மண்ணி லெங்கும் வயங்கிடும் வாய்மையை
எண்ணி னேமிலே இத்துயர் எய்தினேம்
அண்ண லுள்ளம் அறிந்தில மேயென. (28)

ஏங்கி நின்றவந் நால்வரை ஏந்தலும்
தீங்கி லாமல் திகழ்தரும் தூயரே
நீங்கள் நால்வரும் நேயமொ டொன்றியே
ஈங்கண் நன்னெறி எய்த இருக்கவே. (29)

என்னக் கூறி இறைமகன் ஏகினன்
தன்ன மும்பிழை இன்றெனச் சாற்றிய
அன்ன மாந்தர்தம் அல்வழிக் கூற்றினை
உன்னி யுன்னி உருகிநின் றாரரோ. (30)

(வேறு)

ஆயிடை அகன்ற மன்னன்
அமைச்சரை அருக ழைத்தே
மாயிரு ஞாலம் காக்கும்
மரபினை அமைய நோக்கின்
காய்தரு வறுமை நோயைக்
காய்தரு வழிகள் முற்றும்
ஆய்தரு முயற்சி யேமுன்
ஆவதா அறிந்தேன் இன்றே. (31)

களவுபொய் முதலாம் தீய
காரியந் தமக்கு மூலம்
வளமெலாம் ஒழிய எய்தும்
வறுமையே ஆதல் கண்டேன்
இளமையிற் கல்வி யோடும்
இருந்தொழிற் கல்வி நல்கின்
அளவிலாக் குற்ற மெல்லாம்
அகன்றிடும் நாட்டி னின்றே. (32)

ஆதலின் நந்தம் நாட்டில்
அருந்தொழிற் சாலை பல்கப்
போதிய முறைகள் யாவும்
புரிந்திவண் வறுமை யென்னும்
தீதுசேர் பகைவன் என்றும்
சிரத்தினைக் காட்டா வண்ணம்
ஆதர வற்றோர்க் கெல்லாம்
ஆதாம் பெருகச் செய்யே. (33)

செய்கெனச் செம்மல் கூறச்
செவ்விய அமைச்சர் சூழ்ந்து
மெய்யுறப் புரியும் பற்பல்
விதமுறுந் தொழில்கள் யாவும்
ஐயுற வின்றி யாரும்
அறிதரு முறைவ குத்தார்
உய்வழி கண்ட மாந்தர்
உயர்நிலை அடைந்தார் மன்னோ. (34)

கல்வியே அறிவை யாக்கக்
கைத்தொழில் வறுமை நீங்கிப்
புல்லிய உவகை யூக்கப்
பொருந்திய மாந்தர் யாரும்

நல்லியல் வாய்ந் திருப்ப
நரபதி கண்டிங் கெல்லாம்
வல்லவன் அருளை வாழ்த்தி
வளம்பெற வாழ்ந் தா னன்றே (35)

X. தாயுமானவர் பாடல்

ஆசைக்கோ ரளவில்லை அகிலமெல் லாங்கட்டி
ஆளினும் கடல்மீ திலே
ஆணைசெல வேநினைவர் அளகேச னிகராக
அம்பொன்மிக வைத்த பேரும்
நேசித்து ரசவாத வித்தைக் கலைந்திடுவர்
நெடுநா ளிருந்த பேரும்
நிலையாக வேயினுங் காயகற் பந்தேடி
நெஞ்சுபுண் ணாவ ரெல்லாம்
யோசிக்கும் வேளையிற் பசிதீர வுண்பதும்
உறங்குவது மாக முடியும்
உள்ளதே போதுநான் நானெனக் குளறியே
ஒன்றுவிட் டொன்று பற்றிப்
பாசக் கடற்குள்ளே வீழாமல் மனதற்ற
பரிசுத்த நிலையை அருள்வாய்
பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூர ணானந் தமே. (1)

கல்லாத பேர்களே நல்லவர்கள் நல்லவர்கள்
கற்றும்அறி வில்லா தஎன்
கன்மத்தை யென்சொல்வேன் மதியையென்
கைவல்ய ஞான நீதி [சொல்லுவேன்

நல்லோ ருரைக்கிலோ கன்மமுக் கியமென்று
நாட்டுவேன் கன்ம மொருவன்
நாட்டினு லோபழைய ஞானமுக் கியமென்று
நவிலுவேன் வடமொழி யிலே
வல்லா னொருத்தன்வர வுந்திராவி டத்திலே
வந்ததா விவக ரிப்பேன்
வல்லதமி ழறிஞர்வரின் அங்ஙனே வடமொழியின்
வசனங்கள் சிறிது புகல்வேன்
வெல்லாம லெவரையும் மருட்டிவிட வகைவந்த
வித்தையென் முத்தி தருமோ,
வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலைபெற்ற
வித்தகச் சித்தர் கணமே. (2)

கல்லேனு மையவொரு காலத்தி லுருகுமென்
கன்னெஞ்சம் உருக விலையே
கருணைக் கிணங்காத வன்மையையும் நான்முகன்
கற்பிக்க வொருகட வுளோ
வல்லான் வகுத்ததே வாய்க்கா லெனும்பெரு
வழக்குக் கிழுக்கு முண்டோ
வானமாய் நின்றின்ப மழையா யிறங்கியெனை
வாழ்விப்ப துன்ப ரங்காண்
பொல்லாத சேயெனில் தாய்தள்ளல் நீதமோ
புகலிடம் பிறிது முண்டோ
பொய்வார்த்தை சொல்லிலோ திருவருட் கயலு
புன்மையே னவ னந்தோ [மாய்ப்
சொல்லான் முழக்கிலோ சுகமில்லை மௌனியாய்ச்
சும்மா இருக்க அருளாய்
சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரஞ்
சோதியே சுகவா ரியே (3)

கந்துக மதக்கரியை வசமா நடத்தலாம்
　　கரடிவெம் புலிவா யையும்
　கட்டலாம் ஒருசிங்க முதுகின்மேற் கொள்ளலாம்
　　கட்செவி யெடுத்தாட் டலாம்
வெந்தழலின் இரசத்தை வைத்தைந்து லோகத்தையும்
　　வேதித்து விற்றுண் ணலாம்
　வேறொருவர் காணமல் உலகத்து லாவலாம்
　　விண்ணவரை யேவல் கொளலாம்
சந்ததமும் இளமையொ டிருக்கலாம் மற்றொரு
　　சரீரத்தி னும்புகுத லாம்
　சலமேல் நடக்கலாம் கனல்மே லிருக்கலாம்
　　தன்னிகரில் சித்தி பெறலாம்
சிந்தையை யடக்கியே சும்மா இருக்கின்ற
　　திறமரிது சத்தாகியென்
　சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே
　　தேசோ மயானந் தமே. (4)

நன்றறியேன் தீதறியேன் நானென்று நின்றவனை
என்றறியேன் நானெனை என்னே பராபரமே. (5)

இன்றுபுதி தன்றே எளியேன் படுந்துயரம்
ஒன்றுமறி யாயோ உரையாய் பராபரமே. (7)

எத்தனைநாள் சன்மமெடுத் தெத்தனைநான் பட்டதுயர்
அத்தனையும் நீயறிந்த தன்றோ பராபரமே. (7)

இந்நாட் சற்றும் இரங்கிலையேற் காலன்வரும்
அந்நாட் காக்கவல்லார் ஆர்காண் பராபரமே. (8)

பரமுனக் கென்றெண்ணும் பழக்கமே மாறா
வரமெனக்குத் தந்தருளென் வாழ்வே பராபரமே. (9)

எவ்வுயிரு மென்னுயிர்போல் எண்ணி யிரங்கவும்நின்
தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே. (10)

வித்தின்றி யாதும் விளைவதுண்டோ நின்னருளாம்
சித்தின்றி யாங்களுண்டோ செப்பாய் பராபரமே. (11)

எத்தன்மைக் குற்றம் இயற்றிடினுந் தாய்பொறுக்கும்
அத்தன்மை நின்னருளும் அன்றோ பராபரமே. (12)

கல்லாதே னானுங் கற்றுணர்ந்த மெய்யடியார்
சொல்லாலே நின்னைத் தொடர்ந்தேன் பராபரமே. (13)

ஆங்கார மென்னுமத யானைவா யிற்கரும்பாய்
ஏங்காமல் எந்தையருள் எய்துநா ளெந்நாளோ. (14)

சித்தமெனும் பௌவத் திரைக்கடலில் வாழ்துரும்பாய்
நித்தமலை யாதருளி நிற்குநா ளெந்நாளோ. (15)

பொய்க்காட்சி யான புவனத்தை விட்டருளாம்
மெய்க்காட்சி யாம்புவன மேவுநா ளெந்நாளோ. (16)

சாட்டையிலாப் பம்பரம்போ லாடுஞ் சகசால
நாட்டமற வெந்தைசுத்த ஞானவெளி காண்பேனோ. ()

XI. திருப்புகழ்

வஞ்சக லோப மூடர் தம்பொரு ளூர்கள்தேடி
மஞ்சரி கோவை தூது . பலபாவின்
வண்புகழ் வாரி காரி யென்றிசை வாது கூறி
வந்தியர் போல வீணில் அழியாதே

செஞ்சர ணாத கீத கிண்கிணி நீப மாலை
திண்டிறல் வேல்ம யூர முகமாறும்
செந்தமிழ் நாளு மோதி உய்ந்திட ஞான மூறு
செங்கனி வாயி லோர்சொல் அருள்வாயே

பஞ்சவ னீடு கூனு மொன்றிடு தாப மோடு
பைந்தமிழ் வாது கூறும் அமண்மூகர்
பண்பறு பீலி யோடு வெங்கழு வேற வோது
பண்டித ஞான நீறு தருவோனே

குஞ்சர சாலே மேவு பைம்புன மீது லாவு
குன்றவர் சாதி கூடி வெறியாடி
கும்பிடு நாடு வாழ்வு தந்தவ ரோடு வீறு
குன்றுதொ றுடன் மேவு பெருமாளே. (1)

எனைய டைந்த குட்ட வினைமி குந்த பித்தம்
எரிவ ழங்கு வெப்பு வலிபேசா
திகலி நின்ற லைக்கு முயல கன்று லைப்பொ
டிரும லின்றி ரைக்கு மிவைமேவா

மனைகள் பெண்டிர் மக்கள் தமைம றந்து சுற்ற
மதிம யங்கி விட்டு மடியாதே
மருவி வந்தெ னக்கு மரக தஞ்சி றக்கு
மயிலில் வந்து முத்தி தரவேணும்

நினைவ ணங்கு பத்த ரனைவ ருந்த ழைக்க
நினைவில் வந்து தித்த கதிர்வேலா
நிலைபெ றுந்தி ருத்த ணியில்வி ளங்கு சித்ர
நெடிய குன்றி லிற்கு முருகோனே

தினைவ ணங்க லுற்ற புனவி ளங்கு றத்தி
செயல றிந்த ணைத்த மணிமார்பா
திசைமு கன்றி கைக்க அசுர ரன்ற டைத்த
சிறைதி றந்து விட்ட பெருமாளே. (2)

XII. வைராக்கிய சதகம்

வாழி நெஞ்சமே சென்றிடேல் நின்றிதோர்
வார்த்தையெற் குரைசெய்வாய்
கீழி யாமியற் றுயர்தவத் திவ்வுடல்
கிடைத்ததன் றோமற்றீ
தூழி காலமிங் கிருக்குமோ நீயுமோர்ந்
துளையெனின் உளபோழ்தே
சூழு மேழ்பவம் துடைத்தல்செய் யாயிதென்
தொழுதரன் துணைத்தாளே.

வாழி நெஞ்சமே என்பது = (பகைவனைக் காரியங் கொள்வோன் அவனைத் தமது வயமாக்குதற் பொருட்டு அவனுக்கு இனிமை கூறுதல் போல்) நீ வாழக்கடவாய் நெஞ்சமே என்று விவேகங்கூற, (அதற்கு எண்ணில் காலம் உடலுமுயிரும் போலும், சேறுநீரும் போலும் உம்மோடு பிரிவின்றி யிருந்த என்னை இப்போது பிரித்து நின்று நீர் தோத்திரம் பண்ணியது என்னை? என்று மனங்கேட்ப),

சென்றிடேல் நின்று இது ஓர் வார்த்தை எற்கு உரை செய்வாய் என்பது—(அதற்கு நீ ஓர் கணப்போதாயினும் நில்லாது விஷயங்களிற் செல்லாநின்றனை; அங்ஙனஞ்) செல்லாது நின்று இஃதோர் சொல் எனக்குச்சொல்லுக (என்று விவேகங் கூற, அதற்கு யான் சொல்ல வேண்டிய சொல் என்னையுள? நீர் சொல்லுக, யான் கேட்கிறேன் என்று மனங்கூற),

கீழ் யாம் இயற்று உயர் தவத்து இவ்வுடல் கிடைத்தது அன்றோ என்பது — அதற்குக் கீழ்ப்போன அநந்த சனனங்களில் யாம் செய்திராநின்ற மேலான தபோபலத்தினாலன்றோ இந்த அரிதாகிய மானுடதேகம் கிடைத்தது (என்று விவேகங் கூற, அதற்கு ஈதுண்மையாமென்று மனஞ் சம்மதிப்ப, அதற்கு அங்ஙனம் அரிதாகக் கிடைத்த தேகத்தைப் பெற்றும் சீக்கிரத்திலே திருவடியை அடைதற்கு ஏதுபண்ணாமல் வீணாள் கழிப்பது என்னை? என்று விவேகங் கூற, அதற்கு

இந்தத் தேகம் பெற்ற நாம் இனித் திருவடியை அடையாது விடுகின்றோமோ, நீர் சிக்கிரம் பண்ணியது என்னை ? சிலநாட்களின் பின்னர் அதனை அடைகுதும் என்று மனங்கூற)

மற்று ஈறு வழி காலம் இங்கு இருக்குமோ என்பது — அதற்கு இத்தேகம் அற்பகாலம் இவ்விடத்து இருப்பதோ ? (இதற்கு அளவு கூறிய நூறாண்டுகளுள் இடையிடையே கணந்தோறும் அநித்திய மிருத்தலின் எந்தக்கணம் இருக்குமோ எந்தக்கணம் போமோ தெரியாதென்று விவேகங்கூற, அதற்கு அங்ஙனம் அநித்தியமாம் எனின், இதனையொழித்து இனி வருங்காயத்து அந்தத் திருவடியை அடைகுதுமென்று மனங்கூற, அதற்கு இனியோர் காயத்தின்கண் அதனை அடைகுதும் என்னின், பெறுதற்கரிய பிறவியென்றும், சிலநாளைகளின் பின்னர் அடைகுதுமென்னின், அறிதற்கரிய அவதியென்றும் விவேகங்கூற, அதற்கு நீர் இங்ஙனங் கூறியது உண்மை யென்று மனம் சம்மதிப்ப,)

நீயும் ஓர்ந்து உளை எனின் என்பது — (அதற்கு இந்தக் காயம் கிடைத்தற்கு அரிதென்பதையும், இதனது நிலையாமையினையும்) நீயும் விசாரித்து அறிந்தனையாயின்,

உளபோழ்தே சூழும் எழ் பவம் துடைத்தல் செய்யாய் இது என் தொழுது அரன் துணைத்தாளே என்பது — இக்காயம் இருக்கும் போதே சிவனது உபய பாதங்களையும் தொழுது எம்மை வளைந்துகொள்ளாநின்ற எழுவகைப் பிறவிகளையும் நீக்கிக்கொள்ளுதல் செய்யாய், இது என்னை (நின் கருத்து இருந்ததென்று விவேகங் கூறிற்று) என்றவாறு. மற்றென்பது அசைநிலை.

(உயர்தவத்து இவ்வுடல் கிடைத்த தென்பதற்கு உதாரணம்)

'எறியுங் கடலி னுகத்தொளையி னியாமைக் கழுத்துப் புகுவதுபோற், பொறிவெம் பிறவி யநேகத்தாற் புருடன் விவேகி யெனப்பிறந்து, முறியும் பிறவிப் பயனிலவிம் மோக மமையுஞ் செய்தொழிலாற், செறிவ தென்னே யிவற்றுனே தினங்க ளெல்லாஞ் சென்றிடுமால்,'

(ஊழிகால மிங்கிருக்குமோ என்பதற்கு உதாரணம்)

'உறங்குவது போலுஞ் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு.'

(பெறுதற்கரிய பிறவிக்கும் அறிதற்கரிய அவதிக்கும்
உதாரணம்)

'பெறுதற் கரிய பிறப்பீ திதன்போக்
கறிதற் கரிய வவதி — பிறிதொன்றை
நாடுதற்கு நேரமுண்டே நன்னெஞ்சே முக்திநெறி
கூடுதற்கல் லாது குறித்து.'

XIII. திருக்குறள்

தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும். (1)

தன்னைத்தான் காக்கின் சினங்காக்க காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம் (2)

இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல். (3)

தன்னுயிர் நீப்பினும் செய்யற்க தான்பிறி
தின்னுயிர் நீக்கும் வினை. (4)

நெருநல் உளனொருவன் இன்றில்லை யென்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு. (5)

பொருளல் லவற்றைப் பொருளென் றுணரும்
மருளானாம் மாணாப் பிறப்பு. (6)

அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தர்க் கியல்பு. (7)

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக. (8)

விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோ டேனை யவர். (9)

செல்வத்துட் செல்வஞ் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்து ளெல்லாம் தலை. (10)

அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர். (11)

தினைத்துணையாம் குற்றம் வரினும் பனைத்துணையாக்
கொள்வர் பழிநாணு வார். (12)

நிலத்தியல்பால் நீர்திரிந் தற்றாகும் மாந்தர்க்
கினத்தியல்ப தாகும் அறிவு. (13)

வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல். (14)

குணநாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல். (15)

காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும்
அன்னநீ ரார்க்கே யுள. (16)

வானோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்
கோனோக்கி வாழும் குடி. (17)

கண்ணிற் கணிகலம் கண்ணோட்டம் அஃதின்றேல்
புண்ணென் றுணரப் படும். (18)

முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும். (19)

கருவியும் காலமும் செய்கையும் செய்யும்
அருவினையும் மாண்ட தமைச்சு. (20)

பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள். (21)

உடுக்கை யிழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு. (22)

ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை
தான்சாந் துயரந் தரும். (23)

ஓதி யுணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தானடங்காப்
பேதையிற் பேதையா ரில். (24)

எரியாற் சுடப்படினும் உய்வுண்டாம் உய்யார்
பெரியார்ப் பிழைத்தொழுகு வார். (25)

மருந்தென வேண்டாவாம் யாக்கைக் கருந்திய
தற்றது போற்றி யுணின். (26)

நன்றறி வாரிற் கயவர் திருவுடையர்
நெஞ்சத் தவல மிலர். (27)

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர். (28)

XIV. நீதி சாத்திரம்

அவையடக்கம்

வேதச் சிலையா லிசாக் கிரமலராய்
போதப் பலவோர் பகுளியார் — சீதம்
தநிசோலி மாமலையைச் சார்தும் பிழையா
வருமல வெப்பகற்று மாறு. (1)

நூல்

வாய்மையே மெய்த்தாய் வயக்கறிவே மெதாளை
தூய்மைசெய் நல்லறமே சோதாமாம் — வைக்ககலை
நட்பாதுஞ் சாந்தமனை நற்புத் திரன்பொறையாம்
உட்கொள் ளிலையயா றறவு. (2)

மானம் படவரின் வாழா துயிர்நீத்தின்
கிளம் படாதுயர்வை வெட்குகவே — மானமது
பட்டால் வசைமதியம் பாலுவள ஞான்றுமுயிர்
விட்டாலும் சேர்த்தி விடா. (3)

அந்தணருக் காமடசில் அவிலுக்கின் கெப்தும்புல்
சிந்தைவலி மிக்க திறல்வீரற் — குந்தமரில்
ஒன்னார் தலைச்செருதல் உற்றகொழு நற்பெருதல்
மின்னாருக் கேப்தும் விருப்பு. (4)

பிறர்தாரம் தன்னையே பெற்றதா யாகப்
பிறர்பொருளை ஓடாகப் பேணிப் — பொறைமேவும்
வைப்பிலுயிர் யாவுந்தன் மன்னுயிரா வுற்றோனே
ஒப்பிலுயர் ஞானி யுணர். (5)

யாக்கை யிளமை அநித்தியமே அஃதுறாஉம்
வாழ்க்கை பொருவளனும் மாறுமே — நீக்கமறும்
சாவோ தலைநிற்குந் தன்மைத் துயிர்வாழ்வீர்
ஆவோ புரிவீர் அறம். (6)

உடலில் தலைதலையாம் ஓங்குறுப்பிற் கண்ணுர்
விடலில் சுவையிலுவர் மேவும் — கடலிற்
பெரிதாகுங் கண்ணுய் பெருகுநன் னீரே
அரிதாமோர் ஆற்றுக் கறி. (7)

குடம்பல மண்ணொன்றும் கோப்பலபா லொன்றும்
உடல்மேல் அணிபல வொன்றும் — இடும்பொன்
அமையும்பன் னூல்கள் அறையுமிறை யொன்றே
சமயம் பலவினுக்குந் தான். (8)

வள்ளல்வறி யோனு வழங்கான் வளவனு
எள்ளும் பதகனுண் டேய்சதமாக் — கொள்கலியில்
நல்லோனுள் சின்னுளா நாயகனேர் ஊழியனுப்
புல்லோன் அரசாகிப் போம். (9)

கோளரி மூன்றுக் கொடுவரியைந் தாம்பாழா
நீளுற ஈன்றுமறத் தானிலவா — ஆளும்
அறத்தாலொன் றீன்றுமிங் காவோ பலவால்
திறத்த தறமே தெளி. (10)

பொருள்நசையோர்க் குற்றாரும் போதகுரு வில்லை
வருகாமிக் கில்வெட்கம் மானம் — தருகல்வி
தோய்வோர்க் கிலைசுகமும் துஞ்சல் பசித்தோர்க்
கேய்சுவையும் பக்குவமும் இல். (11)

தாதன் மனையாளைக் கையகறல் நல்லோர்நெஞ்
சேதம் படைநிற்றல் எய்துகடன் — கோதார்
குலத்தானைக் காண்டல் கொடுவறுமை யிற்சார்
நலத்தானும் கொல்லா நமன். (12)

பொத்தகங் கன்னி பொருளிவை மற்றோர்பால்
உற்றிடிற் போயினவென் றுன்னுகவே — பெற்றால்
கிழிந்தும் நலனற்றும் கேடுற் றரிதிற்
கழிந்தும் பெறவருமாம் காண். (13)

ஐயாண்டு காறும் அரையனை ஆண்டுகள்
ஐம்மூன்று காறும் அடியனை — எய்ததன்மேல்
மித்திரனைக் கொண்டிங்ஙன் மேவுக தாமீன்ற
புத்திரனை அன்பு புரிந்து. (14)

தன்குல வித்தை தருமூதி யந்தலையாம்
உன்ன வணிகம் உழவிடையாம் — மன்னிடத்துச்
சேவித்தலுங் கடையாம் தீயகள விற்சாவப்
பாவித்தலே நல்ல பண்பு. (15)

தன்னறிவா ராய்ச்சி தருமால் இதமதனின் [யர்பால்
மன்னறிவ னாராய்ச்சி மாண்புடைத்தாம் — அன்னி
ஆராய்ச்சி செறிநூற்றும் அந்தோ அறிவையர்பால்
ஆராய்ச்சி ஆக்கும் அழிவு. (16)

வல்லநா வானே வருமாற் பெருநிதியம்
நல்லநா வாற்கிளையும் நட்புமாம் — அல்லலுறும்
பொல்லாநா வானே பொருந்தவரும் நிந்தண்டம்
எல்லாமும் நாவானே ஆம். (17)

குலனும் எழிலும் குறியும் இளமை
நலனுங்கல் லாதவர்க்கென் னாகும் — இலகுமுடம்
நாற்ற மறுமுருக்க நாண்மலருக் கென்னேயோ
ஏற்ற மெழினலத்தா லே. (18)

நலனுறு வொன்னிளையாம் நாடப் புரப்போன்
இலகுதன் தந்தையா எண்ண — நிலமேல்
இதங்கருது வோன்றோழன் எய்துஞ் சுகத்தை
நிதங்கருது வாள்மனையாம் நேர். (19)

நஞ்சுண்டோன் தானே நசிப்பன் அறமுடையார்
விஞ்சும் பொருள்கவர்வோன் வேரோடுங் — துஞ்சலின்
நஞ்சுநஞ் சன்றால் நலமா ரவர்பொருளை
விஞ்சக் கொளலே விடம். (20)

வசன பாடங்கள்

1. கம்பரும் சோழனும்

செந்தமிழ் மொழியைச் செல்வர்கூட் டுண்ண
நந்தலில் நூல்கள் நலம்பெற வருளிய
நடுநீர் மையினெம் நரைமூ தாட்டி
தொடுநீர் வரைப்பிற் சோறுடைத் தென்னும்
தொல்சீர் பரவிய சோணாட் டின்கண்

செங்கோல் செலுத்திய குலோத்துங்க சோழன் என்பான் தன் ஆஸ்தான கவிச் சக்கரவர்த்தியோடு, வசந்த காலத்து, ஒரு நாள் மாலைப் போதில் உய்யான வனத்துள் உலவச் சென்றனன். அங்கே, தடாகத்தில் தாமரை மலர்கள் தளையவிழ்ந்து, மந்த மாருதம் அந்தமாய் வந்து உந்துந்தோறும் அசைந்து விளங்கின. அக் காட்சி, வாவியாகிய வனிதை தன் கஞ்சமலர்களாகிய கரங்களால் புவிக்கரசையுங் கவிக்கரசையும் பரிந்து அழைப்பதேபோல் தோன்றிற்று. பின்னர் அவ்விருவரும் குளக்கரையைக் குறுகி, ஆண்டிருந்ததோர் செய்குன்றின்மீது சிறக்க அமர்ந்து, தம்மைச் சூழ நோக்குதலும்,

திருவளர் சீர்த்திச் செய்யதா மரையில்
உருவளர் செங்கால் ஓதிமம் களிக்கக்
கூத்திய ரென்னக் குலமயில் நடிக்க
நீர்த்துறை தோறும் நேரிய திரைகள்
முழவொலி காட்ட முன்னுஞ் சுரும்பினம்
அடிகொள் சுதியை அன்புடன் கூட்ட
மாமரக் குயிலும் மன்னுஞ் சுகமும்
ஏமுற இன்னிசை இயைத்துப் பாட
இன்னன அமைந்த இயலிசை யோடும்
நன்னய நாடகம் நடப்பக் கண்டு

மனமகிழ் சிறந்த வள்ளியோ ரென்ன
இனமுறு வரிவளை எழில்முத் திறைப்ப
வானிமிர் தருக்கள் மலர்மழை பொழிய
காணமர் கடுக்கைபொன் கனிவின் அளிப்பக்

கன்றி, மன்னன் தன் னுடல்துலுங்க நெடிதுபொழுது நகைத்தனன். அது கண்ட கம்பர் இறைவனை நோக்கி, 'அரசே! நீவிர் இவ்வாறு நகுதற்கு நேர்ந்த காரணம் யாது? என்னே வியப்பு?' என, மன்னன், 'யான் வறிது நகைத்தேன் அல்லேன்; அதன் காரணத்தை என்னென்று உரைப்பேன்!' எனக் கூறி வாளா இருந்தனன். கம்பர் அதுகேட்டு, 'அதனை யாம் அறிதல் நேரிதன்றோ?' என, மன்னன், 'நாம் அறியக் கூடாததும் ஒன்றுளதோ?' என்று மற்றும் நகைத்து, 'ஐய, யானோர் மானிடனேயாயினும் இக்காட்டகத்தேயுள்ள உயிர்கள் அனைத்தும் எனக்கு அடக்கமேயன்றோ?' என்றான். அதுகேட்ட கம்பர், 'அதற்கோர் ஐயப்பாடும் உண்டோ? உலகம் உமக்கு அடக்கம் என்பதும், நீர் நமக்கு அடக்கம் என்பதும் அறியாதார் யாவர்?' என்றனர். சோழன் அச்சொல்லைக் கேட்கப் பொறானாய் முகம் வாடி, தன் மனத்தினுள்ளே, 'இவனென்ன நம்மைப் போல் மன்னர் மன்னனோ? செல்வத்திற் சிறந்த சீமானோ? நமது நிழலிலிருந்து நம்மிடத்து ஊதியம் பெற்றுப் பிழைக்கும் வாழ்க்கையுடையோனன்றோ, இவன் இவ்வாறு எண்ணுதல் எவ்வாறு ஏற்கும்? இவனது நெஞ்சத்துணிவும் பெருமிதமும் இருந்தவாறு என்னே!' என்றுன்னி, அச்சினத்தைப் புறத்தே காட்டாது ஒருவாறு தன் உள்ளத்திலடக்கி, விரைந்து அரண்மனையைக் குறுகி விசனத்துடன் தன் அமளியில் அமர்ந்திருந்தான். அப்-

போது [illegible] அரிசி [illegible] [illegible]
[illegible], [illegible] [illegible], '[illegible]' [illegible]
[illegible]. அரசன் அதனை உண்ணுது வாட்ட-
[illegible], அப்பொழுது [illegible] [illegible], '[illegible]
[illegible], [illegible] [illegible] [illegible] [illegible]-
[illegible]?' [illegible] [illegible], அரசன் [illegible]
[illegible] [illegible] [illegible] [illegible].

அதுகேட்ட அரசி, கம்பரது கல்வித்திறத்தை
[illegible], [illegible] [illegible] [illegible] [illegible].
அதுவன்ற [illegible] [illegible]. [illegible]
[illegible] [illegible] [illegible] [illegible], "[illegible]-
[illegible], [illegible] [illegible]?" [illegible]-
[illegible] [illegible] [illegible] [illegible] [illegible] அக் கம்பனை
[illegible] [illegible] [illegible] [illegible]
[illegible]; [illegible] [illegible] [illegible] [illegible]
[illegible] [illegible], [illegible] [illegible], [illegible] [illegible]
[illegible], [illegible] [illegible] [illegible] [illegible],
'கம்பர் [illegible] [illegible] [illegible]; [illegible]
[illegible] [illegible] [illegible] [illegible], [illegible] [illegible]
[illegible] [illegible] [illegible] [illegible], [illegible]
[illegible] [illegible] [illegible], [illegible]
[illegible], கம்பரது [illegible] [illegible].

இந்த இல்லைமுக, [illegible] [illegible]
[illegible] [illegible] [illegible], '[illegible]! [illegible] [illegible]
[illegible] [illegible]; [illegible] [illegible] [illegible] [illegible]
[illegible]' [illegible], [illegible] [illegible], அரசன்
[illegible] [illegible] [illegible]. அது கண்ட [illegible]
[illegible] [illegible], [illegible] [illegible] [illegible]

வெளியிட்டு, அகத்துக் கழைத்துச் சென்றனள். கம்பரது வரவைக் கண்ட பாங்கி இருக்கைவிட்டெழுந்து, எதிர் சென்று வணங்கி, முகமன் கூறி, உயரிய ஆசனத்தி லிருத்தி, பக்கலில் நின்று, 'புலவர் பெரும, அடியேன் விண்ணப்பம் ஒன்று: அதற்குத் தேவரீர் உடம்பட்டு அருளல் வேண்டும்' என்று வேண்டி நின்றனள். கம்பர் அவள் வேண்டுகோளுக்கு இரங்கி, 'அம்மையே, என்னால் இயன்றதொன்றை யாவர் வேண்டினும் மறுப்பதில்லையே, அரசர்க்கு அடிமைப்பட்ட யாம் ஒன்று வேண்டின் மறுப்பதும் உண்டோ? இல்லை, இல்லை. ஆதலின், எம்மாற் கூடியதொன்றைக் கொடுத்தற்கு மன மொழி மெய்களால் இசைகின்றேம்' என, பாங்கி தன் எண்ணம் பலித்த தென்று உள்ளங் களித்து, 'கவிஞர் பெரும, எனக்குத் தாங்கள் அடிமையென்று எழுதிக் கொடுத்தல்வேண்டும்' என்று வேண்டலும், கம்பர் இது மன்னன் சூழ்ச்சியால் நேர்ந்ததென்று உன்னி, நகைத்து, 'அம்மே இஃதோர் காரியமோ?' எனக் கூறி, ஓர் ஏட்டின்கண் எழுத்தாணி கொண்டு, தாசி பொன்னிக்குக் கம்பன் அடிமை என வரைந்து, அடியில் கையொப்பமிட்டு, நாள் குறித்து, அவள் கையிற் கொடுத்து, தம் சிவிகையிவர்ந்து வழிக்கொண்டு ஏகினர்.

பின்னர், அப் பாங்கி அந்த ஏட்டைக் கையில் ஏந்தி விரைந்து சென்று, வேந்தனைத் தொழுது, 'எம்பெருமானே, இது பாரும், இது பாரும், தமக்கு ஆட்பட்ட யான் அக் கம்பனை அடிமையாக்கிக்கொண்டேன்' என்று பெருமிதத்தோடுங் கூறி, அந்த ஏட்டை நீட்டினள். அரசன் அதனைப் பெற்று, பன்முறை நோக்கி, உள்ளம் பூரித்து, பெருமகிழ்வு கொண்டு,

"ஆஹா, இவளன்றே பெண்மணி! என் நோயை நொடிப்போதில் நீக்கினள். இப்பொழுது அக் கம்பனது உள்ளச் செருக்கும் கல்விப் பெருக்கும் என்னுகும்!" எனப் பலவாறு இழித்து உரைத்து இன்புற்றிருந்தான். மறுநாட் காலையில் அமைச்சர் முதலிய அனைவரும் அத்தாணி மண்டபத்தை அடைந்திருக்கவெனக் கட்டளையிட்டு, அரசனும் வந்து ஆண்டு அமர்ந்திருந்தான்.

கம்பரும் காலம் தாழ்த்தாது அரசன் அவைக்களத்தை யணுகிப் பார்த்திபன் பக்கலில் வீற்றிருக்க, மன்னன் அவ் வடிமைச் சீட்டைக் கையிற்கொண்டு கம்பருக்குக் காட்டி, 'இதனிலிட்டிருக்கும் கையொப்பம் நம்முடையதுதானே?' என, கம்பர், 'ஆம், ஆம்' என்றனர். பின்னர் அரசன் அதனைக் கற்றுச் சொல்லியின் கையிற் கொடுத்து, 'ஈண்டு உள்ளார் யாவர்க்குங் கேட்குமாறு இதனை உரத்துப் படிக்க' என, அவனும் அதனை அங்ஙனமே, '**தாசி பொன்னிக்குக் கம்பன் அடிமை**' என்று வாசித்து நின்றான். அதனைக்கேட்டு அங்கிருந்த அறிஞர் முதலாயினார், 'இஃதென்னே! இஃதென்னே!' என வியப்புற்று அசைவற்றிருந்தனர். அரசன் கம்பரை நோக்கி, 'தாசி பொன்னிக்குத் தாம் அடிமைதானே?' என்று வினவுதலும், 'ஆமாம், அதற்கோர் ஐயமுமுண்டோ?' என, பார்த்திபன் தன் உடல் குலுங்க நகைத்து, புவிச் சக்கரவர்த்திகளையும் அடிமைகளாகக் கொள்ள வல்ல நீவிர் இவ்வாறு ஒரு தாசிக்கு அடிமையாதல் சால இழிதகவன்றோ?' என்றான்.

கம்பர், 'இதனால் இழிவென்னை? பிறர் பொருளை 'வவ்வினோம் இல்லை; பொய்க்கரி உரைத்தோம் இல்லை;

யவர் கூறிய சொற்றொடரின் உட்கருத்தை உள்ளவாறு அறியாதார்க்கு யாவும் இழிவாகவே தோற்றும்' என, மன்னன், 'இதென்ன, புதுமையாகக் காண்கிறது! இதனுள் ஏதோ சுவைபடு பொருளும் இருத்தல் கூடும்' என்றுன்னி, 'அதன் உட்பொருள் யாது? உரைமின்' என்று வினவ, கம்பர் அதற்கு விடையாக, 'வேந்தே, "**தாசி பொன்னிக்குக் கம்பன் அடிமை**" என்னும் சொற்றொடரில் **தா**, **சி**, **பொன்னி**, **கு**, **கம்பன்**, **அடிமை** என ஆறு சொற்கள் அமைந்துள்ளன. இவற்றில் முதற் சொல் **தா** : இதன் இறுதியில் யகர ஒற்று கடைக்குறை விகாரம் பெற்றது. இரண்டாவது **சி** : இது ஸ்ரீ என்னும் வடமொழிச் சிதைவு, குறுக்கல் விகாரம் பெற்றது. மூன்றாவது **பொன்னி** : இது பொன் என்னும் பொருட்பெயர் இகர விகுதி பெற்றுப் பெண்பாலைக் காட்டுகிறது. நான்காவது **கு** : இது நான்காவதன் உருபு. ஐந்தாவது **கம்பன்** : இது கம்பு என்னும் பொருளடியாகப் பிறந்த ஆண்பாற் பெயர். ஆறாவது **அடிமை**, இது பண்புப் பெயர், ஆக இதன் பதப்பொருள், தாய் = எவ்வுலகிற்கும் தாயாகிய, சி = சீதேவி யென்னும், பொன்னிக்கு = இலட்சுமிக்கு, கம்பன் = கம்பனாகிய யான், அடிமை = ஆட்பட்டு இருக்கின்றேன். ஆகலான், உலகிற்கு அன்னையாகிய சீதேவி என்னும் இலக்குமிக்குக் கம்பனாகிய யான் அடிமை என்பது இதன் பொழிப்புரையாம். இதனால் எமக்கு இழிவிருந்தவாறு எங்ஙனம்? நீரேன் அவ்வழிப் பொருள்கொண்டு ஏளனஞ் செய்கின்றீர்? ஒருவர் ஒன்று கூறினால் அதன் கருத்தை உள்ளும் புறமும் உற்று நோக்கி உய்த்துணர வேண்டும்' என்று இடித்து உரைத்தனர்.

சோழன் இத் திரிசொற் பொருளைச் செவியில் ஏற்று, தன் இறுமாப்பனைத்தும் இழந்து, அடங்காச் சீற்றங்கொண்டு, இந் நாவலர்களை அணுவளவும் நம்பலாகாது: இட்டானை இந்திரன் என்றும், இடாதானை இழிஞன் என்றும் கூறும் குணக்கேடு இவர்களிடத்தே குடிகொண்டுள்ளது. அன்றியும் தமது கூற்றை ஏற்றவாறு மாற்றிக்கூறும் ஆற்றலும் உடையர் ஆவர். ஒருவனைப் **புத்தி இல்லாதவன்** என்று இகழ்ந்தும், பின்னர் அவனையே **புத்தியில் ஆதவன்** என்று புகழ்ந்தும் பல பொருள்படப் புகன்று பொருள் பறிப்பர் என்னுங் கருத்தை யடக்கி,

'போற்றினும் போற்றுவர் பொருள்கொ டாவிடில்
தூற்றினும் தூற்றுவர் சொன்ன சொற்களை
மாற்றினும் மாற்றுவர் வன்க ணாளர்கள்
கூற்றினும் பாவலர் கொடிய ராவரே'

என்றதோர் செய்யுளும் கூறியபின், கம்பரை நோக்கி, இன்றுதொட்டு நீவிர் எம் தேயத்தின்கண் இருத்தல் கூடாது: யாம் உமக்கு அளித்துள்ள விருதுகள் முதலிய அனைத்தையும் இவ்விடத்தே வைத்துவிட்டுச் செல்லும்' என்றான். மன்னன் கூறியவாறே கம்பர் அவனளித்த விருதுகளையன்றி தம் உடை முதலியவற்றையும் களைந்து வைத்து,

'காத மிருபத்து நான்கொழியக் காசினியை
ஓதக் கடல்கொண் டொளித்ததோ — மேதினியில்
கொல்லிமலை நாடாளுங் கொற்றவா நீமுனிந்தால்
இல்லையோ எங்கட்கிடம்'

என்னும் பாடலையும் இயம்பி, 'யான் தேடியடைந்தால் என்னை ஏற்றுக்கொள்ளாத ஏந்தலும் உண்டோ?' என்னும் கருத்தினால்,

'மன்னவனும் நீயோ வளநாடும் உன்னதோ
உன்னையறிந் தோதமிழை யோதினேன் — என்னை
விரைந்தேற்றுக் கொள்ளாத வேந்துண்டோ உண்டோ
குரங்கேற்றுக் கொள்ளாத கொம்பு'

என மற்றொரு செய்யுளையும் செப்பியபின், 'இனி யாம் இந்நாட்டின்கண் வருதல் உண்டாயின், உம்மையொக்க ஓர் இறைவனை அமைத்து அவனுடன்கொண்டு வருவோம்' எனச் சூளுரை உரைத்துக்கொண்டே, அரசன் அவைக்களத்தை நீங்கினர்.

பின்னர், தமது செலவை ஒருவரோடும் உரையாமல், உண்டியும் இன்றி, ஊக்கமே பெரிதுங்கொண்டு, நாள் பல நடந்து சென்று, ஓர் ஊரை அடைந்தனர். அப்பொழுது பசிப்பிணி மிகுதலால், கம்பர் மெய்வாடி, அறிவு சோர்ந்து, அவ்வூர்த் தெருவில் திரிந்து செல்லுகையில், ஒரு தாசி வீட்டின் புறக்கடையில் இடிந்துள்ள சுவர் ஒன்றை ஏற்றவல்லார் யாவராயினும் இருநாழி நெல் கூலியாகப் பெறலாம் என்று அங்குள்ளார் கூறக்கேட்டு, மனமகிழ்ந்து, அவ்வீட்டுக் கடைப்புறஞ் சென்று, மண்கூட்டி நொடிப்போதில் சுவரேற்றி விட்டு, கூலி கொள்ளத் திரும்பினர். திரும்புங்கால் அங்கிருந்த கழுதின் செய்கையால் அச்சுவர் சாய்வது கண்டு, துணுக்குற்று,

'மற்கொண்ட திண்புயத்தான் மாநகர்விட் டிங்குவந்தேன்
சொற்கொண்ட பாவின் சுவையறிவார் ஈங்கிலையே
விற்கொண்ட வாணுதலாள் வேலி தருங்கூலி
நெற்கொண்டு போமளவும் நில்லாய் நெடுஞ்சுவரே'

என்னுமோர் அருங்கவி இசைத்தனர். அக்கவியின் நலத்தை யுணர்ந்த அக்கழுது கால்வாங்கி போடவே

அச்சுவர் நிலைத்து நின்றது. பல்லோர் முயன்றும் நெடுநாளாக நிறைவேறாது கிடந்த அச்சுவர் நிலைத்து நின்றதைக் கண்ட அம்மாது கம்பரை நோக்கி, 'பெரியீரே, தேவரீர் அடியாளது இல்லத்திற்றானே வந்திருக்கலாமே' என்று பணிந்து வேண்டலும், அதற்கு அவர் உடம்படாது, அங்கு ஒருவேளை உணவுகொண்ட பின், தம் வழியே சென்றனர்.

கம்பர் அப்பால் நெடுந்தூரம் செல்லுகையில், பசிப்பிணி வாட்டுதலும், ஒரு கோமுட்டிக் கடையை அணுகி, 'ஐயா, பசிப்பிணி வருத்துகின்றது, சிறிது அவல் கொடும்' என்று வேண்ட, அவன், 'பொதிக்கு அளப்பதற்குள் சந்தத்திற்கு அளக்கச் சொல்வது போல், கடை போணியாவதற்குமுன் உனக்கு அவல் கொடுக்கச் சொல்லுகின்றனையோ! நல்லதாயிற்று, அவலும் இல்லை, அடகும் இல்லை, போ!' என்றான். அக்கடுமொழியைச் செவியிலேற்று, மற்றுஞ் சிறிது தூரம் சென்று, செக்கான் எள்ளாட்டுவது கண்டு, 'அப்பா, பசிக்குக் கொஞ்சம் பிண்ணாக்குக் கொடு' என்றார்; அவனும் தந்தானில்லை. அதன்பின், அவர் ஓர் அந்தணன் அகத்தையடைந்து, 'நீர்வேட்கையால் நெஞ்சு புலர்கிறது, சிறிது தண்ணீர் தருக' என்று வேண்டினார். அவ்வந்தணன், 'சூத்திரனுக்கு வார்த்த தீர்த்த சேஷம் பிராமணருக்கு அருகமாமோ! போ, போ' என்று துரத்தினான். அந்தோ, என்ன செய்வார் இன்னிசைக் கவிஞர்!

'மானம் குலம்கல்வி வண்மை அறிவுடைமை
தானம் தவம்உயர்ச்சி தாளாண்மை — தேனின்
கசிவந்த சொல்லியர்மேற் காமுறுதல் பத்தும்
பசிவந் திடப்பறந்து போம்'

என்பதேபோல் பசியாலும் தாகத்தாலும் பரிதவித்து ஒரு மாமரத்தின் நிழலில் படுத்திருந்தனர். அங்கு உழவனொருவனுக்கு உணவுவர, அவன் அதை உண்ணும் அமயத்து, கம்பர்சென்று கையேந்தினர். அவன் அந்தப் பழஞ்சோற்றை அவருக்குப் பரிந்து இட்டு உபசரிக்க, கம்பர் அதனை உழவனோடிருந்து உண்டு, பசி தீர்ந்த பின்னர்,

'செட்டிமக்கள் வாசல்வழிச் செல்லோமே செக்காரப்
பொட்டிமக்கள் வாசல்வழிப் போகோமே—முட்டிப்புகும்
பார்ப்பா ரகத்தையெட்டிப் பாரோமே யெந்நாளும்
காப்பாரே வேளாளர் காண்'

என்று ஒரு செய்யுள் கூறினர். வேளாளன், 'ஆகா, யாம் இப்பாவலர்க்குப் பரிந்திட்ட பழையதை உண்டு, அவர் பாடிய பாடலின் பயனால் இனி அழியாச் செல்வம் அடைவோம். ஆதலால், நம் தரித்திரம் தலைகாட்டாது ஒழியும்' என்று உளம் பூரித்து, அவரைப் பன்முறை வணங்கி, தன் அகத்திற்கு அழைத்துச்சென்று, அறுசுவை உண்டி அமைத்திட்டு உபசரித்து, அவரைச் சில பகல் தன்னிடத்தே இருத்திக்கொண்டனன்.

பிறகு, கம்பர் தம்மைச் செல்லவிடுமாறு கேட்க, வேளாளன், 'ஐய, தாம் வருதலால் அடியேன் இல்லம் தூய்மை யடைந்தது : ஆதலின், தாங்கள் யாண்டும் போகாது ஈண்டே இருக்கலாமோ' என, கவிஞர் அவனை மறுத்து, மற்றொன்றும் வேண்டாது, நன்னான்கு முழத்தில் இரண்டு வெள்ளாடை மாத்திரம் கேட்டுப்பெற்று, அரையி லொன்றும் தலையி லொன்றும் அணிந்து, விரைந்துசென்று, சேரநாட்டை யடைந்தனர். பின்பு, கம்பர் ஆண்டோர் சீமானை யடைந்து, 'ஐய, யான் கம்ப-

ரிடத்திருந்த அடைப்பைக்காரன். அவர்க்கும் சோழற்-கும் பூசல் நேர்ந்தமையின், அவர் அந் நாட்டை நீங்கி யாண்டுச் சென்றனரோ அறியேன்; அதனால் யான் இப்படி வந்துவிட்டேன். தாங்கள் அன்புகூர்ந்து எங்கேனும் கைகாட்டினால், தங்கள் பெயரைச் சொல்-லிப் பிழைப்பேன்' என, அச் சீமான், கம்பரிடத்தி லிருந்தவன் என்னும் அன்பினால், அவனைச் சேரன்-பால் அழைத்தேகி, அங்கு அடைப்பைத் தொழிலில் அமர்த்தினன். அன்றுமுதல் கம்பர் சேரனிடத்தில் அத்தொழிலைச் செவ்வனே செய்து வருகையில், சேரன் ஒரு பகல் தன் அரண்மனைக் கவிஞர்களை நோக்கி, கம்ப ராமாயணத்தில் சில அரிய செய்யுட்களை எடுத்துப் பிரசங்கம் செய்யுமாறு வேண்டினன். அவர்கள் பால-காண்டத்து வேள்விப் படலத்தில்,

'எண்ணுதற் காக்கரி திரண்டு மூன்றுநாள்
விண்ணவர்க் காக்கிய முனிவன் வேள்வியை
மண்ணினைக் காக்கின்ற மன்னன் மைந்தர்கள்
கண்ணினைக் காக்கின்ற இமையிற் காத்தனர்'

என்னும் பாடலை இசையுடன் இயம்பி, அதற்குப் பொழிப்புக் கூறத் தொடங்கி, 'கோசிக முனிவன் தேவர்கள்பொருட்டு ஐந்தாறு நாட்கள் வரையில் எண்ணுதற்கும் இயற்றுதற்கும் அரியதாகத் தொடங்கிய யாகத்தினை, உலகத்தைப் பாலனம் பண்ணும் தசரத மகாராஜனது புத்திரர்களாகிய இராமனும் இலக்குவ-னும், கண்ணைப் பாதுகாக்கும் இமைகளேபோல் காத்தனர்' என்று கூறி முடித்தனர்.

அப்பொழுது, அரசன் அந்தப் பிரசங்கத்தை அங்குள்ளார் அனைவரும் ஆதரவோடுங் கேட்கின்ற

னரோ என்றறிதற்பொருட்டு, அவரவர் முகத்தைக் குறிப்பின் உற்றுநோக்க, யாவரும் ஒருபடித்தாய்ச் சிந்தை செலுத்திக் கேட்கின்றனர் என்பது உணர்ந்தனன். பின்னர், தன் பக்கலிருந்த அடைப்பைக்காரன் முகத்தினைப் பார்த்தலும், அவன் வியக்கவேண்டிய இடத்து விரசமுற்றும், களிக்கவேண்டிய இடத்துக் கவன்றும், விசனமுறவேண்டிய இடத்து வியந்தும் இருப்பதுகண்டு, மன்னன் அவனை, 'என்னை, நீ இவ்வாறு இருக்கின்றனை?' என்று வினவ, அடைப்பைக்காரன், 'அரசே, இந்தப் பிரசங்கம் இந்நூலியற்றிய கருத்தாவின் கருத்திற்கு இசைந்திருக்கவில்லை' என, வேந்தன், 'அப்பர் கருத்தை நீ எவ்வாறு அறிவை?' என, அவன், 'அரசே, கம்பரிடத்து யான் அடைப்பைக்காரனாக இருக்கையில் அவர் பிரசங்கிக்க யான் அருகிலிருந்து கேட்டிருக்கின்றேன்' என்றான். 'ஆயின், நீயும் பிரசங்கிக்க வல்லையோ?' என்று, வேந்தன் வினவ, அவன், 'ஆம், சிறிது வல்லேன்' என்றான். அரசன், 'அவ்வாறாயின் இவர்கள் கூறிய செய்யுளுக்கே நீ உன் ஆற்றல் தோன்ற உரை விரிக்க' என, அடைப்பைக்காரனாகிய கம்பர் பிரசங்கிப்பாராயினர்:

'எண்ணுதற் காக்கரிது' என்னும் பாட்டின் முதல் மூன்றடிகளுக்கு இவர்கள் கூறிய பொருள் ஒருவாறு பொருத்தமுடையதே. முதல் அடிக்கண் எண்ணுதற்கு, ஆக்குதற்கு அரியவெள்ளி என்றதனோடு சொல்லுதற்கும் அரியதென வருவித்துச் சொல்லுதல் சிறப்புடையது. 'கண்ணினைக் காக்கின்ற இமையிற் காத்தனர்' என்னும் நான்காம் அடியில் பொருள் சிறக்கவில்லை, அதைச் சிறக்கச் சொல்லுங்கால், மேலிமை

கீழிமை என்னும் கண்ணிமை இரண்டில் மேலிமை பெரியது, கீழிமை சிறியது. அன்றி, மேலிமை இயங்குந் தன்மையுடையது, கீழிமை நிலைத்து நிற்பது. மேலிமைபோல் மூத்தோனாகிய சீராமன் நிலைபெயர்ந்து, கோசிக முனிவனது ஆச்சிரமத்தின் நாற்றிசையிலும், அரக்கர் வந்து துன்புறுத்தா வண்ணம், சுற்றித்திரிந்து காவல் செய்தான். இளையவனாகிய இலக்குவன் கீழிமைபோல, உட்புறத்தில் ஒருவரும் புகாவண்ணம் ஆச்சிரமத்தின் வாயிலில் அசையாது நின்றுகொண்டு காவல் செய்தான். இமைக்குந்தோறும் மேலிமை கீழிமையைத் தீண்டுவதேபோல், சீராமன் ஆச்சிரமத்தின் புறத்தில் சுற்றி வருந்தோறும் வாயிலில் இருந்த இலக்குவனை எச்சரித்தவாறே இருந்தனன் என்பதாம்.

பிரசங்கத்தில் பிள்ளைக்கும் பேதைக்கும் விளங்கும்படி பொருள் விரித்துரைப்பதே சிறப்பென்றும், அப்புலவர்கள் பிரசங்கித்த மற்றும் சிற்சில பாடல்களுக்கு அதனதன் உள்ளுறைப் பொருள்களை எடுத்துரைக்க வேண்டுமென்றும் கூற, அரசன், ‘ஆகா, இதற்கொப்பாக எவருடைய பிரசங்கம் ஏற்கும்! இன்னும் அக்கம்பரே பிரசங்கிப்பின் எவ்வாறிருக்குமோ!” என்று வியந்து, அன்றுமுதல் அடைப்பைக்காரனாகிய கம்பர் உயிரும், தான் உடலுமாக நேசித்து, தன்னோடு அவருக்கு அன்னபானாதிகள் அளித்து, மற்றைக் கவிஞரினும் அவரைப் பதின் மடங்கு மேன்மையாகப் பாவித்துவந்தான்.

அதுகண்டு, அங்கிருந்த கவிவாணர் அனைவரும் கம்பர்பால் பொறாமைகொண்டு, காரணம் ஒரு சிறிதும் இன்றி அவரைப் பகைத்தனர். தென்றல் முற்றிப்

பெருங்காற்றைப்போல், யாருக்குதான் அப்பகைத் புறப்படாதும், அவர்கள் ஒன்றுகூடி அடைப்பைக்கா ரன் இழிகுலத்தவனென்று ஓர் அபவாதமுண்டாக்கி, அவனிடம் அரசற்கு விரோதமுண்டாகும்படி செய்ய லாமென்றதன்றி, அரசற்கு க்ஷௌரம் செய்யும் அம்பட்டனை அழைத்து, 'நீ அடைப்பைக்காரனை உங்கள் இனத்தவனென்று எவ்விதத்திலாயினும் அரசற்கு உறுதியாகத் தோன்றுமாறு செய்வையாயின் உனக்கு ஆயிரம் பொன் அளிப்போம்: அதனால் உனக்கு ஏதும் தண்டனையும் வாரொட்டாது விலக்குவோம். அதன்பொருட்டு எவ்வளவு பொருட்செலவு நேரினும் தருவோம்' என்று அவனுக்கு உறுதியுண்டாகும்படி சொல்லி, சிறிது முற்பணமும் கையிற் கொடுத்தனர். கைமேல் கருந்தனத்தைக் கண்ட மாத்திரத்தானே, 'பணமென்றால் பிணமும் வாய்திறக்கும்' என்னும் பழமொழிக்கேற்ப, அவன் ஆசை மேலிட்டால், அத் தகுதியற்ற செய்கைக்கு உடன்பட்டு, அடைப்பைக் காரனையேயன்றி அரசன் குடியையும் கெடுக்க ஏற்ற சமயத்தை எதிர்பார்த்திருந்தனன்.

சோழன் சிங்காதனத்தின் பக்கலில் வீற்றிருந்த கம்பர், ஒருநாள், ஏதோ காரணமாக அதினின்றும் இறங்கி அரசவையின் அருகே வருதலும், ஆண்டுக் காத்திருந்த அம்பட்டன், அனைவரும் காண அவரைக் கட்டித் தழுவி, 'அண்ணே, இவ்வளவு காலமாக உன் முகத்தைக் காணாமலிருந்தேனே! நீ எங்கே போயிருந்தாய்?' எனக் கேட்டுக் கூக்குரலிட்டு அரற்றினன். கம்பர், அச் சற்பனையை ஊகித்தறிந்து, அவனைத் தாமும் கட்டிக் கதறினர். அம்பட்டன், தானே

ஒருவாறு தேறி, கம்பர் கண்ணீரைத் தன் மலின வஸ்திரத்தால் துடைக்க, அவர் நடித்துக் காட்டிய பொய்த்துயரம் மாறி, அம்பட்டனை நோக்கி, 'அடா தம்பி, நீ குடியிருக்கும் இடமெங்கே? உனக்குக் கலியாணமாயிற்றா? பிள்ளைகள் எத்தனை? பார்ப்போம் வா' என்று அவனை அழைத்துக்கொண்டு சபையை நீங்கினர்.

அடைப்பைக்காரனாகிய கம்பர் திரும்புகையில், 'அப்பா, குழந்தைகள் இருக்குமிடத்திற்கு எவரும் வெறுங்கையோடு ஏகலாகாது. பெரியோர், கோயிலுக்கும், குருவின் சந்நிதானத்திற்கும், ராஜசமுகத்திற்கும், குழந்தைகளிடத்திற்கும் வெறுங்கையோடு போகலாகாது என்பர்' எனக் கூறி, அவ்வூர்க் கடைத்தெருவிற்குச் சென்று, சிற்றுண்டி சிறிது வாங்கிக்கொண்டு சென்று அம்பட்டன் வீட்டை அடைந்தனர். அடைதலும், அவன் தன் குடிசைக்குள் முன்பு நுழைந்து, தன் மனைவியை விளித்து, 'அடி, இதோ உனது மூத்தார் வந்தார்; அவருக்கு மணைபோடு' என்றான். அவள் ஒரு கட்டைமணையை எடுத்துப்போட, கம்பர் அதன்மேல் உட்கார்ந்த பின்னர், அவள் கம்பர் காலில் விழுந்து கும்பிட்டாள். கம்பர், 'நீ தீர்க்க சுமங்கலியா யிருக்க', என வாழ்த்தி, 'குழந்தைகளெங்கே?' என, அம்பட்டன் தன் மூன்று மைந்தரையும் நோக்கி, 'உங்கள் பெரியப்பா அழைக்கின்றார் வாருங்கள்' என்று எதிரில் கொண்டுவந்துவிட, அப்பிள்ளைகளைக் கம்பர் வாரியெடுத்து, மார்போடு அணைத்து, முகத்தோடு முகம் வைத்து, கண்ணோடு கண்ணொற்றி, முத்தாடி, 'என் அருமை மக்காள்! நான் உங்கள் மழலைச்சொற்களைக்கேட்டு மகிழவும், தளர் நடையைக்-

கண்டு சந்தோஷிக்கவுங் கொடுத்து வையாமற் போனேனே!' என்று கண்ணீர்விட்டு, ஆர்வத்தோடு பன்முறை அவர்களை அணைத்துத் தழுவிய பின்னர், அவர் அம்பட்டனது வஞ்சகத்தை முற்றும் உணருமாறு ஒரு சிறை வாளா இருந்தனர். அவன் கம்பரை நோக்கி, 'அண்ணா, சாப்பிட எழுந்திரும்' என்றான்.

அப்பொழுது கம்பர், மயிர்வினைஞனை நோக்கி, 'தம்பி, உனக்கும் எனக்கும் என்றுஞ் சிற்சில விஷயங்கள் பேசவேண்டியிருக்கின்றன' என, அவன், 'உண்ட பின்பு பேசலாமே' என்று கூறினன். கம்பர், 'அப்படிச் செய்வது அடாது; உன் சோற்றையுண்டு உனக்குத் துரோகம் செய்ததாய் முடியும்; ஆதலால் இரண்டொருபேச்சு பேசி முடித்த பின்பு உண்பதே உத்தமம்' என்றார். அம்பட்டன், 'அதென்ன?' என, கம்பர், 'தம்பி, நம்முடைய முன்னோர்களுக்குத் தாயபாகம் பிரியவில்லை யென்பது நீ அறிவையன்றோ?' என, அவன், 'ஆம்' என்றான். கம்பர், நாம் அக்காலத்தில் ஒருவரை யொருவர் விட்டுப் பிரிந்து திசைகெட்டுத் தடுமாறிப் போனபின்பு உடையாருதலால் நீ இவ்வாசனை அறிந்தும் அகப்பட் டிருக்கின்றாய்: யானோ கொழு கொம்பு இல்லாக் கொடியைப்போல் அலைந்து திரிந்தேன். நிற்க, சென்ற இருபது வருடகாலமாய் உன் முறையாக நீ இவ்வாசற்கு ஊழியஞ் செய்துவந்ததே போல், நானும் இனி இருபதாண்டு அத் தொழிலைச் செய்யவேண்டுவது முறையன்றோ?' என்றனர். அவன், 'அதற்குத் தடையென்ன, தங்களிஷ்டப் படியே செய்யலாம்' என்றான். பின்பு, கம்பர், 'தம்பி, நீ உடம்பட்டனை மெய்யே, என்னிடத்தில் க்ஷௌரம்

செய்துகொள்ள அரசரும் சம்மதிக்க வேண்டுமே, அவரைக் கேட்டறியலாம், அங்கே வா' என்று அவனை அழைத்துக்கொண்டு அரசவையை யணுகினர்.

இது நிற்க, அம்பட்டன் ராஜ சபையில் கம்பரை, 'அண்ணை!' என்று அழைத்து அரற்றிய காலத்தில், அங்கிருந்தோ ரனைவரும், 'அடைப்பைக்காரனை, மன்-னர் மகாவித்வானென மதித்துச் சம்மானித்து, அவ-னுக்குச் சபையில் உயரிய ஆசனமளித்ததுமன்றி, தம்முடன் வைத்து உணவும் அருந்தினரே!' எனப் பலவாறு பேசிக்கொண்டு இருந்தனர். இறைவனும் எண்ணாதும் எண்ணி நெஞ்சம் புண்ணேயாயினன். ஆயினும், அம்மன்னன் நுண்ணறிவுடையோனாதலால், 'இவன் அம்பட்டனாகில், கம்பர் இவனைத் தம்மிடம் அடைப்பைத் தொழிலில் அமைத்துக் கொள்ளுவரோ? அவசரப்படாமல் ஆராய்ந்து பார்க்கவேண்டும்' என்று உன்னித் தன் ஒற்றரை ஏவினன். அவர்கள் உருமாறி, அம்பட்டனும் அடைப்பைக்காரனும் அவையினின்-றும் அகன்ற பின்னர், அவர்களைத் தொடர்ந்து சென்று, ஆண்டு நடந்தனயாவும் சிறிதும் பிழையாமல் அறிந்துவந்து, அரசற்கு அறிவித்ததுமன்றி, முடிவில் அடைப்பைக்காரன் அரசனுக்கு க்ஷௌரம் செய்ய வருவதையும் கூறினர். அரசன் அதனைக் கேட்டு, அடைப்பைக்காரன் அம்பட்டனே என நிச்சயித்து, அவனால் தனக்கு நேர்ந்த மானக்கேட்டை உன்னி-யுன்னி மனமுளைந்திருந்தான்.

இஃது இவ்வாறாக, 'உகிர்ச்சுற்றின்மேல் உலக்கை விழுந்தாற்போல,' அடைப்பைக்காரனும் அம்பட்ட-னும் ஆண்டடைந்து அரசனை வணங்கி நின்றார்கள்.

அவர்களைக்கண்ட அரசன், இதன் உண்மையினை அறி-வோமென்று, கம்பரை நோக்கி, 'நீங்கள் யாது கருதி கொண்டு வந்தீர்கள்?' என்று கேட்டான். அவர் தமக்கும் அம்பட்டனுக்கும் பாகம் பிரிந்தமை கூறி, 'அரசே! என் தம்பி இருபது வருஷம் தன் முறையாகத் தேவ-ரீருக்கு ஊழியம் செய்ததேபோல், யானும் அவ்வளவு காலம் என் முறையாகத் தங்களுக்கு ஊழியஞ் செய்ய-மாறு உத்தரவு பெற வந்தேன்' என்றார். அதன்மேல் அரசன், நாவிதன் கருத்தைக் கேட்டறிந்து, கம்பரை நோக்கி, 'நல்லது நீ விரும்பியவாறே ஆகுக' என்றான். இது நிற்க, அப் போலிப் புலவர்களும் அம்பட்டனைக் கண்டு, 'நீ மேற்கொண்ட காரியத்தில் எது வரினும் பயப்படாதே: சரியா முயற்சிகொண்டு சாதித்துவிடு' என்று உறுதி யுரைத்துக்கொண்டே வந்தனர். அவ-னும், 'அப்படியே ஆகட்டும்' என்று சிறிதும் பின்னி-டாமல் முயன்று வந்தனன்.

பிறகு, கம்பர் கலைமகளை மனத்தில் தியானித்து, 'என்னம்மே! இந்த ஆபத்துக் காலத்தில் அடியேனைக் கைவிடாது காக்கும்பொருட்டுத் திருவுளம் இரங்கி, உன் இடக்காற் சிலம்பை அருளிச்செய்தல் வேண்டும்' என்று வேண்டினர். அவர் வேண்டியவாறே நாமகள் மனமிரங்கி யருள, அந்தேவியின் காற்சிலம்பு ஒன்று கம்பர் கக்கத்தில் வந்திருந்தது: அதைக் கம்பர் எடுத்-துச் சோழன்முன் வைத்தனர். அது, தோன்றி மறைதலில்லா மின்னலேபோல் விளங்க, இறைவன் கண்டு, 'இஃதேது, இரவியே இங்குப் போந்ததோ! அன்றித் தடித்தே தரைக்கண் இறங்கிற்றோ? யாதோ அறிதற்கில்லை', என்று ஐயமுற்று வினவ, கம்பர், நாவிதனைச்

சுட்டி, 'இவன் தந்தையும் என் தந்தையும் ஒரு தாய் அகட்டிற் பிறந்த சகோதரர், எமது மூதாதையர் அந்நாளில் தேவரீரைப்போன்ற அரசர்பால் ஊழியஞ்செய்து இவ்வரிய சிலம்புகளை அடைந்தனர்; கைக்குச் சுலபமாய் இருந்தமையால், தேசாந்தரம் போகையில் இவர்களொன்றும் யாங்களொன்றும் கையோடு காவலாகக் கொண்டுபோயினேம். இழிகுலத்தரும் எளியோருமாகிய எங்களுக்கு இத்தகைய சிலம்பாற் பயனென்னை? இது மன்னர் மன்னராகிய தங்களுக்கே தக்கது; இச்சிலம்பைத் தேவரீர் மனங்கொண்டு ஏற்றுக்கொள்வதுமன்றி, என் தம்பி வசத்துள்ள மற்றொரு சிலம்பினையுங் கொண்டு, அரசியார் அழகிய கால்களிலிட்டால், அடியேங்கள் கண்குளிரக் கண்டு களிப்போம்' என்றார்.

அரசன் அவ்வொற்றைச் சிலம்பைக் கையில் ஏந்தி வியந்து, மயிர்வினைஞனை நோக்கி, 'நின்பாலுள்ள மற்றொன்றையும் கொண்டுவா' என, அவன் இதேது, 'கிணறுவெட்ட பூதம் புறப்பட்டாற்போல்' ஆயிற்றே என்றெண்ணி, உடல் நடுக்குற்று, மொழிகுழறி, ஒன்றுந் தோன்றாதாய் நிற்கக்கண்ட கம்பர், 'தம்பி! அது நமக்கேன்? அருங்கலம் அரசர்க்கே உரியது; அதைக் கொணர்ந்து கொடுத்துவிடு' என, அவன், 'ஐயோ, என்னிடத்திலில்லையே! இப்படிப்பட்ட சிலம்பை என் எழு பிறப்பிலும் கண்டறியேனே!" எனத் தன் கைகளை முறுக்கிக்கொண்டு கன்றி நின்றான். கம்பர், பின்னும் 'அப்பா, ஒன்றும் ஒளியாதே; கொணர்ந்து கொடுத்துவிடு; அது நம்மிடத்திலிருந்து ஆவதென்ன? கள்ளிக்கு முள்வேலியும், கழுதைக்குக் கடிவாளமும் இடுவதுண்டோ? குடிப்பதுகூழ், கொப்பளிப்பது பனிநீரா? வேண்டா, கொடுத்து

விடு. அரசர் நமக்கு வேண்டியபொருள் தருவர்' என, நாவிதன் நாவெழாமல், 'குளிக்கப்போய்ச் சேற்றைப் பூசிக்கொண்ட கதையாயிற்றே, என்னசெய்வேன் தெய்வமே!' என்று தன்னுள் எண்ணி, 'ஐயோ, அஃது என்னிடத்தில் இல்லையே!' என்று கண்ணீர் விட்டுக் கதறி, நெடு மரம்போல் நிலைத்து நின்றான்.

சோழன் அச் சிலம்பின் வனப்பைக் கண்டு வியந்து, பின்னும் நாவிதனை மறுமுறையுங் கேட்டும், அவன் முற்கூறியவாறே, 'இல்லையே, இல்லையே' என, கம்பர், 'அடா தம்பி! மயிர்வினைஞனாகிய நமக்கு இந்தச் சிலம்பேன்? வேண்டா, கொண்டுவந்து கொடுத்துவிடு' என, அவன், 'சத்தியமாயில்லை' என்றான். அரசன் 'இவன் இல்லையென்று ஆணையிடுகின்றானே, என்ன?' என, கம்பர், 'சுவாமி, இவன் மிகவும் கையழுத்தக்காரன்: சிறு வயதிலேயே அந்தரப் பொய்யாணையிடுவது இவன் இயல்பு: இவ்வாறு பொறுமையோடிங் கேட்டால் இவன் கொடுப்பானோ? கிட்டிப் பூட்டிப் பிடிக்கிறதல்லாமல், மயிலே மயிலே இறகு போடென்றால் தருமா?' என்றார். எனலும், அரசனது ஆணையால் ஏவலர் அவனைப் பிடித்துக் கம்பத்தில் இறுகக்கட்டி, உடல் எங்கும் உதிரம் ஒழுகுமாறு புடைத்தனர். அம்பட்டன் அடி பொறுக்கமாட்டாமல், 'ஐயையோ, கட்டவிழ்த்துவிட்டால், உள்ளதைச் சொல்லி விடுகிறேன்' என்றான்.

எனலும், உடனே கட்டை யவிழ்த்து விட்டு வினவ, அவன், 'ஆண்டவரே! இவர் என் தமையனுமல்லர்; நான் இவர் தம்பியுமல்லேன்; இவரது வரலாற்றை ஒரு சிறிதும் யானறியேன்: இங்குள்ள கவிஞர் இவர்மேலுள்ள பொறாமையால் என்னைக்கொண்டு

இவ்வாறு சொல்வித்தனர். அதன்பொருட்டு அடியேனுக்கு அவர்கள் சிறிதுதொகையும் கொடுத்தனர், என்று கூறி, அதைத் தருவித்து அரசன் சமுகத்தில் வைத்து, மற்றும் அவர்கள் செய்யத் துணிந்த அல்வழிச் செய்கைகள் அனைத்தையும் பட்டோலை படித்தாற்போல் விரித்து உரைத்தனன். சேரன் அதனைக் கேட்டு,'ஓகோ, இஃது இவனால் விளைந்தது அன்று; வித்துவக் காய்ச்சலால் நேர்ந்தது. எய்பவன் எய்தால் அம்பு என்ன செய்யும்?' என்று அம்பட்டன்மேல் இருந்த சீற்றத்தைத் தணித்து, அவ்வித்துவான்களது வஞ்சகத்தையுள்ளி, 'நம்மால் பாலிக்கப்பட்ட இப்புலவர் நமக்கே தீங்கு விளைக்கத் துணிந்தனரன்றோ?' என்று உன்னி, அவர்களனைவரையும் தண்டிக்கக் கட்டளையிட்டான்.

அது கண்ட வித்துவான்கள், 'இந்தப் பேரிடிக்கு எவ்வாறு தப்புவது!

"அழுக்கா றெனவொரு பாவி திருச்செற்றுத்
தீயுழி உய்த்து விடும்"

என்னும் முதுமொழிக்கு யாமே இலக்காயினோமே' எனக் கூறி, அனைவரும் ஒன்றுகூடி ஆராய்ந்து, தம் மனைவியரை அடைப்பைக்காரனது அடிகளில் விழுந்து வேண்டிக்கொள்ளுமாறு அனுப்பினர். அம் மங்கையரும் வயிறலைத்து ஓடிவந்து, கம்பர்முன் புலம்பி நின்று, தம் முன்றானையை விரித்து, 'எங்களைக் காக்க வேண்டும்' என்று வேண்டுதலும், கம்பர் அவர்கள் வேண்டுகோளுக் கிரங்கி, 'வருந்த வேண்டா, உங்கள் மணாளருக்குத் தீங்கொன்றும் நேரா வண்ணம் தக்கது புரிவோம்' என்று அவர்களைத் தேற்றி யனுப்பினர்.

பின்பு, கம்பர் அரசனை யணுகி, 'மன்னர் மன்ன, இவ்வுலகில் மாதா, பிதா, குருமார், தபசிகள், வித்து-

வாணர்கள், விகடகவிகள், வீரர்கள், சேனாபதிகள், தூதர், பணியாளர், பாவலர், அடைக்கலம் புகுந்தோர் முதலாயினோர் செய்த குற்றத்தைப் பாராட்டி அதற்காக அவர்களைத் தண்டிப்பது நீதியன்று. அவர்கள் அறி-யாது செய்த குற்றத்தை மன்னிப்பதே அடைவாகும்' என, அரசனும் சீற்றம் மாறி விதித்த தண்டனையை நீக்கிய பின்னர், கம்பரை நோக்கி, 'புலவீர்! இவ் வயிரச்சிலம்பு நமக்கு எவ்வாறு கிடைத்தது?' என்றான்.

கம்பர், 'இச் சிலம்பினை யணியும் செல்வியைத் தாம் தரிசிக்க வேண்டு மென்னும் விருப்ப முளதேல் தரிசிக்கலாம்' என் றியம்பி, அரச னாணையால், அகன்ற தோர் மண்டபத்தின்கண் முத்துப் பந்தரிட்டு, பனி-நீரிற் குழைத்த சந்தனத்தால் மெழுகி, முத்துப் பொடியாற் கோல மிட்டு, வாழை முதலிய மரங்களை நாட்டி, மலர்மாலை தூக்கி, நெய் விளக்கேற்றி, முற்-புறத்தில் பட்டுத் திரை யிட்டு, அதனுள் மரகத விமானத்தின்கண் மாணிக்கப் பீடம் அமைத்து, அதன் நாப்பணில் நீர் நிரம்பிய தங்கக் கலசம் ஒன்றினைத் தாபித்து, அதனில் கலைமகளை ஆவாகனஞ் செய்து, தோற் கருவி, துளைக் கருவி, நரம்புக் கருவி, கஞ்சக் கருவி ஆகிய நால்வகை வாச்சியங்களும் ஆரவாரிக்க, விதிப்படிப் பூசித்து அஞ்சலித்து, திரைப் புறத்தி-லிருந்து, புதுமையாக நாடகர்போல், **'சரசுவதி அந்தாதி,'** என்னும் ஒரு பிரபந்தம் இயற்றி,

'ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய வுணர்விக்கும் என்னம்மை — தூய
உருப்பளிங்கு போல்வாளென் உள்ளத்தி னுள்ளே
இருப்பளிங்கு வாரா திடர்.

படிக நிறமும் பவளச்செவ் வாயும்
கடிகமழ்பூந் தாமரைபோற் கையும் — துடியிடையும்
அல்லும் பகலும் அனவரத முந்துதித்தால்
கல்லுஞ்சொல் லாதோ கவி'

எனப் பாடிப் பரவுதலும், கலைமகளார் ஒற்றைக்காற் சிலம்பு கலீர் கலீர் என்று சத்திக்க அடி பெயர்த்து அற்புத நடனஞ் செய்ய, அரசன் முதலாயினர் தேவியைக் கண்குளிரக் கண்டு, படியில் விழுந்து பணிந்து பரவசம் அடைந்தனர்.

அப்போது கம்பர், அரசன் கையிலிருந்த அச் சிலம்பை வாங்கிச் சாரதையின் இடப் பாதத்திற்கு நேரே நீட்டுதலும், அஃது அத் திருவடியிற் போய்ச் சேர, கலைமகளார் திருவுருக் கரந்தனர். அது கண்ட சோன், கம்பர்பால் ஐயமுற்று, 'அருந்தமிழ்ப் புலவீர், நீவிர் யாவிர்? நும் வரலாறு யாது? உள்ளது உள்ளவாறே உரைத்தல் வேண்டும்' என்று வேண்டி நிற்ப, கம்பர், தமக்கும் சோழற்கும் நடந்தவை யனைத்தும் நவின்றனர். நவிலக் கேட்டலும், சேரன் கம்பர்பால் பேரன்புடையனாய் அவரை ஆதரித்து வந்தான். ஆயினும், அவர் சிறிதுகாலம் தனக்கு அடைப்பைக்காரத் தொழில் செய்துவந்ததை நினைந்து அவ்வப்போது விசனமுற்று, அதனைக் கம்பர்க்கும் வெளியிட்டதன்றி, தானும் சிறிது காலம் அப்புலவர்க்கு அத் தொழிலை யியற்ற அநுமதி யளித்தல் வேண்டுமென்று வேண்ட, கம்பர், 'அரசர் பெரும! அது முறையன்று, எமது உண்மை யறிந்து எம்பால் பணியேற்றீரல்லீர்; ஆதலின், அது குற்றத்தின்பாற் படாது; ஆயினும் தாமியற்ற விரும்பிய அப் பணியை எமக்கு வேண்டிய ஒரு காலத்துப் பெறுவோம்' எனக் கூறிச் சேரனைத் தேற்றினர்.

இவ்வாறு நெடுங்காலம் செல்லவும், கம்பர் முகத்தைக் காணாது வருத்தமுற்ற சோழன், 'என்னே! ஆராயாது புரிந்த அருங் குற்றத்திற்கு யாது செய்வேன்!' எனப் பலவாறு புலம்பி மனம் கவன்று, 'அந்தோ! அருந் தமிழ்வாணர் இன்மையால் நமது அவைக்களம், தாமரையில்லாத் தடமும், சந்திரனில்லா இரவும், மதியில்லா வானும், நதியில்லா நாடும், ஞானமில்லாக் கல்வியும், கற்பில்லாப் பெண்டிரும், புத்திரப்பேறில்லா இல்வாழ்க்கையும் எனப் பொலிவழிந்து இருக்கின்றதே! அப்புலவர் பெருமான் யாண்டுச் சென்றனரோ! எவ்விடத்து வதிகின்றனரோ' எனத் தன் அவைக்களத்துள்ளாரோடும் ஆராய்வானாயினன். அப்பொழுது, கம்பர், சேரன்பால் சிறக்க அமர்ந்துள்ளார் என்பதை ஒற்றரால் உணர்ந்து, 'யான் ஆராயாது இயற்றிய குற்றத்தினை மனங்கொள்ளாது வருக' எனத் திருமுகமொன்று தீட்டி யனுப்பி, கம்பர் வருகையைப் பெரிதும் நாடி நின்றனன். அக் கவிஞர் பெருமானை அனுப்புமாறு சேரற்கும் திருமுகம் தீட்டினன்.

கம்பர், சோழன் விடுத்த திருமுகத்தைக் கண்டு அகமகிழ்ந்து, 'நீர்கிழிய எய்த வடுப்போல்' சீற்றம் மாறி, சேரன்பால் விடைபெற்று, அவன் அளித்த ஆடையணி முதலிய பரிசனைத்தும் பெற்று, பெருமகிழ்வுடன் சோணாட்டில் அரசன் அவைக்களத்தை அடைந்தனர். அவரைக்கண்ட சோழன் இருக்கைவிட்டெழுந்து, ஆவினைக்கண்ட இளங்கன்றெனப் பரிந்தோடி, கம்பரைக் கட்டியணைத்து, உயரியதோர் ஆதனத்தில் இருத்தி, ஆனந்தமடைந்து, அவர் தன்னை நீங்கியபின் நேர்ந்தவை யனைத்தும் வினவலுற்றனன்.

அப்போது கம்பர், தாம் சோணாட்டை யகன்றபின் தமக்கு வழியில் நேர்ந்தவை யனைத்தும் கூறினர். மற்றும் தாம் சேர நாட்டினைக்குறுகி, ஆண்டு அரசன்பால் அடைப்பைக்காரத் தொழிலில் அமர்ந்ததையும், அங்குத் தம் பிரசங்கத்தினைக் கேட்டு வியந்து, சேரன் தம்மிடம் அன்பு பாராட்டினதையும், அது காரணமாகப் பொறாமை கொண்ட கவிஞர்கள் தமக்காக்கிய வஞ்சகம் முதலியவற்றையும் விளங்கக் கூறினர்.

அக்காலத்தே, சேரன், முன்பு கம்பர் தனக்கு அடைப்பைத் தொழிலை இயற்றினமைக்குப் பிரதியாகத் தானும் அப் பணியைக் கம்பர்க்கு இயற்ற விழைந்தவாறே, கம்பரது வேண்டுகோளுக் கிணங்கி, உருமாறி அடைப்பைத் தொழிலேற்று, கம்பர் பக்கலிலிருந்து அடைக்காய் முதலியவற்றைக் கம்பருக்கு அமைதியோடுங் கொடுக்க, கம்பர் அதனைப் பெற்று கரத்தில் வைத்துக்கொண்டு, சமிக்கை காட்டுதலும், சேரன், சோழனது அவைக்களத்தை நீங்கி, தன் பரியிவர்ந்து விரைந்து செல்வானாயினன்.

அதன்பின், சோழன், கம்பரை நோக்கி, 'புலவர் பெரும! தாம் கூறிய அனைத்தும் உண்மையே; ஆயினும், முன்பு இச்சபையை நீங்கிய காலத்து, "மற்றொருகால் ஈண்டுவருதல் நேருமாயின், உன்னையொத்த மன்னனை எமது அடியனாகக் கொண்டு வருவோம்" எனக் கூறினீரன்றே?' என்றான். அப்போது அவ்வருங் கவிவாணர் அரையனை நோக்கி, 'இது காறும் ஈண்டு என் பக்கத்திலிருந்த ஏந்தல் இன்னானென்பதை நீ அறிந்திலையோ? இனியேனும் காலந் தாழ்த்தாது மாடியின்மீது இவர்ந்து காண்பாய்' என, மன்னன்,

அக்கணமே மாடியிவர்ந்து, நோக்குதலும், சோழன் தன் பரிமா வுகைத்து விரைவிற் செல்வது கண்டனன்.

காண்டலும், அக்காவலன் கம்பரை வணங்கி, 'தெய்வப் புலவீர்! அடியேன் நுமது கீர்த்தியை ஒரு சிறிதும் அறியா தொழிந்தேன்; இன்று அதனை முற்றும் உணர்ந்தேன்' எனப் பன்முறை கூறி,

'மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையன் — மன்னற்குத்
தன்றேய மல்லாற் சிறப்பில்லை கற்றோற்குச்
சென்றவிட மெல்லாஞ் சிறப்பு

என்னும் உறுதிமொழியின் உண்மைப் பயனை இன்றே அறிந்தேன்' என்று, தான் முன்பு அறியாது கூறிய குற்றத்தினை மன்னிக்குமாறு வேண்டினன். பின்பு இருவரும் அளவளாவி அன்புற்று இன்புற்று வாழ்ந்திருந்தனர்.

II. தேச சஞ்சாரம்

அந்நிய தேசங்களில் சஞ்சாரம் பண்ணுவதனால் ஜனங்களுக்கு விவேகமும் அடக்கமும் உண்டாகின்றன. தென்னாட்டில் இருப்பவன் வடநாடுகளைப் போய்ப் பார்த்தால், தன்னிடத்திலிருந்த கல்விப் பெருக்கையும் செல்வச் செருக்கையும் நினைந்து நினைந்து தனக்குள் வெட்கிப் போவான். சிலர் மனம் வேறு, சொல் வேறு, நடைவேறாய்த் தங்கள் உட்கருத்தை வெளியிடாமல், தம் நாட்டையும் கல்வியையும் செல்வத்தையுமே பெரிதென வாதாடுவார்கள். இவர்கள் மார்க்கம் சன்மார்க்கமன்று. ஒருவன் தனது நாட்டானாயினும் அவனிடத்திலுள்ள குற்றத்தைக் குணமென்றே நாட்டத் துணிவதைவிட, வாய் பேசாமல் இருந்துவிடுவதே உத்தமம். கல்வியும், செல்வமும், விவேகமும் வேறு நற்குணங்களும் ஒரு தேசத்தாரிடத்திலேயே எப்போதும் நிலைபெற்று இருப்பதில்லை. செல்வம் ஒருநாட்டிலேயே விசேஷமாய் இருக்குமானால், நாம் வேறு நாட்டிற்குப்போய் வயிறாகிய தூராக் குழியை நிரப்ப உழைக்க வேண்டுவதில்லையே. வங்காள நாட்டார் திருநெல்வேலியிலும், திருநெல்வேலியார் காசுமீரத்திலும், இப்படியாகத் தென்னாட்டார் வடநாட்டிலும் வடநாட்டார் தென்னாட்டிலும் போயுழைப்பதைக் காண்கின்றோமல்லவா? மனிதவியற்கையும், மனநுட்பமும் பற்பல தேசங்களிலும் பலவாக இருப்பதாலும், ஒரு தேசத்தார் ஒரு காலத்தில் சிறந்தும் மற்றொரு காலத்தில் தாழ்ந்தும், ஒரு நாடு ஒரு காலத்தில் செழித்தும் ஒரு காலத்தில் வறுமையடைந்தும், ஒரு ஜாதியார் ஒரு காலத்தில் மேம்பா-

டைந்து நாடாள்வதால் அவர்கள் நோக்கத்தின்படி ஜனங்கள் கல்வி முதலியவைகளிற் சேர்ந்து ஜீவனோபாயம் பெற்றார், மற்றொரு ஜாதியார் தாழ்வடைந்து நாடு துறந்து போகக்கண்டு நூதனமாய்க் 'காலத்திற்குத் தக்க கோலம்' என்றபடியே புதிய-வைகளால் பொருளைச் சேகரித்தும், இப்படிப் பல-வாறிருப்பதன்றித் தென்னாட்டு ஜனங்களிடத்-திலே நிலைக்குடியா யிருந்ததாகக் காணவில்லை. புரா-தன சரித்திரத்தையும் கோத்திர வகையையும் நிர-விசாரிப்போமானால், இப்போது தென்னாட்டிலுள்ள பலர் வடநாட்டார் என்பது எளிதில் வெளியாகும். ஆகையால், எந்த மனிதனும் அவனிருக்கும் நாட்-டையும், கல்வி செல்வங்களையும் புகழ்ந்து பேசிக்-கொள்வது பிழையாம். தேன், ஏறமுடியாத பாறை-களிலும், முட்செடிகளின் மேலும், ஆழ்ந்த கிணறுகளிலும் இருக்கும், வழி நடைகளில் கைக்கெட்டிய தூரத்-திலும், கைக்கெட்டாத நீண்ட கொம்புகளிலும், மற்-றிடங்களிலு மிருப்பதுபோலக் கல்வியும் பொருளும் அருளும் பல தேசங்களிலும், பற்பல ஜாதியாரிடத்தி-லும் பல காலங்களிலும் மாறிமாறி வந்துகொண்டே இருப்பதால், அடுத்த வீட்டுக்காரனும் தன்னாரானுமே தன்னைப் புகழும் பொருட்டு மேற்போக்காய் வேஷ-தாரிகள்போல் இராமல், உண்மையாகக் கல்வியிலாயி-னும், செல்வத்திலாயினும், அறிவிலாயினும், அருளி-லாயினும் தம் மனம் மெய்க்கச் சிறப்படைய வேண்டுவோர் தேச சஞ்சாரம் செய்யவேண்டுவது முக்கியமாம்.

இல்வாழ்க்கைக்குப் பற்பல பண்டங்களைப் பல காலத்திலும் பல இடத்திலும் நாம் சேகரம் பண்ணி

வைத்துக்கொண்டு சீராய்க் குடித்தனம்செய்து வருவதுபோலவே, இந்த மானுஷீகத்தில் நாம் சிறப்படைய வேண்டுமானால் கல்வியிலும், செல்வத்திலும், அருளிலும் ஆழ்கடல்போல் வற்றாத தன்மை யுள்ள மனிதர்களைப் பல தேசங்களிலும், பல காலத்திலும் சந்தித்து, சங்கதிகளில் தேர்ச்சியடைய வேண்டும். இக் காரணம் பற்றியன்றோ நமது நாட்டினர் முற்காலங்களில் வல்லவராக கல்வியில் இதர தேசங்களிற்போய் நெடுங் காலம் கல்வி கற்றுப் பிறகு தம் நாட்டிற்கு வந்து விவாக முதலிய சடங்குகள் செய்துகொண்டு இல்லற தருமத்தை நடத்தி வந்தார்கள். இந்தக் காலத்திலும் ஐரோப்பாக் கண்டத்தி லுள்ள இங்கிலாந்து முதலிய தேசங்களில் பாடசாலைகளில் கல்வி கற்றுத் தேர்ச்சியடைந்த பிள்ளைகளை நாட்டுப் புறத்திலும், அந்நிய நாடுகளி லுள்ள பிரதான பட்டணங்களிலும் போய்ச் சஞ்சாரம் செய்து வரும்படி திட்டம் பண்ணுகிறார்கள். பல தேசங்களிலும் சஞ்சாரம் பண்ணினவனிடத்தில் அதிக கோபமிராது. ஏனென்றால், அவன் தன்னிலும் கோபிகளான பலரைச் சந்தித்துக் கோபத்தினால் அவர்கள் அடைந்த இடையூறுகளைப் பார்த்தும் கேட்டும் இருப்பான். கல்வியும், கேள்வியும், செல்வமும் மிகுந்திருந்தாலும் கர்வம் அடைய மாட்டான். ஏனெனின், தன்னிலும் மேலானவர்கள் பல தேசங்களி லிருப்பதைக்கண்டு வெட்கி வந்திருப்பான். நமது அங்கிலேய ராஜாங்கத்தார் பிரஜைகளைப் பக்ஷபாதமின்றிப் பொதுவாகப் பரிபாலித்து வருவதற்கு ஒரு நியாயம் உண்டு. அதென்னவெனில், அவர்கள் ஆதிகாலந் தொடங்கிப் பற்பல தேசங்களிலும் சஞ்சாரஞ் செய்து, அங்கங்கே யுள்ள ஜனங்களோடு கூடிக் குலாவி, அவர்களுடைய

கடைபுடை பாவனைகளை இகழாமல் அவைகளி லுள்ள சாராம்சங்களைக் கிரகித்துக்கொண்டு, ஜாதி யாசாரங்களென்கிற வலையிலும், சமயாசார மென்கிற படுகுழியிலும், ராஜாக்கள் கோப மென்கிற காட்டுத் தீயிலும் அகப்படாமலிருந்து வருவோமாக. அங்கிலேயப் பிரபுக்கள் உயர்ந்த அதிகாரங்களை வகித்திருக்கையில் பிரவும் அமைதியாயும், சீராயும் காரியங்களை நடத்தி வருவதை நாம் நமது நாடெங்கும் பார்க்கிறோ மல்லவா? இதற்கு முக்கிய காரணம் என்ன வெனில், அவர்கள் நமது நாட்டாரைப்போல் கிணற்றடிப் பிள்ளையார்களாகி ஓரிடத்திலேயே யிராமல், வெகு தூர தேசத்திலிருந்து பல தேசங்களின் வழியாய் நமது நாட்டிற்கு வந்து, வட கோடி முதல் தென் கோடி வரையிலுள்ள பற்பல ஜில்லாக்களில் அடிக்கடி மாற்றப்படுவதால் தேச சஞ்சாரத்தில் தேர்ந்து வருவதேயாம்.

III. லப்தஹானி

அல்லது

பேறழிவு

சோமசன்மா அரசகுமாரரை நோக்கி, 'இடருற்ற காலையில் அறிவு குன்றாதவன், குரங்கு முதலையினின்றும் விடுபட்டாற்போல் பெருந் துன்பத்தினின்றும் மீளுவான்' என, சிறுவர்கள், 'அஃது எவ்வண்ணம்? சொல்லுக' என்றனர். ஆசிரியன் சொல்லலுற்றனன்:

கங்கைக் கரையில் நாவல் மரத்தின்மேல் சுமுகன் என்னும் ஒரு வானரம் சிறிதுகாலம் வாசம் பண்ணிக்கொண்டு இருக்கையில், அங்கே வந்த ஓர் இளைத்த முதலையைப் பார்த்து, 'நீ என் கிருகத்துக்கு விருந்தாக வந்தமையால் நாவற்பழம் தருகின்றேன் உனக்கு' என்று சில பழங்களைக் கொடுக்கத் தின்று அத்தியந்த சந்தோஷத்துடனே தன்னிடத்திற்குப் போய், அன்று தொடங்கித் தினந்தினம் வந்து நானா வார்த்தைகள் பேசிக்கொண்டு, இரண்டும் அந்நியோந்நியமா யிருக்கையில், ஒருநாள் முதலை சில கனிகளைக் கொண்டு வந்து தன் இல்லாட்குக் கொடுக்க, அது தின்று, அக்கனி அமிர்தம்போ லிருக்கக்கண்டு, தன் நாயகனைப் பார்த்து, 'பிராணநாதா! இந்தத் தித்திப்பான கனிகளை எங்கிருந்து கொண்டுவந்தீர்?' என, ஆண் முதலை, 'சுமுக வானரன் என்னும் என் நண்பன் எனக்கு நாடோறுங் கொடுக்க, நான் அங்கேதானே அவற்றைப் புசித்துக்கொண்டுவந்தேன்; இன்றைக்கு நான் தின்று மிகுந்ததை உனக்குக் கொணர்ந்தேன்' என, இம்மொழிகளைக் கேட்டுப் பெண் முதலை, 'இத்தீங்கனி தின்பவன் ஈரல் அமிர்தத்திற்கு ஒப்பாயிருக்கும்;

அதைக் கொணர்ந்து எனக்குக்கொடு ; அதனால் நான் மூப்புச் சாக்காடு இல்லாமல் உன்னோடு நெடுங்காலஞ் சுகித்திருப்பேன்' என, இதைக்கேட்டு முசலி, 'என் உயிர்க்கு உயிரா யிருக்கின்ற நட்டோனையே அவ்வானரத்துக்கு நீயேன் இந்தத் தீங்கு நினைக்கின்றாய் ?' என அது, 'நான் உனக்கு அகத்தியாக இருந்தால் அதன் ஈரலைக் கொணர்ந்து கொடு ; இல்லாவிட்டால் நான் உயிர் வைத்துக்கொண்டு இரேன்' என, ஆண் முதலை, 'காதலியே ! சகோதரனிலும் மித்திரன் அதிகனாதலால் அவனைக் குறித்து நீ அடம்பண்ண வேண்டாம்' என்று மோவாய்க்கட்டையைப் பிடித்துக் கெஞ்சிக்கொள்ள, அப் பெண்முதலை, 'நீ என்றைக்கும் என் பேச்சுக்குக் குறுக்குச் சொன்னதில்லை, இன்றைக்கு மாத்திரம் எனக்குக் குறைச்சல் பண்ணுகின்றாய் ; ஆதலால், இதோ நான் ஜீவனை விடுகின்றேன்' எனப் பிடிவாதஞ் செய்ய, அவ்வாண் பெண்ணின் நிச்சயத்தை அறிந்து, 'சுமுகனோ யான் சொல்லைக் கடவாதவனாயிருக்கின்றான் ; நீயோ பிடித்ததை விடாதவளாயிருக்கின்றாய் ; ஆதலால், நான் இருதலைக் கொள்ளி எறும்புபோல் ஆயினேன்' என்று இங்ஙனஞ் சொல்லிச் சுமுகனிடத்திற்குப் போயிற்று. அப்போது சுமுகன், 'நண்பனே ! இன்றைக்கேன் விசனமா யிருக்கின்றாய் ?' என, முதலை, 'மற்றொன்றும் இல்லை : உன் மச்சினிச்சி என்னைப் பார்த்து, "அற்பா ! நன்றி கெட்டவனே ! நீ யாராலே ஜீவனம் பண்ணுகின்றனையோ அவனை ஒரு நாளைக்காயினும் நமது வீட்டிற்கு அழைத்து வந்து விருந்திட வேண்டாவோ ? அவன் வீட்டிற்கு மாத்திரம் வெட்கமில்லாமற் போய்ப் போய் நல்ல பழங்களைத் தின்னுகின்றனையே" என்று இப்படித் திட்டிக் கோபித்தாள்.

ஆதலால், நீ என் வீட்டிற்கு வா; உன்னைக் குறித்துப் பல பல பதார்த்தங்கள் தேடி வைத்துக்கொண்டு வழி பார்த்து உட்காந்துகொண் டிருக்கிறாள்' என, வானரம், 'நண்பனே! என்னால் தண்ணீரில் வரக் கூடாது; நீ என் பிரியமுள்ள மச்சினியை இங்கே கூட்டிக்கொண்டு வா' என, மகரம், 'சுமுகனே! நான் கங்கைக் கரையில் இருக்கின்றேன், நீ என் முதுகின் மேல் உட்காந்து கொண்டு வா; நோவாமற் கொண்டு போகிறேன்' என, அதன்கண் நம்பிக்கை வைத்துக் குரங்கு அப்படியே உட்காந்துகொண்ட மாத்திரத்தில் முதலை தண்ணீரிற் குதித்துப் போகையில், வானரம், 'எனக்கு அச்சமா யிருக்கின்றது; மெள்ள மெள்ள நட' என்றது. அதைக் கேட்டு முதலை, 'இப்போது சுமுகன் நம்முடைய சுவா- தீனத்தில் இருக்கின்றான்; இனி இவனுக்கு நம் கருத்தைத் வெளியிடுவதற்குக் குறை யென்ன இருக்- கிறது? உரலில் அகப்பட்டது உலக்கைக்குத் தப் புமோ?' என இங்ஙனம் தனக்குள் தீர்மானித்துக்- கொண்டு முதலை, 'மித்திரா, உன் இஷ்ட தேவதையை நினை; என் பெண்சாதியின் பிடிவாதத்தால் உன்னைக் கொண்டு போகின்றேன்; நீ நேற்றுக் கொடுத்த நறுங்- கனிகளை என் மனைவி தின்றதன் மேல், "இத் தன்மை- யான தீங்கனியைத் தினமும் தின்னுகின்ற பாக்கியவான் ஈரல் கேவலம் அமிர்தத்தை ஒத்திருக்கும்; ஆதலால், நீ அவன் ஈரலை எனக்குக் கொணர்ந்து கொடாவிடில் நான் பிராணனை வைத்திரேன்" என்றாள். யான் அதைக் குறித்துத்தான் உன்னைக் கொண்டு போகின்றேன்' என அதைக் கேட்டு வானரம், 'ஓகோ, இப்படி யென்று எனக்கு முன்னரே தெரிந்திருந்தால் அந்த மரத்தின் மேல் ஒளித்து வைத்திருக்கின்ற அந்த ஈரலை உனக்கு

அங்கேயே கொடுத்திருப்பேனே! வெற்றிருதயனாய்ப் போயி இருக்கையில் என்னை விருந்துக் கொண்டு வந்தாயே!' எனக் கிலேசப்பட, அப்போது மகரம், 'என் பிராண மித்திரா! அதைக் கொடுத்தால் அவள் சந்தோஷமடை-வள்' என்று சொல்லி, அவ் வானரத்தை அதிசீக்கிரத்-தில் கொண்டுவந்து அதன் இடத்தில் விட்டவுடனே, வானரம் குதித்து மரத்தின்மேல் ஏறிக்கொண்டு, 'இன்-றைக்குக் காலன் கையிலிருந்து விடுபட்டேன்' என்று மகிழ்ந்துகொண்டு இருக்கையில், முதலை, 'மித்திரா! ஈரலைச் சுருக்காய்க் கொடு, அதை உன் அண்ணியாருக்-குக் கொடுத்துவிட்டு வருகிறேன்' எனக் கூறக் கேட்டு, வானரம் நகைத்து, 'மூடா, துஷ்டா, ஈரல் உடம்பை விட்டு இருக்குமோ! அஃதிருக்கட்டும், நீ விசுவாச காதகன், ஆகலால் இனி இங்கிருக்க வேண்டாம்; சீக்கி-ரத்திற் புறப்பட்டுப் போ, உன்னைப் பார்க்க என் கண்-கள் கூசுகின்றன' என்று இங்ஙனம் சலித்துச் சொன்ன-வுடனே, முதலை பச்சாத்தாபப்பட்டு, 'நான் இவனுக்கு வழியில் உண்மை சொல்லிவிட்டேன்: இப்போது மறுபடியும் விசுவாசம் வரப் பேசி இவனைக் கொண்டு போகவேண்டும்' என்று ஆலோசித்து, 'மித்திரா! நான் உன்னைப் பரிகசிக்கலாம் என்று இவ்வாறு சொன்னேன்; மேலும் உலகத்தில் நடவாத உன் பேச்சை நிஜமென்று என்னைத் திருப்பிக் கொண்டு வரவில்லை; ஈரல் சரீரத்தை விட்டு வெளியிடத்தில் இராது என்பது சிறு பிள்ளைக்குந் தெரிந்ததுதானே; நான் இது விளையாட்டுக்குச் செய்-தேன்; ஆகலால், நீ என் வீட்டுக்குக் கிலேசமும், பய-மும் இல்லாமல் வா; உன்பொருட்டு என் பெண்-டாட்டி வழி நோக்கிக் கண் பூத்துப் போகக் காத்துக்-கொண்டு இருப்பாள்' என, சுமுகன், 'பசித்தவனது

விசுவாசத்தில் நம்பிக்கை வைக்கலாகாது ; பிரியதரிசனனைக் கங்காதத்தன் அஞ்சி மீண்டும் காணவில்லை' என, அப்போது முதலே, 'பிரியதரிசனனுக்கு அவனேன் அஞ்சினான் ?' என, வானரம் சொல்லலுற்றது.

'ஒரு கிணற்றிலிருந்த **கங்காதத்தன்** என்னும் ஒரு பெருந் தவளையை மற்றைத் தவளைகள் மிகவும் வருத்தப்படுத்திக்கொண்டு இருந்ததினால், அஃது இராட்டினத் தோண்டி நெறியே வெளியில் வந்திருந்து, 'இந்தத் தாயாதிகள் வலியவரும், பலருமாயிருக்கிறார்கள் ; இதற்கென்ன செய்வோம்' என்று எண்ணமிட்டுக்கொண்டிருக்கையில், ஒரு பாம்பின் புற்றைப் பார்த்து, வழிப்போக்கர் காலில் தைத்த முள்ளை முள்ளாலேயே வாங்குவதுபோல், இந்தப் பாம்பை நமது வீட்டுக்குக் கொண்டுபோய் அப் பங்காளிகளைக் கொல்லவேண்டும்' என்று நிச்சயித்து, வளையின்கிட்ட இருந்து பாம்பைக் கூவ, பாம்பு, 'இவன் மாந்திரிகனோ, அன்றி நம்மைக் கொல்ல வந்தவனோ, கூப்பிடுகின்றவன் இன்னவன் என்று தெரியவில்லை ; ஆதலால், இவனை இங்கிருந்தே கேட்க வேண்டும்' என்று தீர்மானித்து, 'நீ யார் ?' என, மண்டூகம், 'நான் கங்காதத்தன் என்னும் மண்டூக ராஜன் ; உன்னைச் சரணமாக அடைந்தேன்' எனக் கேட்டுப் பிரியதரிசனன், 'நெருப்புக்குந் துரும்புகளின் சேர்க்கை நில்லாததுபோல, நான் உன் பரம சத்துருவாயிருக்கையில் நீ இங்கே வந்து இந்த விபரீத பாஷணம் ஏன் பண்ணுகின்றாய் ?' என, கங்காதத்தன், 'என்னை மாற்றார் வருத்துகிறார்கள் என்று உன்னிடத்திற்கு வந்தேன் ; நீ எங்கள் ஜன்ம சத்துரு என்பது மெய்யே ; ஆனாலும், வலிய பகைவர்களை வைரிகளைக் கொண்டே

அழிக்கவேண்டும் என நெஞ்சு கூறுகின்றது' எனக் கேட்டு, அந்தச் சர்ப்பம், 'என் வாயு அங்கெப்படிக் கிடைக்கும் ?' என, மண்டூகம், 'உன்னை நான் அழையாமாகக் கொண்டு போவேன்' என, அதைக் கேட்டுப் பிரியதரிசனன், 'நாம் தீனியைக் குறித்து என்றைக்கும் விசாரப்பட்டுக்கொண் டிருக்கின்றோம் : இவ் வாசாரம் தானே வந்து இன்றைக்கு நம்மை அழைத்துக்கொண்டுபோக இருக்கையில் அலசியமேன் பண்ணவேண்டும் : வலிய வந்த சீதேவியை வேண்டா என்று தள்ளலாமோ ?' எனத் தனக்குள் ஆலோசித்துக்கொண்டு தவளையின் பின்னே வர, தவளை அதை இராட்டினத்தின் வழியாகக் கொண்டுபோய்த் தன் வீட்டில் வைத்துக்கொண்டது. அந்தப் பாம்பு தவளைகளை யெல்லாம் தின்றது. பிறகு கங்காதத்தனைப் பார்த்து, 'மித்திர ! உன் சத்துருக்களை யெல்லாம் கொன்றபடியால் எனக்கேதாவது ஆகாரங் கொடு' என, தவளை, 'நீ உன் சிநேகிதன் காரியத்தைச் செய்தாய் : இப்போது வந்த வழியே வீட்டுக்குப் போகலாம்,' என, அதைக் கேட்டுப் பாம்பு, 'கங்காதத்தா ! அந்தப் பிலத்தில் வேறொருவன் வந்து தங்கியிருக்கும் ; யான் அங்கே போய் என்ன செய்வேன் ? நீயே உன் சமுதாயத்திலிருந்து எனக்குத் தினம் ஒவ்வொரு தவளை கொடுத்துக்கொண்டு வா ; இல்லாவிட்டால் நான் எல்லோரையும் ஒருங்கே கொல்லுவேன்' என, இவ்வார்த்தையைக் கேட்டுக் கங்காதத்தன் அஞ்சி, நிதம் ஒரு தவளை விழுக்காடு கொடுத்துக்கொண் டிருக்கத் தின்று, கடைசியில் ஒரு நாள் கங்காதத்தன் புத்திரனையும் தின்றுவிட்டது. அதைக் கங்காதத்தன் மனைவி பார்த்து மிகவும் இடும்பையுற்று, 'கங்காதத்தரே ! நீர்

இக்கொடியோனைக் கொண்டுவந்து குலத்தை நாசம் பண்ணினீர்; இனி இவ்விடம் விட்டுப் புறப்படும்: இல்லாவிடில் இவனைக் கொலை செய்யச் சூழ்ச்சி செய்யும்' என, இதைக்கேட்டு ஆராய்ச்சி செய்துகொண்டிருக்கையில், பாம்பு, 'எனக்கு ஏதாயினும் தின்னக் கொடு' என, கங்காதத்தன், 'மித்திரா! நான் இருக்கையில் நீ தீனிக்கேன் விசாரப்படுகின்றாய்? இப்போது என் மனைவியை யனுப்பி, வேறு கிணற்றிலிருந்து இன்னும் மண்டூகங்களை அழைப்பிக்கின்றேன்; அதுவரையும் நீ சும்மா இரு' எனக் கேட்டுப் பிரியதரிசனன், 'நீ எனக்கு அன்னதாதா ஆதலால் பிதாவாக இருக்கின்றாய்; உடனே வேறு தவளைகளை அழைப்பி' என, பின்னர் தன் மனைவியை மற்றொரு கூபத்திற் போக்கி, 'போனவள் இன்னும் வரவில்லை; நானே போய் அநேகந் தவளைகளைக் கொண்டுவருகின்றேன், நீ இங்கே சுகமா இரு' என்று சொல்லித் தானும் இராட்டின வழியே புறப்பட்டுப் போயிற்று. பின்பு, பிரியதரிசனன் தவளைகளைக் குறித்து வழிபார்த்துக்கொண்டு அங்கே யிருந்து, அப்படி வெகு நாள் கழிக்கையில், மற்றொரு வளையிலிருந்த பல்லியைப் பார்த்துப் பிரார்த்தித்தது; 'ஓ பல்லியே! உனக்கும் கங்காதத்தனுக்கும் மிகவும் சினேகம்: ஆகையால், அவனிருக்கின்ற இடத்துக்குப் போய், உன்னைப் பிரியதரிசனன் அழைக்கின்றான் என்றும், இனி உனக்குத் துரோகம் பண்ணினால் தனக்கு ஆணை யிருக்கின்றது, நீ மனத்திற் சிறிதும் ஐயப்படாதே என்றும் இவ்வாறு சொல்' என, அதன் உத்தரவைப் பெற்றுக்கொண்டு அக் கவுளி கங்காதத்தன்பாற் போய் எல்லாச் செய்தியையும் சொல்ல, கங்காதத்தன், 'பசித்தவன் விசுவாசத்தை நம்பலா-

சாது; நீ போய்ப் பிரியதரிசனனுடனே, "துஷ்டா! இனிக் சங்சாரத்தன் வாரான்" என்று சொல்' என, சவுளி போய்ப் பாம்புக்கு இவற்றை யெல்லாம் சொல்லிற்று. அப்படியேபோல நான் மீண்டும் உன் வீட்டுக்கு வாரேன்' என, இதைக் கேட்டு முதலை, 'நீ வாராவிடில் எனக்கு நன்றி மறந்தமை சம்பவிக்கும்; ஆதலால், நான் பட்டினி யிருந்து என்னைக் குறித்து இங்கேயே பிராணனை விடுவேன்' என, அப்போது வானரம், 'ஒரு நரி, சிங்கராஜனுக்குக் கழுதையை வருவித்து எப்படிக் கொன்றதோ, அப்படி நீயும் என்னைக் கொலை செய்ய விரும்புகிறாய்' என, முதலை அதைக் கேட்டு, 'அஃது எப்படி?' என, குரங்கு சொல்லுகின்றது:

ஓர் அடவியி லிருக்கிற **கராளகேசரி** என்னும் சிங்கத்துக்குத் தேகம் சௌக்கியமில்லாது இருந்தமையால், **தூசரன்** என்னும் நரியைப் பார்த்து, 'பிரதானி! இன்றைக்கு நான் எங்கும் போகக் கூடாது; நீயே போய் யாதாயினும் இரை கொண்டு வா' என, அந்நரி நாலண்டையும் ஓடித் திரிகையில் ஒரு கழுதையைப் பார்த்து, 'மாமா! கும்பிடுகின்றேன; நீ இப்போது மிகவும் இளைத்துப்போனாய்' என, அப்போது கழுதை, 'மருமகனே! என்ன சொல்வேன், எனக்குத் தலைவன் வண்ணான்; அவன் அத்தியந்த கண்டகன்; என்மேல் பெருஞ் சுமைகளைப் போட்டுக் கொல்லுகின்றதேயன்றி, வயிற்றுக்குப் புல்லுச் செத்தை போடுகிறதில்லை; புழுதியிலிருக்கும் அறுகங் கட்டையைத் தின்றுகொண்டு இருக்கின்றேன். அஃது உடம்புக்கு எங்ஙனம் புஷ்டி கொடுக்கும்? என் பிழைப்பும் ஒரு பிழைப்போ!' என, நரி, 'இப்படியிருந்தால் நீ என்னோடுகூட வா; ஆற்றங்கரையிற் பச்சைப் புல் நிரம்ப

இருக்குமிடம் உனக்குக் காண்பிக்கிறேன்' என, அதைக்கேட்டுக் கழுதை, 'அவ்விடம் நன்றாயிருக்கும், அங்கே நான் ஒன்றியா யெப்படி யிருப்பேன்' என, தாசரன், 'மாமா ! அங்கே துணையில்லாமல் அதிக-மாயிருக்கிற கழுதைகள், "எங்களுக்குத் தக்க சிநேகன் அகப்பட்டால் கொண்டுவர வேண்டும்" என்று எனக்-குச் சொல்லியிருக்கின்றமையால் உனக்கு உரைத்தேன்' என, அதைக்கேட்டு ஆசையினால் கர்த்தபம் நரியின் பின்னே போக, அதைக்கண்ட சிங்கம் பாய்ந்தவுடனே நீர்செவியன் ஓட்டம்பிடித்தது ; பிடிக்கவே அந்நரி கோபித்துக் கண்டீரவத்தைப் பார்த்து, 'இன்று உன் வீரத்தை நான் நன்று பார்த்தேன் உன்முன் எதிர்ப்-பட்ட கழுதையும் ஓடிப்போயிற்று ; இனி நீ யானையை எவ்வாறு அடிப்பாய் ?' என, அதைக் கேட்டுக் காள-கேசரி தலையிறக்கமாகயிருக்க, மீட்டும் நரி, 'மற்று மொருதரம் நான் அவனை உன்னண்டை கொண்டுவரு-கின்றேன் ; அப்போதாயினும் ஏமாறாமல் அவனை அடிக்கவேண்டும்' என்று சொல்லி, நீர்செவியனருகே போய், 'நீ யேன் ஓடிப்போகின்றாய் ?' என, கழுதை, 'மருமகனே ! என்னை இந்நேரம் எமன் வாயிற் கொடுத்-திருப்பாய்; அதிர்ஷ்டத்தினால் பிழைத்தேன்; வச்சிரம் போல் நகத்தையுடைய அப்பிராணி யார் ?' என, அப்போது நரி நகைத்து, 'அம்மான் ! அந்தப் பெண்-கழுதை உன்னைப் பார்த்து மிதமற்ற களிப்போடே உன்னண்டை வருகையில் நீ வீணாய்ப் பயந்தோடி னாயே ; அவள் இப்போது நீள்செவிய மன்னனைக் கல்-யாணம் பண்ணிக்கொள்ளாவிட்டால் நான் உயிர் வைத்திரேன் என்று நிச்சயித்திருக்கின்றபடியால் நீ விரைவாக வரவேண்டும் ; வராவிடில் பெண்கொலை

கெரிகிம்' என்றிப்படி அது உரைக்கக் கேட்டுக் குண்டு-கழுதை அதன் பின்னே போகச் சிங்கம் க்ஷணமே அடித்து, 'என்னைச் சுட்டி நரியைக் காவல் வைத்தாற் போல்' அதற்கு நரியைக் காவல் வைத்து நீராடப்-போக, இதற்குள் நரி அதன் ஈரலையும் காதையும் தின்றுவிட்டது. பின்பு சிங்கம் வந்து பார்க்கையில் ஈரலும் காது மில்லாமையால் ஜம்புகத்தைப் பார்த்து, 'இவை யார் தின்றது?' என, நரி, 'இக் கழுதைக்கு ஈரலும் காதும் இல்லை: இருந்தால் அது மறுபடியும் உன்னண்டை வருமா?' என, அஃது இதை உண்மையென்று நம்பி நரிக்குள்ள மாம்ச பாகங் கொடுத்து, மற்றதைத் தின்றது. அப்படி நீ என்னைக் கொல்ல விரும்புகின்றாய்' என, முதலை, 'எவன் தன் பிரயோசனத்தை விட்டு உண்மையைச் சொல்லுகிறானோ அவன் யுதிஷ்டிரன் என்னும் குயவனைப்போல் துன்பமடை-வான்' என, வானரம், 'அஃதெப்படி?' என்று கேட்க, மகரம் சொல்லுகின்றது.

'ஒரு குப்பத்தில் **யுதிஷ்டிரன்** என்னுங் குயவன் பானைகளை வெடிக்கையில் ஓட்டாங்குச்சு ஒன்று கபாலத்தில் தாக்கி, கத்தி வெட்டுப்போல் காயப்பட்-டது. பிறகு சிலநாள் கழித்து அத்தேசத்திற் கருப்பு வந்தமையால், அவன் மறுதேசத்துக்குப்போய் ராஜ-னிடத்திற் சேவகத்தில் அமர, அவ்வரசன் அவ்வடுவைக் கண்டு, இவன் போர்க்களத்தில் முன் காயம் வாங்கின சூரன் என்றெண்ணி, அவனை மிகவும் உபசரித்து, அவனிடத்தில் தயையா யிருந்தான். அது முதற் கொண்டு மற்றைச் சேவகர்கள் அவன் மேற் பொறா-மையா யிருக்கத் தலைப்பட்டு, ராஜன் தயை யிருக்கை-யால் ஒன்றும் பேசாமலிருந்தார்கள். அப்படி யிருக்-

கையில் ஒரு நாள் ராஜன் ஏகாந்தமாய் யுதிஷ்டிரனைப் பார்த்து, 'உனக்குக் கத்தி வெட்டு யாருடைய சண்டையிற் பட்டது' என, குயவன், 'ராஜனே! நான் சூளைபோட்டுக்கொண் டிருக்கையில் விழுந்து ஓடு பட்டு இக்காயம் உண்டாயிற்று' என, இதைக் கேட்ட மாத்திரத்தில் ராஜன் நாணிக் குலாலனைப் பார்த்து, 'நான் மோசம் போனேன்; இஃது இரண்டாம் பேருக்குத் தெரிவதற்குள்ளே நீ ஓடிப் போ, சூரர்கள் கண்டால் நீ உன்னுயிரைக் காணமாட்டாய்' என, குயவன், 'சுவாமி, என் கை கால்களைக் கட்டி ரணரங்கத்திற் போட்டு, என் அஸ்த லாகவத்தைப் பார்த்தருளும்; வாய் புளித்ததோ, மாங்காய் புளித்ததோ என்று சொல்லலாமோ?' என, ராஜன், "நீ பிறந்த குலம் போர்க்களத்தில் வருவ தன்று; அங்ஙனமாக, நீ நரிக்குட்டி போல் ஏன் சும்மா துள்ளுகின்றாய்? குலைக்கிற நாய் வேட்டை பிடிக்குமோ?' என, குலாலன், 'நரிக்குட்டி யாரிடத்தில் தன்னைப் புகழ்ந்துகொண்டது? சொல்லும் ஐயா!" என, அரசன் சொல்லுகின்றான்.

'ஒரு வனத்தில் பெண் சிங்கத்தோடு கூடி யிருந்த ஆண் சிங்கத்துக்கு இரண்டு குட்டிகள் உண்டானவுடனே, பல விலங்குகளைக் கொன்று, தன் பெண் சிங்கத்தின் கையிற் கொடுத்து அதைப் பார்த்து, "இப் பிள்ளைகளுக்கு வினைத் தெரிகின்ற வரைக்கும், இவர் களை நம்பித் தனியே விட்டிராதே" என்று பத்திரஞ் சொல்லி, நித்தியம் தான் மாத்திரம் போய் மிருகங்களைக் கொன்று கொண்டுவந்து கொடுத்துக் கொண்டிருக்கையில், ஒரு நாள் அதற்கு இரை ஒன்றும் கிடையாமல் திரும்பி வீட்டுக்கு வரும்போது, வழியில் கையிலகப்பட்ட ஒரு நரிக் குட்டியை அடியாமற் பிடித்துப்

பெண்ணண்டை கொண்டுவந்து, இன்றைக்கு இரைவிட வேறொன்றும் கிடைக்கவில்லை' என, அப் பெண்சிங்கம் அக்குட்டி மிகவுஞ் சிறியதா யிருப்பதைப் பார்த்துத் தன் குட்டிகளில் ஒன்றாகக் காப்பாற்றிக்கொண்டு வருகையில், அம் மூன்றும் பெரியவைகளாய் ஒரு நாள் காட்டிற்குப் போனபோது, அங்கொரு யானையைக் கண்டு, 'இதன் கிட்டப் போகலாகாது' என்று சொல்லி-விட்டு, நரிக்குட்டி வீட்டுக்கு ஓடிப் போயிற்று. மற்ற இரண்டும் அதைப் பார்த்து, அதன் பின்னே வீட்டுக்கு வந்து, தன் தாயுடனே அந்த நரியின் காரியத்தைச் சொல்ல, நரிக்குட்டி அதைக் கேட்டு மிகவும் கோபித்து, 'நான் இவர்களிலும் சௌரியத்திற் குறைந்தவனோ? இவர்கள் என்னைப் பழித்து நகைப்-பானேன்? கூழுக்கு மாங்காய் தோற்குமோ? நான் இவர்களைத் தண்டித்து, என் பராக்கிரமத்தைக் காட்டுவேன்; கொட்டினால் தேள் கொட்டாவிட்டாற் பிள்ளைப் பூச்சியா' என, அதைக் கேட்டு அப் பெண் சிங்கம் நரியை ஏகாந்தமாக ஓர் இடத்திற் கொண்டுபோய், 'நீ நரிக்குட்டி: உன் குலத்திற்கு யானையைக் கொல்லுகின்ற சக்தியில்லை: உன்னை நான் என் பால் கொடுத்து வளர்த்தமையால் இந்தப் பராக்-கிரமம் சொல்லிக்கொள்ளுகின்றாய்: இவர்கள் இனி உன்னை இன்னான் என்று அறிவதற்கு முன்னே, நீ புறப்பட்டு ஓடிப் போ; இல்லாவிட்டால் அவர்கள் கையில் அடியுண்டு இறந்து போவாய்' என, அதைக் கேள்விப்பட்டவுடனே ஜம்புகம் ஓடிப் போயிற்று. ஆதலால், 'நீ குசவனென்று வெளிப்படுவதன் முன்னே விரைவாய் இதை விட்டு ஓடிப் போ' என, அவன் அந்த ராஜாவின் உத்தரவின்படி ஓடிப்போனான்' என, இப்-

படி முதலையின் பேச்சைக் கேட்டுச் சுமுகன், 'ஸ்திரீக-ளின் கிருத்திரிமம் ஒருவருக்குந் தெரியாது; ஆகை-யால், அவர்கள் விசுவாசத்தை நம்பலாகாது' என, முதலை, 'இஃது எதனாற் சொல்லுகின்றாய்?' என, வானரம் சொல்லத் தொடங்கிற்று.

'தார நகரத்திற் குடும்பத்தோடுகூட இருந்த சத்-திய விரதன் என்னும் வேதியன் தனது மனையாட்டி எல்லாரோடுஞ் சலகம் பண்ணிக்கொண்டு இருக்கையில், அவன் அவள்மேல் வைத்திருந்த பேரன்பினால், தன் தேயத்தைத் துறந்து அவளை அழைத்துக்கொண்டு தேசாந்தரம் போகையில், அவ்வழியிற் பார்ப்பனி, 'நாயகா! எனக்கு மிகவும் தாக மெடுக்கிறது: எங்-கிருந்தாயினும் சிறிது தண்ணீர் கொண்டுவா' என, அவன் அவளை அங்கேயே வைத்துவிட்டுத் தண்ணீர்க்-குப் போய்வந்து, அவள் இறந்து பிணமாய்க் கிடக்-கிறதைப் பார்த்து மிகவும் புலம்பி வருந்தப் படுகை-யில், 'உன் வயதிற் பாதி இவட்குக் கொடுத்தாயானால் மீண்டும் எழுந்திருப்பாள்' என்று ஆகாயவாணி யுண்-டாக, அதைக்கேட்டுப் பார்ப்பான் பவித்திரத்தோடே பாதி வயதை மூன்றுதரம் உச்சரித்துக் கொடுக்க, அதனால் அவள் ஜீவித்தெழுந்து ஜலபானம் பண்ணி-னாள். பின்பு, ஒரு பட்டணத்திற் போயிறங்கி, அந்த-ணன் செலவு வாங்கக் கடைக்குப் போனபோது, அங்கே ஒரு முடவன் நேர்த்தியாகச் சங்கீதம் பாட, அதைக்கேட்டு அவள் அவனை விரும்பி அருகிற்போய், 'சிநேக! என்னை அங்கீகாரஞ் செய்; இல்லாவிட்டால் உனக்குப் பெண்கொலை வரும்' என, அதைக் கேட்டு அவன், 'இதோ, முடவனுக்குக் கொம்புத்தேன் கிடைத்-

தரும்' என்று பொங்கி அவள் கையைப் பிடித்துக்-கொள்ள, அப்போது அவள், 'இவ்வுடம்பை உனக்கு அர்ப்பணம் பண்ணினேன்; இனி நீ ஐயமில்லாமல் என்னுடனே வரலாம்' என, அப்படியே முடவன் அவளண்டை உட்கார்ந்திருந்தான். இதற்குள்ளே கடைச் சரக்குகள் வாங்கிக்கொண்டு வந்த அந்தப் பிராமணனுக்குச் சமையற்பண்ணி இலைபோட்டு, இம்-முடவனுக்குக் கொஞ்சம் அன்னங் கொடுக்கவேண்டும்' எனச்சொல்லி, அவனது உடன்பாட்டினால் அம்முடத்-துக்கு அன்னங் கொடுத்து, இருவரும் சாப்பிட்ட பிறகு பார்ப்பனத்தி, 'நாயக! நீர் என்னைத் தனியாக விட்டுப் போம்பொழுது எனக்குத் துணையில்லாமை-யால், இம் முடவன் எனக்குத் துணையாக இருக்கட்-டும்' என, அதைக்கேட்டு அந்தணன், இம்முடவனை நாம் எப்படிக் கொண்டுபோகலாம்?' என, அவள், 'நான் என் முதுகிற் கட்டிக்கொண்டு வருவேன்' என, 'நல்லது' என்று, அவள் கபடத்தை நிஜமென்-றெண்ணி, அதற்கு உட்பட்டான். பின்பு அவள் அவனைப் புடவையிற் சுற்றி முதுகிற் கட்டிக்-கொண்டு நடக்கையில், வழியிற் பிராமணன் இளைப்-பாய்க் கிணற்றங் கரையிற் படுத்துக் கண்ணயர்ந்ததைப் பார்த்து, அம்முடவனிடத்து ஆசக்தியினால், புருஷ-னைத் தாவிலுருட்டி, 'சனி தொலைந்தது' என்று, அம் முடவனை ஒரு பெட்டியில் வைத்து நோவாமல் எடுத்-துக்கொண்டு தேசாந்தரம் போகையில், அங்கே சேவ-கர்கள் அவள் தலைமேற் பெட்டி யிருப்பதைக் கண்டு, அவளைப் பெட்டித் தலையுடனே பிடித்துக் கொண்டு போய், அரசன் சமுகத்தில் விட்டார்கள். அப்போது அரசன் பெட்டியைத் திறப்பித்துப் பார்த்து, அதன்

கண் ஒரு முடவனைக் கண்டு, 'இவன் யார்? என்ன செய்தி?' எனப் பார்ப்பனியைக் கேட்க, அவள், 'இவர் என் பர்த்தா; இவர் நோயாளியா யிருக்கின்றதனால் இப்படித் தலையிற் சுமந்துகொண்டு போகின்றேன்' என, அரசன் அதைக் கேட்டு, அவள் கற்புடைமைக்கு மகிழ்ந்து, இவள் நமக்கு உடன்பிறப்பு என்று எண்ணி, அவளைத் தன்னிடத்தில் நிறுத்திக்கொண்டான். இங்கே இப்படி யிருக்கையில், அங்கே அவ் வழியிற் போன வழிப்போக்கன் ஒருவன் தாகத்துக்குக் கிணற்றில் இறங்கினபோது, அங்கு விழுந்து கிடக்கின்றவனைப் பார்த்து, மனமிரங்கி யெடுத்து வெளியே விட்டுப் போக, அவன் அங்கே பங்குவையும், மனைவியையும் காணமல், அங்கங்கே திரிந்து தேடிக்கொண்டு அந்த நகரத்திற்குள்ளே போனன். இவன் வருவதை அப் பார்ப்பனி பார்த்து, வேந்தனுடனே, 'இதோ வருகின்ற இச் சண்டாளன் என் பதிக்கு விரோதி' என்று முறையிட, அவ் வேந்தன், 'இவனைப் பிடித்துக் காவலில் வையுங்கள்' என்று சேவகர்கட்கு உத்தரவு செய்ய, அவர்கள் அப்படியே செய்யத் தொடங்குகையில், அவன் இறைவனைப் பார்த்து, 'ஓ ராஜசிகாமணி! நீர் தருமகுணமுள்ளவரா யிருக்கின்றீர்; ஆதலால், தேற விசாரியும்' என்று தன் குறைகளையெல்லாஞ் சொன்னன். அரசன் அதைக் கேட்டு ஒரு பஞ்சாயத்து நியமித்து அவர்களால், 'இப் பார்ப்பான் குற்றவாளி யல்லன், அவளே துஷ்டை' என்று அறிந்து, அவட்குத் தக்க தண்டனை செய்து வேதியனைச் சமாதானம் பண்ணினன். ஆதலால், 'மாதர்கள் அநர்த்தங்கட்கு மூலமாயிருக்கின்றார்கள். விவேகிகள் அவர் பேச்சுக்குக் காது கொடுக்கலாகாது. அப் பேச்சுக்குக் காதுகொடுத்து முற்காலத்திலே நந்தன

ராஜன் என்பவனும், வரருசி என்னும் பிரதானியும் சபை நடுவிலே மௌன மடைந்தார்கள்' என, முதலை, 'அஃதெப்படி?' என, வானரஞ் சொல்லலுற்றது:

'பராக்கிரமசாலியான நந்தன ராஜன் என்பவன் துரைத்தனம் பண்ணிக்கொண் டிருக்கையில், அவன் மனையாட்டி ஏதோ ஒரு காரணத்தாற் பிணங்கிக்கொண்டதைக் குறித்து அரசன் எவ்விதச் சமாதானம் செய்தும் கேளாமல், 'நீ வாயிற் கடிவாளம் போட்டுக்கொண்டு, உன் முதுகின் மேல் என்னை யெடுத்துக்கொண்டு, குதிரை போலக் கனைத்தால், நான் உன் பேச்சிற்குச் செவி கொடுப்பேன்' என, அப்போது நிருபன், பிரீதிக்காக அவள் சொன்னவண்ணஞ் செய்ய, அதைப் பிரதானியின் மனைக் கிழத்தி கேள்விப்பட்டு, அவளும் கோபமாய்த் தன் பதியுடனே பேசாமல் முறைக்கா யிருக்க, அவ் வேளையில் முழுதும் அறிந்தவனுடைய வரருசி யென்னும் மந்திரி, தன் மனைவிக்கு எவ்விதம் ஆறுதல் சொல்லியும் அவள் உடன்படாமல், 'நீ தலை மொட்டை யடித்துக்கொண்டு என்னை வலசாரி இடசாரியாக வந்து சாஷ்டாங்க நமஸ்காரம் பண்ணுவையானால் உனக்கு நான் உடன்படுவேன்' என, மந்திரி அவள் பிரியத்திற்காக அங்ஙனஞ் செய்து, மறுநாளுதயத்திற் சபையில் வந்திருந்த அரசனிடத்திற்குப் போக, அரசன் பிரதானியைப் பார்த்து, 'நீ எதற்காக முண்டனம் பண்ணிக்கொண்டாய்?' என, மந்திரி, 'மகாராஜா அவர்கள் குதிரையைப் போலக் கனைத்தபடியால் அடியேன் முழுக்க மொட்டை யடித்துக்கொண்டேன்' என்றான். இப்படி யிருவர் பேச்சையுங் கேட்டு ஜனங்கள் நடந்த செய்தி யெல்லாம் அறிந்துகொண்-

டார்கள். ஆதலால், மாதர்களுடைய அநுசித வார்த்தைகளைக் கேட்டு மௌனமாயிருக்க வேண்டும்; அங்ஙனஞ் செய்யாது அவரோடு மறுமொழி சொல்லுகின்றவன், 'புலித்தோலைப் போர்த்துக்கொண்டு இருந்த கழுதையைப் போல் கிலேசம் அடைவான்' என, 'அஃதெப்படி?' என்று முதலை வினவ, குரங்கு விடை விடுக்கின்றது:

'நருமதை யாற்றங் கரையில் பவானி யென்னும் ஓர் வண்ணான் தன் கழுதை தீனி இல்லாமல் நாளுக்கு நாள் இளைத்துப் போவதைக் குறித்து விசனப்பட்டுக்கொண்டு இருக்கையில், ஒரு நாள் நினையாமற் கிடைத்த புலித்தோலைக் கொண்டுவந்து களிப்புடனே இரவில் அந்தக் கழுதையின்மேற் போர்த்துஊரார் பயிர்களில் மேய்வித்துக்கொண்டு இருக்கும்போது, குடிகள் இது புலி யென்று நினைந்து ஓடிப்போவார்கள். இப்படி யிருக்கையில், இப் பெருவாயன் மிகவும் பெருத்து, ஒரு நாள் பயிரில் தானியத்தைத் தின்றுகொண்டு இருக்கும்போது ஒரு பெண் கழுதையின் கூச்சலைக் கேட்டு மிகவும் பெருங் கூச்சலிடத் தொடங்கிற்று. அப்போது அக் கொல்லைக்காரன் இது புலியன்று என்று நிச்சயித்து, அதைப் பிடித்து இடிப்பொடிய அடித்தான். ஆதலால், மாதர்களுடனே வீணாகப் பேசலாகாது. இப்படியிருக்கையில் 'நீ அவளைக் குறித்து என்னைக் கொல்ல இருந்தாய். இஃது உன் குற்றமன்று. விசுவாச காதகம் பண்ணுதல் உன் ஜாதிக்கே இயல்பாயிருக்கின்றது. அது சாதுக்களின் சேர்க்கையாலும் குணமாகாது; மேலும் துஷ்டர்கட்கு உபதேசித்துப் பயனில்லை' என்று இப்படிப் பேசிக்கொண் டிருக்கையில், ஜலத்தி லிருந்து ஒரு ஜல-

சரன் வந்து 'உன் மனையாள் எதிர்பார்த்துக் கொண்டிருந்து பட்டினியால் இறந்தாள்' என, அந்த நாராசம் செவியிலேறினவுடனே, முதலை, 'நான் கொடும்பாவியாதலின் இத்தன்மைய இடரில் அகப்பட்டேன் ; முதலில் நண்பனுக்குப் பொல்லாங்கை நாடினேன் : இரண்டாவது மனைக்கிழத்தியும் இறந்தாள் ; வீடும் காடாயிற்று : இல்லக்கிழத்தி இல்லாத இல்லம் காடேயன்றோ ? ஆதலால், மித்திரா ! என் பிழையைப் பொறுத்துக்கொள். நான் உனக்குத் துரோகம் நினைத்ததனால் இத் துக்கிக்கின்றேன்' என, இதைக் கேட்டு வானரம், 'எவள் பேச்சினால் நீ கொலைத்தொழிலுக்கு ஏற்பட்டனையோ அவள் சாவைக்குறித்து இப்போது மெலிந்து உயிர்விட நினைக்கின்றாய் ; அப்படிப்பட்ட துர்க்குணியின் சாவுக்குக் களிக்கவேண்டும்.

ஆதலால், அந்தத் துஷ்டையைக் குறித்துச் சோகமுறாமல், 'முதலாய், நீ உன் சாகைக்குப் போ' என, மகரம் தன் வீட்டுக்குப் போனவிடத்தில் அங்கே வேறொரு முதலை இருக்கக்கண்டு, 'நம் இடத்தையும் ஒருவன் கைக்கொண்டான் ! இதற்குச் சாம பேததான தண்டங்களில் ஒருபாயம் செய்வதைக் குறித்து நம்முடைய சிநேகிதனைவிட சொல்லுகின்றவர்கள் இல்லை : அவனையே வினவவேண்டும்' என்று உறுதி செய்து, மீண்டும் நாவன் மரத்தண்டை வந்து சுமுகனைப் பார்த்து, 'மித்திரா ! "பட்ட காலிலே படும் கெட்டகுடியே கெடும்" என்றாற்போல, என் அபாக்கியத்தினால் என் வீட்டையும் ஒருவன் பிடுங்கிக்கொண்டான் ; இனி நானென்ன செய்வேன் ?' என்று முறையிட, வானரம், 'நன்றி கெட்டவனே ! எனக்குப் பொல்லாங்கு தேடின நீ மறித்தும் மூடத்தனமாய்

என்னிடத்துக்கு ஏன் வந்தாய்? மூடனுக்கு உபதேசித்தால் அவன் வீடுடையவனை வீடு இழக்கப் பண்ணுவான்' என, முதலை, 'அஃதெங்ஙனம்?' என, குரங்கு சொல்லத் தொடங்கிற்று.

'ஒரு மரத்தின்மேற் கூடுகட்டி அதில் வாழ்ந்துகொண்டிருந்த இரண்டு தூக்கணங் குருவிகள், ஆலங்கட்டியுடனே பெருமழை பெய்கையில் குளிரினாலே நளிர் பிடித்து, பல்லுக் கிட்ட நடுங்கிக்கொண்டு ஒரு மரத்தடியில் ஒதுங்கியிருந்து வருந்துகின்ற வானரத்தைக் கண்டு, 'உனக்குக் கைகால்களிருந்தும் குளிர் காற்று முதலிய துக்கத்தை, ஐயையோ, நீ யேன் அனுபவிக்கின்றாய்? நீ யேன் வீடு கட்டிக்கொள்ளவில்லை?' என்று இரக்கத்தாற் சொல்ல, இதைக்கேட்டு அத் துஷ்ட குரங்கு, 'ஊசிமூஞ்சி மூடா, நீ வல்லவனுக்குப் புத்திசொல்லுகின்றனையோ? எனக்கு வீடு கட்டுகின்ற சக்தியில்லை; அதைப் பிரித்து எறிகின்ற சாமர்த்தியம் உண்டு; இதோ பார்' என்று, அவற்றின் கூட்டைப் பிரித்து எறிந்தது. ஆதலால், 'கீழானோர்கட்கு உபதேசிக்கலாகாது' என, முதலை, 'அன்பனே, நான் குற்றவாளி யென்பது மெய்யே; ஆயினும் பழைய சிநேகிதனாதலால் உன்னைக் கேட்கின்றேன்' என, வானரம், 'நீ அங்கே போய்ப் பகையாளியோடு போர்செய்; மடிந்தாற் சொர்க்கம் அடைவாய்: வென்றால் வீடடைந்து சுகமுறுவாய்; முன்னொரு புத்திசாலி, உத்தமனுக்குக் கும்பீடும், சூரனுக்குப் பேதமும், காரியக்காரனுக்குத் தானமும், ஈடானவனுக்குத் தண்டமும் செய்தாற்போலச் செய்யவேண்டும்' என, முதலை, 'அஃதெங்ஙனம்?' எனச் சுமுகன் சொல்லலுற்றது:

'இம் மலையின்மேற் சதுரன் என்னும் ஒரு நரி பசியுடனே அங்கங்கே திரியுங்கால் ஒரு செத்த யானையைக் கண்டு, அதன் தோலைக் கிழித்து இறைச்சியைத் தின்னும் வல்லமை அதற்கு இன்மையால், அஃது அங்கு உட்கார்ந்திருக்கையில், அங்கே வந்த சிங்கத்தைக் கண்டு தண்டனிட, அது, 'நீ யார்?' என, நரி, 'நான் தங்களடியேன், தாங்களடித்த யானையைக் காத்து உட்கார்ந்திருக்கின்றேன்' என, சிங்கம், 'இது நான் கொன்றதன்று; வேறொருவன் கொன்று எறிந்தானோ! அன்றித் தானே மடிந்ததோ? எப்படி யிருந்தாலும் அதை நான் புசியேன்; இஃது உனக்கு வேண்டுமானால் எடுத்துக்கொள்' என, நரி, 'சுவாமி, இது நியாயந்தான்: பெரியோர்கள் தம் ஆண்மையாலே சம்பாதிக்கின்றார்கள்' என, சிங்கம் அதைக் கேட்டு வேறொரு வனத்திற்குப் போக, பின்னும் அங்கே வந்த ஒரு புலியைப் பார்த்து, 'அம்மான், நீ இக் காலன் முகத்திலே ஏன் எதிர்ப்பட்டாய்? இவ் யானையைக் கொன்று விழுத்தினச் சிங்கம் "இங்கே யாரேனும் ஒரு புலி வந்தால் அதற்குத் தெரியாமல் எனக்கு வந்து சொல்லுவாயானால், நான் அதைக் கொன்றெறிவேன்; நான் முன்னே ஒரு யானையை அடித்து மூழ்கப் போனவிடத்தில் ஒரு புலி அதை எச்சிற் பண்ணிற்று; அதுமுதல் புலியைத் தேடிப் பார்த்தும் அகப்படவில்லை" என்று என்னுடன் சொல்லி யிருக்கின்றான்' என, புலி அந்தச் சிங்கத்தின் உத்தரவைக் கேட்டு மிகவும் பயந்து, 'மருமகனே, நீ எனக்குப் பிராண தானம் செய்' எனச் சொல்லிக்கொண்டே ஓடிப் போயிற்று. மறுபடி ஒரு வானரத்தைக் கண்டு, 'முன்னே வந்த துஷ்டனைக் குறிப்பிட்டுப் போக்கினேன்;

இரண்டாமவனைப் பெற்றோய் ; இப்போது இதன் கையால் இதைக் கிழிப்பிக்க வேண்டும்' என்று தன்னுள்ளே நிச்சயித்துப் பின்பு, 'வானரா, நீ நெடு நாளைக்குப் பின்பு வந்தாய், மற்றும் பசித்திருக்கின்றாய் ; எனக்குச் சிங்கம் கொடுத்த இவ் யானையிறைச்சியை நீ கொஞ்சந்தின்று, சிங்கம் வருவதற்கு முன்னே சீக்கிரமாக ஓடிப்போ' என, குரங்கு அதைக் கேட்டு யானையைக் கிழிக்க, அதைப் பார்த்து நரி, 'வானரா, சிங்கம் சமீபத்தில் வந்தது ; இனி, நீ விரைவில் ஓடிப்போ' என, அதைக்கேட்டுக் குரங்கு பறந்தது. பின்பு, அது பிளந்த இடத்திலிருந்த மாம்சத்தை நரி தின்னுகையில், அங்கே வந்த வேறொரு நரியைச் சண்டையிட்டுத் துரத்தி, தான் வேண்டுமட்டும் இறைச்சிகளைத் தின்றது. ஆதலால், 'நீ அம் மகரத்தைக் கொன்று உன் வீட்டிற் சுகமாயிரு. வேறொரு தேயத்திற் சௌக்கியம் எல்லாம் கிடைக்குமாயினும் தனக்குச் சிநேகிதன் அங்கொருவனும் இல்லாவிட்டால், சித்திராங்கன்போல் தீங்குகள் அனுபவிக்க வரும்' என, முதலை, 'சித்திராங்கனுக்கு எப்படி அவ்வாறு நேரிட்டது ?' என, வானரம் சொல்லத் தொடங்கிற்று :

'அயோத்தியா நகரத்தி லிருந்த சித்திராங்கன் என்னும் ஒரு நாய், பஞ்சத்தினாற் சோறு கிட்டாமல், மறுதேயத்திற் சென்று, ஒரு கிருகஸ்தன் வீட்டுக்குப் போய், அவ்வீட்டுக்காரி சோறுபோட்டு ஆதரித்ததனால் அன்றுமுதல் வெகுநாள் வரைக்கும் அங்கேயிருந்து, ஒருநாள் சகசமாய் வீட்டுக்கு வெளியே வந்தது, வந்தவுடனே, அவ்வூர் மற்றை நாய்கள் இதன் மேலே விழுந்து அநேக இடத்திற் கடித்து, அதன்

உதிர மாம்சங்களை வெளிப்படுத்தியதனாலும் சித்திராங்கன் மிகவும் துக்கமடைந்து, என்ன பஞ்சம் வந்தாலும் சுயதேசத்தை விட்டு வரலாகாதெனத் தனக்குள்ளே தேறி, மீண்டும் அயோத்திக்கு ஓடிவந்து க்ஷேத்திரத்தில் அடைந்து உறவாகிய நாய்கள், 'சித்திராங்கா, அத்தேசம் எப்படி யிருக்கிறது?' என, சித்திராங்கன், 'அத்தேசம் செழிப்பாய் இருக்கின்றது; மாந்தர்களும் தயாசாலிகளா யிருக்கின்றார்கள். சுசாதி மித்திரத்துவமில்லை; ஆதலால் இவ்வளவும் நேரிட்டது' என்றது. ஆனதுகொண்டு தன்னிடத்தில் இருப்பதுபோலச் சுகம் வேறு இல்லை என்கின்றேன்' என, முதலில் அவ்வார்த்தைகளைக் கேட்டுப்போய் அவ்வளவிலே எதிரியுடனே பொருது, தன் வீட்டை மீட்டுக்கொண்டு, அங்கேயே வாழ்ந்திருந்தது. ஆதலாற் பராக்கிரமத்தினாற் பாக்கியம் வழி தேடிவந்து அடைகிறது.

IV. ஔவையார் சரித்திரம்

கல்வி அறிவு ஒழுக்கங்கள் நிரம்பி, நாகரிகம் மிக்கு விளங்கும் இக்காலத்திலே, நெடுநாளாகத் தொடர்ந்து வருங் குறையொன்று நான் நல்லவர் மனத்தைக் கவல்வித்து நிற்கும். பொது வகையான அறிவு நிரம்பியது, நாகரிகம் மலிந்தது என்று அறையலாமாயினும், இவ்வுயர்வுகளை உரிமையாகப் பெற்றோர் மக்கட்சாதியாருள் ஒரு பிரிவினரே யாகின்றனர். அந்தணர், அரசர் முதலாக மக்கள் தாமே வகுத்துக்கொண்ட சாதிப் பிரிவு ஒரு புறம் இருப்ப, இயற்கையில் ஆண், பெண் என ஒரு பிரிவு உண்டன்றோ? அறிவு நாகரிகங்களை வியக்குங் காலத்து நாம் பெண்மக்களைக் கணக்குள் வைக்கும் வழக்கம் இருப்பதாகவே தோன்றவில்லை. பெண்ணாகப் பிறந்தார் படும் பாடும், அறிவும், நாகரிகமும் அவ் வினத்தாருள் மிகவும் அருகிக் காணப்படுந் தன்மையும், நுழைந்து பார்க்கும் நுண்ணறிவாளர்க்குப் புலப்படாமற் போகா. பெண்கல்விக்காக உழைத்த திரரும் பெரும் பயன் கண்டதாகத் தெரியவில்லை.

பெண்மக்கள் கல்லாதிருத்தல் குறை யன்று; அதுவே அமைவுடைத்து எனக் கொள்ளுவோரே நம் நாட்டவருள் பெரும்பான்மையரும். இதுபற்றி நேருக்கு நேராகவும், எழுத்து மூலமாகவும் நிகழும் வாதங்கள் மிகப் பல. நற்கல்வி கற்றறிந்தாரைமட்டும் தனியாகப் பிரித்து நோக்குவமாயின், 'கல்வி, ஆண் பெண் என்னும் பாகுபாட்டைப் பாராட்டாது, மக்களாவார்க் கெல்லாம் அளிக்கற்பாற்று' என்று சொல்வாரையன்றி வேறொருவரைக் காணோம். எக்காலத்தும் கல்வி இருபாலார்க்கும் பொதுவாகவே யிருந்துள்ளது.

'பண்டைக் காலத்து நம் நாட்டுப் பெண் மக்களில் கற்றோர் யாவர் இருந்தனர்?' எனக் கடாவும் அறிவில்லாக் குதர்க்கவாதிகள் வாயை யடக்க, நல்லோர் ஔவையார் பெயரை அடிக்கடி யெடுத்து வழங்குவதுண்டு. **புறநானூறு** முதலிய பழைய தமிழ் நூல்களால் அரசர்குலத்தும், வேறுகுலத்தும் கற்றோர் பலர் இருந்தனர் என்றும், அவருட் சிலர் பாடுந் திறமும் பெற்றிருந்தனர் என்றும் அறிகின்றோம். ஆயினும் அப் பெயர்களெல்லாம் பகலவன்முன் மின்மினிகள் ஒளிமழுங்கி மறைதல்போல, ஔவையார் பெயர் முன் நில்லாது ஒழிகின்றன. நம்மவருள் படிப்பறியாப் பெண்டிரும், 'ஔவை சொல்வது போல' என வசனங்கள் புகல்வதுண்டு. ஔவையாரைத் தமிழ் நாட்டில் தெய்வமாகவே கொண்டாடுகின்றனர். அவர் கலைமகள் அவதார மென்பதே சாமானியர் நம்பிக்கை. தென்னாட்டில் அவர் பெயரால் ஒரு விரதம் அனுஷ்டானத்தில் இருக்கின்றது. வெள்ளிக் கிழமையில் அவ் விரதங் கிடந்தார், ஆயுள், செல்வம் முதலியன வர்த்திக்கப் பெறுவர் என்பது பெண்டிர் சித்தாந்தம். அவ் விரதமிருக்கும் நள்ளிரவில், அவ்விடத்தில் ஆண் காகங்கூடப் பறக்கலாகாது என்பர். நடப்பது இன்னதெனக் கள்ளத்தனமாகக் காண விரும்பிப் பெண் வேடந் தரித்துப் பெண்டிர் நடுவுட்சென்றும், வீட்டுக் கூரையைத் திறந்து பார்த்தும், அதிசயமிக்க ஆடவர் கண் கெட்டும், கால் ஒடிந்தும், துயருழந்த வரலாறு கேள்விக் கதைகள் பலவற்றிலும் முழங்கும்.

இவ்வாறு தெய்வத் தன்மை யுண்டாவதற்கு ஔவையார் இந் நில வுலகில் நெடுங் காலம் வாழ்ந்திருந்து, தமிழ்நாடெங்கும் சஞ்சரித்துத் தம் பெரு-

மையை விளக்கி வந்தார் என்று கொண்டா லன்றிக் காரணங் கூறல் சாத்தியமன்று.

தமிழ் மொழியில் **ஔவை** என்னுஞ் சொல் சிறு பான்மை கிழவியைக் குறிக்கும்; ஆனால் தெலுங்கு கன்னட மலையாள பாஷைகளில் **அவ்வை** யென்னுஞ் சொல் தாய், கிழவி முதலிய பல பொருளினது என்பது அப் பாஷைகள் வல்லார்க்கெல்லாம் தெரிந்த-தொன்று. அப் பாஷைகளில் எழுதுவது போல **அவ்வை** என் றெழுதவேண்டும், அவ்வையார் பெய-ரையும், ஔவை யென்று எழுதப்படாதெனச் சில புல-வர் கொள்கின்றனர். பழ நூல்களும், நூலுரைகளும் அவ் வழக்கினை யாதரித்ததும் உண்டு. ஆங்கில மொழி வல்லாரிற் சிலர் ஷேக்ஸ்பியர், யேசு முதலிய தெய்வத் தன்மை யுடையார், எக்காலும் இப் பூவுலகில் இருந்த-தில்லை; அவ்வாறிருந்தனர் என்று கற்பித்தது கவிகள் செய்கை யென்று கூறுவது போல், ஔவை என்னும் மொழிக்குக் கிழவிப் பொருள் உண்மையால், ஔவை-யார் இருந்ததையே ஐயத்தின்பாற் படுப்பர் சிலர். வேறு சிலர், 'உலகத்தில் மனிதப் படைப்பாய்ப் பல விநோத கதைகள் வழங்கும், ஒரு கொழுத்த மகன் தோன்றுவனாயின் அவை அவனிடத்துச் சரணடையும், அவனிருந்த நாள்தொட்டு அக் கதைகளெல்லாம் அவ-னையே நாயகனாகக் கொண்டு நடைபெறும்' என்னும் சரித்திர ஆராய்ச்சி மிக்கார் கொள்கையைப் பற்றிப் பற்பல காலத்துப் பற்பல விடத்து நடந்த கதைகள் எல்லாம் சாமானிய மகளா யிருந்தாள் ஒரு மாதைப் பற்றிக்கொண்டன என்று பகர்வர். இவ் விருவிதக் கொள்கைகளில் முன்னது வலி யுடைத் தன்று.

ஒளவையார் செய்துவைத்த நூல்களாலும், அவரைப் பற்றிப் பழநூல்களில் வரும் வரலாறுகளாலும் அஃது ஒதுக்கப்படும். மற்றும் பின்னுரைத்ததில் உண்மை உளது என்றல் மறுக்க வொண்ணாதது. வெவ்வேறு காலங்களில் திகழ்ந்த உக்கிரப் பெருவழுதி, சேரமான் பெருமான், குலோத்துங்க சோழன் என்பவரோடெல்லாம் ஒளவையாரும் திகழ்ந்தனர் என்றல் நல்லோர் கழகத்து அவையினை யன்றே சிறந்தாம்! சில ஆண்டுகட்குமுன் ஒளவையார் சரித்திரத்தை எழுதப் புகுந்தோர், ஒளவையார் ஒருவர்தான் இருந்தனர் என்றல் தவறு: முற்காலத்தவர் ஒருவர், பிற்காலத்தவர் மற்றொருவர் என்று சித்தாந்தப்படுத்தி யிருக்கின்றனர். குலோத்துங்க சோழன் கி. பி. பதினொன்றாம் நூற்றாண்டில் அரசாளத் தொடங்கியவனே ஒளவையாரை பாதுகாத்தவன், அக் காலத்திலேதான் கம்பர் முதலிய மூவர் புலவர் திகழ்ந்தனர் என்றுரைப்போர், 'மதுரமொழி' என்னும் ஒளவையார் பாட்டையும், அது குறிக்கும் கதையையும் மறந்தவர் ஆவர். ஏனெனில், சேரமான் பெருமான் காலம் அதற்குச் சில நூற்றாண்டுகள் முந்திய தென்பது எல்லாரும் ஒப்பிய உண்மை. குலோத்துங்க சோழன், கம்பர் முதலியோர் ஒன்பதாம் நூற்றாண்டிலோ பத்தாம் நூற்றாண்டிலோ திகழ்ந்தனரென்று கூறும் 'கனகசபைப்பிள்ளை யவர்கள் நூல் இதனை மறுக்கலாகாது. இக்கால விசேட சம்பந்தமின்றியே ஒளவையார் என்னும் பெயரால் இருவர் மெல்லியர் வெவ்வேறு காலத்து விளங்கினரென்பது ஏற்படுகின்றது. இவ் விருவரைப் பற்றி வழங்கும் கதைகளுள்ளும் சில சில கற்பிதங்கள் என்பது வெள்ளறிவோர்க்கும் வெளியாய்க் கிடக்கும்.

இனி, இருவர் ஔவையாரும் முறையே திகழ்ந்த காலங்கள் எவை? செய்த நூல்கள் எவை? அவர் உடனிருந்த புலவர் எவர்? அவரைப்பற்றி வழங்கும் கதைகள் எவை என்றெழும் வினாக்கள் விடுக்கற்பாலன. இவற்றை விடுக்கு முகத்தான் ஔவையார் சரித்திரமும் ஒருவாறு முற்றுப்பெறும்.

முதலாம் ஔவையார் இருந்தனர் எனச் சொல்லத்தக்க காலம், முதல் நூற்றாண்டின் பிற்பகுதியும், இரண்டாம் நூற்றாண்டின் முற்பகுதியுமாம். இதுவே கடைச்சங்கம் இருந்ததென்று உரைக்குங் காலமும், இளங்கோவடிகள் சிலப்பதிகாரம் எழுதியதும், சாத்தனார் மணிமேகலை துறவு எழுதியதும், பொய்யடிமையில்லாத புலவர் எனச் சுந்தரராற் போற்றப்பட்ட கபிலர், பரணர், நக்கீரர் என்னும் புலவர் சிகாமணிகள் திகழ்ந்த காலமும், கடையெழு வள்ளல்கள் தம் கொடைமடையாற் பெரும் புகழ் ஈட்டிய காலமும் ஏறக்குறைய இதுவென்றே சொல்லலாம். சாதிசமய பேதம் பாராட்டாது எல்லார்க்கும் பொதுவாக ஒழுக்கத்தினை விதிக்கும் தமிழ் மறையாகிய திருக்குறளை நமக்கு உபகரித்த திருவள்ளுவரை ஔவையாருடன் பிறந்தாரென்று உரைக்கும் ஐதிகம், கபிலர் பெயரால் வழங்கும் கபிலரகவலில் இவர்கள் பிறப்பெல்லாங் கூறப்பட்டுள்ளது. கபிலரும் ஔவையாருக்கு ஒரு சகோதரரே. தகடூர்க்கிறை அதிகமானும் அவரோடுதித்த மகன்றானே என்னும் அச்சிறு நூல். அந்நூலைக் கபிலர் தமக்கு உபநயனச் சடங்கு செய்யத் தடையுண்டாயபோழ்து செய்ததாகக் கதை கூறும். அஃது உண்மையாயின், அச் சிறு பிராயத்திலேயே கபிலர், தம்மோடு ஒருவயிற்றுப் பிறந்தாரேனும்

வெவ்வேறிடங்களில் வளர்ந்து வந்தார் வரலாற்றை வல்லோர் எங்ஙனம் அறிந்து கூறினர்? ஆதலால், எக்காரணத்தாலோ இவர் வரலாறு இவ்வாறென வழங்குங் கதையை ஆதாரமாக வைத்துப் பிற்காலத்துப் புலவனொருவன் செய்துவைத்ததாகும் இந்நூல் என்றலே பொருந்தும். அன்றிக் கபிலரே செய்தாரெனக் கொள்ளவேண்டின், அவர் தமக்கு உபநயனம் தடைப்பட்ட காலத்தில் இவ்வாறெல்லாங் கூறினரெனல் பொருந்தாது. தம் முதுமைப் பருவத்துச் சன்மத்தாற் சாதியோ கன்மத்தாற் சாதியோ என வாதந் தொடுத்துச் சஞ்சலப் பட்டுக்கொண்டிருந்த மூர்க்க மாந்தர்க்கு அறிவுகொளுத்த இந்நூல் செய்தனரென்று சொல்லல் வேண்டும். தம்முடன் பிறந்தாரைப்பற்றிக் கூறுந் தன்மையும் கபிலர் அந்நூலைத் தம் குழவிப் பருவத்துச் செய்திருக்கமாட்டாரென்று காட்டும். கபிலரகவலிற் காணும் வரலாறு :

‘அருந்தவ மாமுனி யாம்பக வற்குக்
கருவூர்ப் பெரும்பதிக் கட்பெரும் புலைச்சி
ஆதி வயிற்றினி லன்றவ தரித்த
கான்முளை யாகிய கபிலனும் யானே
என்னுடன் பிறந்தவ ரெத்தனை பேரெனின்
ஆண்பால் மூவர் பெண்பால் நால்வர்
யாம்வளர் திறஞ்சிறி தியம்புவல் கேண்மின்
ஊற்றுக் காடெனும் ஊர்தனிற் றங்கியே
வண்ணா ரகத்தினில் உப்பை வளர்ந்தனள்
காவிரிப்பூம் பட்டினத்திற் கள்விலைஞர் சேரியில்
சான்றா ரகந்தனில் உறுவை வளர்ந்தனள்
நரப்புக் கருவியோர் நண்ணிடு சேரியில்
பாணரகத்தில் ஔவை வளர்ந்தனள்
குறவர் கோமான் கொய்தினைப் புனஞ்சூழ்

வண்மலைச் சாரலில் வள்ளி வளர்ந்தனள்
தொண்டைமண் டலத்தில் வண்டமிழ் மயிலைப்
பறைய ரிடத்தில் வள்ளுவர் வளர்ந்தனர்
அரும்பார் சோலைச் சுரும்பார் வஞ்சி
அதிக னில்லிடை அதிகமான் வளர்ந்தனன்
பாரூர் நீர்நாட் டாரூர் தன்னில்
அந்தணர் வளர்க்க யானும் வளர்ந்தேன்.'

இவ்வரலாற்றின்படி ஒளவையார், திருவள்ளுவர் அதிகமான் கபிலர் என்னும் மூவர் ஆண்மக்களோடும், உப்பை உறுவை வள்ளி என்னும் பெண்மக்கள் மூவரோடும் பிறந்தனர் என்றாம். திருவள்ளுவர் முதற் குறளில் தம் தாய் தந்தையரையே ஆதிபகவன் என வாழ்த்தினர் என்பவர் இவ்வரலாற்றில் நம்பிக்கை வைத்துள்ளோர். குறளுக்கு உரை யெழுதியோரிற் சிறந்த பரிமேலழகர் இப்பொருளைக் குறிப்பு வகையாற் கூட உணர்ந்தா தொழிந்தது எதுபற்றியோ? கபிலர் செய்த வேறு நூல்களால் அவர் அந்தணர் என்றுஞ் சிறந்த தமிழ்ப் புலவர் என்றும் விளங்குகின்றதே யன்றி, அதற்குமேல் ஒன்றும் விளங்கவில்லை. அதிகமான் செய்த இரண்டொரு கவியிலும் இவ்வரலாற்றுக்கு ஆதாரம் இல்லை. ஆயினும், ஒளவையாரும் இவ் வாண்மக்கள் மூவரும் ஏககாலத்தினர் என்பது நிச்சயம். உப்பை உறுவை வரலாறு பிறப்புக்குமேல் ஒன்றும் புலப்படவில்லை. வள்ளியைக் குமாரக்கடவுள் மணந்தனராம். தென்னாட்டில் வள்ளியூர் என்றோர் ஊர் உளது. அவ்விடத்துத்தான் வள்ளியைக் குமாரக்கடவுள் மணம் புரிந்தனர் என்று கூறுகின்றனர். கடைச் சங்கத்துத் திரிபுரமெரித்த விரிசடைக்கடவுள் மதுரைச் சொக்க நாயகர் புலவராய் வீற்றிருந்தாரென்றும், முருகக் கடவுள்

நக்கீரனார்க்கு வெளிப்பட்டுத் தோன்றி அருள்செய்தாரென்றும், இன்னும் பலவாறாகவும் வழங்குங் கதைகளோடு இதனையுஞ் சேர்க்கவேண்டியதுதான்.

ஔவையார் பிறப்பைப்பற்றியும் பெற்றோரைப் பற்றியும் அறுதியிடக் கூடாதாயினும் அவர் பாணர் குலத்தில் வளர்ந்தனர் என்பதில் ஐயுறவில்லை. பாடுவோர் பாணர். தென்னாட்டில் துணி தைக்குந் தொழில் செய்வோர் பாணரெனப்படுதலுண்மையால், ஔவையாரை அத்தொழிலினிடத்து வளர்ந்தனர் என மயங்கிக் கூறினருமுளர். பாண மகளைப் பாடினி என்றும் பாட்டி என்றும் வழங்கும் வழக்கு இருந்ததைப்பற்றி, ஔவையாரை ஔவைப்பாட்டி என்று வழங்கினர்போலும்! அதனால், ஔவை பிறந்த பொழுதே முதுமைப் பருவமடைந்து விளங்கிய தெய்வத்தன்மையோடு கூடியவள் எனப் புலவர் புராண முடையார் கூறுதல் பொருந்தாது. பாணர் பாணாரடித் தையற்றொழில் புரிவோரைக் குறித்த காரணத்தாலோ வேறெதனாலோ தென்னாட்டில் பாணரெனத் தகும் சாதியார் புலவரெனப்படுகின்றனர். புலவர் குலத்துப் பிறந்தார்க்கெல்லாம் இளமையிலேயே பாடுதல் கைவரும். பாணர் மரபில் வளர்ந்த காரணத்தால் ஔவையாரும் இளமையிலேயே பாடுந்தன்மை பெற்றிருக்கத்தான் வேண்டும். வியக்கத்தக்க நுண்ணறிவும் இவருக்கு வாய்த்திருந்தது என்றலும் அவசியமே. ஆயினும் அவர் பிறந்தவுடனே,

'இட்டமுட னென்றலையி லின்னபடி யென்றெழுதி
விட்டசிவ னுஞ்செத்து விட்டானோ—முட்டமுட்டப்
பஞ்சமே யானாலும் பாரமவ னுக்கன்னாய்
நெஞ்சமே யஞ்சாதே நீ'

என்று அச்சிட்டு வழங்கும் ஔவையார் சரித்திரங்கள் கூறுமாயினும்,

‘எவ்வுயிரும் காப்பதற்கோ ரீசனுண்டோ வில்லையோ
அவ்வுயிரில் யானுமொன்றிங் கல்லேனோ —வவ்வி
அருகுவது கொண்டிங் கலைவானே னென்னுய்
வருகுவது தானே வரும்.’

என்று கபிலரகவற் சுவடி யீற்றிதழிலும் வேறு சில நூலகத்தும் காணுமாயினும், ஒரு வெள்ளைக்கவி சொற்றாள் என்பது உயர்வு நவிற்சியின்பாற் படுமேயன்றி உண்மை நவிற்சியின்பாற் படாது. ஞானசம்பந்தப் பிள்ளையார்க்காயினும் மூன்றாண்டு கழியவேண்டி யிருந்தது, ஆதிவயிற்றுப் பிள்ளைகட்கு, பிறந்த அக்கணமே பாடுந்திறன் வாய்த்தது கழிபேராச்சரியம்!

*   *   *   *   *   *

ஒட்டக்கூத்தர் வார்த்தையைக் கேட்டுக் குலோத்துங்கன் கம்பரைத் தன் நாட்டை விட்டுத் துரத்தினன். கம்பரும் தன் குடும்பத்தா ரிடத்துக்கூடச் சொல்லிக் கொள்ளாது சோழநாட் டெல்லையை விட்டுப் போய்க்கொண் டிருக்கும்பொழுது, வழியில் ஓர் ஊரில் சிலம்பி யென்னும் ஓரேழைத் தாசி கம்பர் வாக்சால் சுளிபெறுவதை விழைந்து, அவரை மிகவும் உபசரித்தாள். ஆயினும், கம்பர்,

‘காசுக்குக் கம்பன் கருணைக் கருணகிரி
ஆசுக்குக் காளமுகி லாவனே — தேசுபெறும்
ஊழுக்குக் கூத்த னுவக்கப் புகழேந்தி
கூழுக்கிங் கௌவையெனக் கூறு’

என்பயமை பொருள் இருப்பதாலும் தாசியிடத்துப் பொருளிருக்குமென்று தாம் எண்ணியபடியாலும் தம் ஒரு கவிக்கு விலை ஆயிரம்பொன் என்றனர். தாசியும் கவியை மிகவும் வேட்டனளாகலின் தன் சொத்தையெல்லாம் விற்ருள். விற்றும், ஐந்நூறு பொன்தான் தேறிற்று. அதனைக் கொண்டுபோய் கம்பர் முன் வைத்து வணங்கலும், அவர் அதனை யேற்று,

‘தண்ணீருங் காவிரியே தார்வேந்தன் சோழனே
மண்ணாவ துஞ்சோழ மண்டலமே’

என அரைப்பாட்டுப் பாடி, ‘நீ கொடுத்த பொருளுக்குப் பாட்டாயிற்று’ என்று சொல்லி, அதனை அவள் வீட்டுத் தெருச் சுவரின்மேல் எழுதிப் போயினர். கம்பர் வாக்சால் சம்பத்துப் பெறலாமென்று தன் பொருளனைத்தையும் அவருக்கீந்து ஏமாந்த தாசி வறியளாய் வருந்திக்கொண்டிருந்தனள். சின்னுள் சென்று அவ்வழி வந்த ஔவையார் அத்தாசியை நோக்கி, ‘என் பசிக்குச் சிறிது கூழ் கொடுக்கமாட்டுவையோ?’ என்றனர். அவளும் தனக்கென்று வைத்திருந்த கூழை அவர்க்குக் கொடுத்துச் சிரமந்தீர்த்தாள். களைதீர்ந்து திண்ணையிலிருந்த அம்மையார் சுவரிலெழுதப்பட்ட அதனைக் கண்டு தாசியை வினவுதலும், அவள் நடந்ததைச் சொன்னுள். அவர் சிறிதும் தாமதமின்றி,

— பெண்ணாவாள்

‘அம்பர்ச் சிலம்பி யரவிந்தத் தாளணியுஞ்
செம்பொற் சிலம்பே சிலம்பு.’

என எழுதிப் பாட்டை முடித்தனர். தாசியும் விரைவில் செல்வியாயினள். இதனைக் கேள்வியுற்றும், திரும்ப அவ் வழியே வரும்பொழுது நேரிற் கண்டும் கம்பர்

தம்மை மானபங்கஞ் செய்த ஔவையாரிடத்துப் பகைமை பாராட்டினர். ஒரு வயலோரமாய் ஔவையார் போகக் கண்ட கம்பர், அவரைக் கர்வபங்கஞ் செய்ய எண்ணி,

'ஒருகாலில் நாலிலைப் பந்தலடி'

என்றுசொல்லித் தாங் குறித்தது கூறுமாறு வேண்டுபவர்போல நோக்கினர். ஔவையார் கம்பரை நோக்கி,

'எட்டேகால் லட்சணமே யெமனே றும்பரியே
மட்டில் பெரியம்மை வாகனமே — முட்டமேற்
கூரையில்லா வீடே குலராமன் றூதுவனே
யாரையடா சொன்னா யது.'

என்று இகழ்ந்து கூறி, அவர் குறித்தது ஆரைக்கீரை யென்றுஞ் சுட்டினர்.

ஒருகால் கம்பர் சோழன் சபையில் இராமாயணப் பிரசங்கஞ் செய்யுங்கால் ஔவையாரும் அங்கிருந்தனர். பிரசங்கத்தைக் கேட்டுச் சந்தோஷித்த சோழன், 'பாரகாவியம் பாடுவதில் கம்பருக்கு நிகராவார் ஒருவரும் இல்லை' என்று கம்பரைப் புகழ்தலும் பொறாமை கொண்ட ஔவையார்,

'வான்குருவி யின்கூடு வல்லரக்குத் தொல்கரையான்
தேன்சிலம்பி யாவர்க்குஞ் செய்யரிதால்—யாம்பெரிதும்
வல்லோமே யென்று வலிமைசொல வேண்டாங்காண்
எல்லார்க்கும் ஒவ்வொன் றெளிது'

'சித்திரமுங் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்
வைத்ததொரு கல்வி மனப்பழக்கம் — நித்தம்
நடையும் நடைப்பழக்கம் நட்புந் தயையும்
கொடையும் பிறவிக் குணம்'

என்று கூறினர். சோழன் சபையி லன்றிச் சேர நாட்டு வேளாளர் சபையில் இராமாயணப் பிரசங்கம் நடக்கும் காலத்து, அவ் வேளாளர் அவ்வாறு புகழ்ந்த-தைக் கேட்டுப் பொறாராய் ஔவையார் இவ்வெண்-பாக்களைக் கூறினரென்பர் சிலர். எவ்வாறாயினும் பாட்டுக்கள் பொருத்தமுடையன அல்ல. முதல் வெண்பா தற்புகழ்ச்சியான் ஒருவனை நோக்கிச் சொல்-லப்பட்ட தெனிற் பொருந்தும். இரண்டாவது ஒரு தக்கார்ப் பக்கத்தையும் சாராத பொதுக்கவியாய் இருக்கின்றது. இராமாயணப் பிரசங்க காலத்திலேயே கம்-பரை யாவர் வெல்வர் என்றதற்கு உத்தரமாக,

'காணாமல் வேணதெல்லாங் கத்தலாங் கற்றோர்முன்
கோணாமல் வாய்திறக்கக் கூடாதே — நாணாமற்
பேச்சுப்பேச் சென்னும் பெரும்பூனை வந்தக்காற்
கீச்சுக்கீச் சென்னுங் கிளி.'

என்று ஔவையார் கூறினர் என்பர். மற்று, இக்கவி ஔவையார் சபைக்கு வருமுன் மிக்க காம்பீரியத்-தோடு பிரசங்கித்துக் கொண்டிருந்த கம்பர் அவரைக் கண்டதும் சன்னஸ்வரத்தோடு பிரசங்கித்தலைக் கண்டு சொல்லியதென்பார் மற்றொரு சாரார் : அதுவும் பொருத்தமுடைத்தே. தனிப்பாடற்றிரட்டு இவ் வெண்பா வலியோரைக் கண்டால் மெலியோர் அஞ்சு-வர் எனப் பாடியது, என்னும். ஔவையார் அங்கு வந்திருப்பதை யுணராது கம்பர் பாட்டை வியந்த சோழனை நோக்கி,

'விரக ரிருவர் புகழ்ந்திடவே வேண்டும்
விரல்நிறைய மோதிரங்கள் வேண்டும்—அரையதனிற்
பஞ்சேனும் பட்டேனும் வேண்டும் அவர்கவிதை
நஞ்சேனும் வேம்பேனும் நன்று'

என்று ஔவையார் கூறினாராம். இஃது உண்மை-யாயின், கம்பர் வெளிச்செல்லுங்கால் அதிக ஆடம்பரத்-தோடு செல்லும் வழக்கமுடையரென்று ஏற்படும்.

இனி, ஔவையார் இவ்வாறு கம்பரை வறிதே இகழ்வதைக் கண்ட சில புலவர், தமிழ் மூதாட்டியை வணங்கி, 'கல்வியிற் பெரியர் கம்பரல்லரோ? அவ ரிடத்து என்ன குறைகண்டு இவ்வண்ணம் அவரை யிகழ்ந்தீர்?' என வினவலும், அம்மையார்,

'கற்றதுகைம் மண்ணளவு கல்லா துலகளவென்
றுற்ற கலைமடந்தை யோதுகின்றாள் — மெத்த
வெறும்பந் தயங்கூற வேண்டா புலவீர்
எறும்புந்தன் கையாலெண் சாண்'

என்று ஒரு கவி புகன்று அவர்கட்கு அறிவு புகட்-டினராம். இது சந்தர்ப்பத்திற்குப் பொருந்துவதா-யில்லை. ஒரு புலவன் மண்ணைக் கையில் வைத்துக்-கொண்டு, 'இஃதென்னை?' என்று கேட்டபோது, அவ-னுக்கு உத்தரமாக ஔவையார் இவ் வெண்பாவைக் கூறினார் என்று கதையுண்டு. தனிப்பாடற்றிரட்டில், 'கல்விக்கு ஓர் எல்லை யில்லையாதலால் நீர் செருக்காதீர்' என்று புலவரை நோக்கிக் கூறியது என்னும் வசனத்-தினை யொட்டி இக்கவி யெழுதப்பட்டுள்ளது.

ஔவையார் சொல்லிய கவியைக் கேட்ட புல-வர்கள் கம்பரைக் கருணையால் ஆட்கொள்ளுமாறு அவரை வேண்ட, அவர்,

'ஆலைப் பலாவாக்க லாமோ அருஞ்சுணங்கன்
வாலை நிமிர்க்க வசமாமோ — நீலநிறக்
காக்கைதனைப் பேசுவிக்க லாமோ கருணையிலா
மூர்க்கனைச்சீ ராக்கலா மோ'

என்று அம்மரஞ் சாத்தியமாகாத தன்மையைக் கூறிப் போய்விட்டனர் என்றார் உரைப்பர். தனிப்பாடற் றிரட்டில், 'சாத்தியப்படாத காரியங்களை இவையெனப் பாடியது' என்னும் வசனத்தின் கீழ் இப்பாட்டுக் காணப்படுகின்றது.

ஓரூரில் ஒரு குறவனுக்கு இரண்டு மனைவியர் இருந்தனர். அவ்விருவருள் இளையாளிடத்துக் குறவனுக்கு ஆசை அதிகம். ஒருநாள் குறவன் வெளியூருக்குப் போக நேர்ந்தபோது, தன் மனைவியரை நோக்கி, 'நான் அன்பாக வளர்க்கும் இப்பலாவைப் பத்திரமாகப் பார்த்திருங்கள்' என்று சொல்லிப் போனான். அவன் போனபின் இளையாள் அம்மரத்தை வெட்டிவிட்டு, குறவன் திரும்பிவந்தபோது மூத்தாள் மேலே பழிசுமத்தினாள். நிரபராதியாகிய மூத்தாள் கணவன் கோபத்திற்கு அஞ்சி நடுநடுங்கிக்கொண் டிருக்கும் பொழுது, ஔவையார் தற்செயலாய் அவ்வழி வந்து அவள் மனோதாபத்தைக்கேட்டு, அவட்குத் தேறுதல் சொல்லிப் பலாத் தழைக்கும்படி,

'கூரிய வாளாற் குறைத்திட்ட கூன்பலா
ஓரிதழாய்க் கன்றா யுயர்மரமாய்ச் — சீரியதோர்
உண்டுபோற் கொண்டையாய் உண்காயாய்த் தின்பழ
பண்டுபோல் நிற்க பரந்து' [மாய்ப்

என்றொரு வெண்பாச் சொன்னார். பலா பழைய உருவத்தையடைந்து நின்றது. அதுகண்ட மூத்தாள் உளமகிழ்ந்து ஔவையார்க்கு ஒரு கன்னையில் தினையரிசி புழுக்குக்கொடுத்து, உபசாரஞ்சொல்லி அனுப்பினாள்.

தினை மூட்டையைக்கொண்டு நெடுந்தூரம் நடந்த இளைப்பாலும் இரவிருட்டினாலும் ஔவையார்

உறந்தையில் சோழன் அரண்மனை வாயிலில் இருந்தனர். தற்செயலாக அங்கு வந்த சோழன், ஔவையாரைக் கண்டு அதிசயித்து, 'இவ்விரவில் இங்கு எப்படி வந்தீர்?' என்று கேட்டனன். அதற்கவர்,

'கானொந்தேன் நொந்தேன் கடுகி வழிநடந்தேன்
யான்வந்த தூர மெளிதன்று — கூனல்
கருந்தேனுக் கண்ணாந்த காவிரிசூழ் நாடா
இருந்தேனுக் கெங்கே யிடம்'

என விடை கூறினர். மூட்டை தன் கண்ணெதிர்ப்படுதலும், 'அஃது என்ன?' என்ற சோழற்கு,

'கூழைப் பலாத்தழைக்கப் பாடக் குறமகளும்
மூழக் குழக்குத் தினைதந்தாள் — சோழகேள்
உப்புக்கும் பாடி புளிக்கும் ஒருகவிதை
ஒப்பிக்கு மென்றன் உளம்'

என்று காரணம் கூறினர்.

இவ்விரண்டு வெண்பாக்களையும் கம்பர் இராமாயணப் பிரசங்கங் கேட்ட சோழன் புகழ்ந்ததற்கு மாறாக ஔவையார் சில கவிகள் கூறியபொழுது இவ்வாறு தைரியமாய்க் கூறுபவர் யாவர் என்று அறியாது நினைத்த சோழனுக்கு விடையாகக் கூறியதாக இணைத்தலுமுண்டு. தன்னிடத்திருந்த மூட்டை யின்னதெனச் சொல்லியவுடனே,

'நூற்றுப்பத் தாயிரம் பொன்பெறினும் நூற்சீலை
நாற்றிங்கள் நாளுக்குள் நைந்துவிடும் — மாற்றலரைப்
பொன்றப் பொருதடக்கைப் போர்வே லகளங்கா
என்றுங் கிழியாதென் பாட்டு'

என்றுங் கூறித் தம் பாடலைத் தாமே வியந்தனர் என்-

றச் சொன்னார். அது கேட்ட சோழன், பொருளை எவ்வாறு செலவிடவேண்டும் என்றதற்கு,

'நம்ப னடியவர்க்கு நல்காத் திரவியங்கள்
பம்புக்காம் பேய்க்காம் பரத்தையர்க்காம் — வம்புக்காம்
கொள்ளைக்காம் கள்ளுக்காம் கோவுக்காம் சாவுக்காம்
கள்ளர்க்காம் தீக்காகும் காண்'

என ஒளவையார் சாதுரியமாக விடை பகர்ந்தனர் என்பர்.

ஒருநாள் ஒளவையார் வெகுதூரம் நடந்து வந்தவர் ஓரூரை யடுக்கும்பொழுது பொழுதும் போனது. இன்றை யிரவை இவ்விடத்தைக் கழித்துப் போகலாம் என நினைந்து, அவ்வூராரை நோக்கி, 'ஐயன்மீர், இவ்வூரில் இரவு படுத்திருக்க வசதியான இடமுண்டோ?' என, அவர்களுட் சிலர், 'அம்மே, இந்நகர்க்கு மேலண்டை ஒரு சாவடி யுளது, அது வசதியா யிருக்கும்: ஆயினும், அதிற் குடிகொண்டிருக்கும் பைசாசம் ஒன்று இரவில் அங்குச் சென்று துயில்பவரை யெல்லாம் அறைந்து கொல்கிறது: ஆகையால் அது பாழாய்க் கிடக்கின்றது' என ஒரு கதையைக் கூற, ஒளவையாரும், 'பேயைப் பேய் அடிக்குமா?' என்று சொல்லிவிட்டு, அச் சாவடிக்கே சென்று நித்திரை போயினர். வெளியே சென்றிருந்த பெண் ணுருவோர் சிறிது நேரஞ் சென்று, அங்கு வந்து, முதற்சாமத்தில் தன் வழக்கப்படி அகங்காரத்துடனே, 'எற்றெற்றெற்று' என்று சத்தமிட்டுக்கொண்டு ஒளவையாரை நோக்கி ஓடிவந்தது. ஒளவையார் உறக்கம் நீங்கி விழித்துப் பார்த்து,

'வெண்பா இருகாலிற் கல்லானை வெள்ளோலை
கண்பார்க்கக் கையா லெழுதானைப் — பெண்பாவி
பெற்றாளே பெற்றாள் பிறர்நகைக்கப் பெற்றாளே
எற்றோமற் றெற்றோமற் றெற்று'

என்றொரு வெண்பாவைப் பாடினர். அதனைக் கேட்டதும் அப்பேய் கல்வி யறிவுடையதாதலால், 'எழுத்து வாசனை யறியாத மூடனை யிச்சித்த நம் பூர்வோத்தரத்தை அறிந்து சொல்லிய இவள் தேவியே, இவளை ஒன்றுஞ் செய்யப் போகாது' என்று அஞ்சி அவ்விடம் விட்டு ஏகிற்று. இரண்டாஞ் சாமத்தில் பழையபடியே 'எற்றெற்றெற்று' என்று வந்தது. அப்போது ஔவையார்,

'கருங்குளவி சூரைத்தூ றீச்சங் கனிபோல்
வருந்தினர்க்கொன் றீயாதான் வாழ்க்கை-அரும்பகலே
இச்சித் திருந்தபொருள் தாயத்தார் கொள்வரே
எற்றோமற் றெற்றோமற் றெற்று'

என்றொரு வெண்பாச் சொல்லினர். கேட்டவுடனே ஓடிய பைசாசம் மூன்றாம் சாமத்து மீண்டும், 'எற்றெற்றெற்று' என்று வந்தது. அப்போது ஔவையார்,

'வான முளதால் மழையுளதால் மண்ணுலகில்
தான முளதால் தயையுளதால் — ஆனபொழு
தெய்த்தோம் இளைத்தோமென் றேமாந் திருப்போரை
எற்றோமற் றெற்றோமற் றெற்று'

என்று வெண்பா வொன்று மீட்டும் பகர்ந்தனர். அதனைக் கேட்டு ஓடிய ஆவேசம் நான்காஞ் சாமத்தும் இரைச்சலிட்டுக்கொண்டு வர, ஔவையார்,

'எண்ணாயிரத் தாண்டு நீரிற் கிடந்தாலும்
உள்ளீரம் பற்றாக் கிடையேபோற் — பெண்ணாவாய்
பொற்றொடி மாதர் புகழ்தோள்மேற் சாராரை
எற்றொமற் றெற்றோமற் றெற்று'

என்றொரு வெண்பா அமைந்தனர். அதனைக் கேட்ட-லும் பைசாசம் ஒடுக்க மெய்தி, கவி யரசியை வந்து வணங்கிற்று. அவரும் பைசாசத்தை இரங்கி நோக்கி, 'உன் வரலாற்றை இயம்புக' எனப் பணித்தார். அது, தான் முன் அவ் ஊராள்வோன் புத்திரியா யிருந்ததும், ஒரு நாள் உப்பரிகையின் அடிவாரத்தில் வழிப்போக்க-னாக வந்து தங்கிய அரசிளங் குமரன் ஒருவனைக் கண்டு காதலித்து, 'நீர் இவ்வூர்ச் சாவடியில் இன்றிரவு இன்ன விடத்து வந்திருந்தால் நான் அங்கு வந்து உம்மை யடைவேன்' என்று தன் காதோலையில் நகத்தால் எழுதி அவன் முன் எறிந்ததும், அவன் அதன் உண்மை யறி-யாது அதனைச் சாவடியி லிருந்த ஒரு குஷ்டரோகிக்குக் காட்ட, அக் கொடியவன் அவ் விலாசத்தைப் பயமுறுத்தி உடையிட் டொளிப் போகச் செய்து குறித்த இடத்தில் தான் வந்திருந்ததும், இருளானதால் அவனை இன்னா-னென் றறியாது, தான் அவனைத் தழுவி அருவருப்-பெய்தி உடனே உயிர் மாய்த்துக்கொண்டதும் ஔவை-யார்க்கு விரித்துரைத்தது. ஔவையாரும் இவ் வர-லாற்றை இரங்கிக் கேட்டு, 'இப்பொழுது உனக்கு வேண்டிய வரம் என்னை?' என்றலும், அது, தான் மீட்டும் மானிட வடிவெடுத்து முன்பு இச்சித்த புரு-ஷனை மணந்து வாழ்ந்து, பின் துறக்கம் எய்தவேண்டும் என்று நினைத்திருக்குந் தன் எண்ணத்தை வெளியிட்-டது. அவர் அதனை நோக்கி, 'நீ உறையூரிற் சென்று அரசன் ஆலாத்திப் பெண்களுள் சூலைப் பெற்றிருக்-கும் மாதர் வயிற்றுக்குப் பெண்ணாகப் பிறந்து, மேன்மை யுற்றிருந்து, விரும்பிய புருடனை மணந்து சுகமெய்துக' என்று சொல்லி அநுக்கிரகித்தனர். அதே சாமத்தில், தன்னை விரும்பி வந்து ஏமாந்த ராஜ புத்திரி உயிர்

நீத்தமை யறிந்த ராஜ புத்திரனும் அவ்வாறே தற்கொலை புரிந்து, ஆவேசமாய் அங்கே கிடந்ததனால், அவனும் ஒளவையாரை வந்து வணங்கினான். அவர் அந்த ஆனாவேசத்தை நோக்கி, 'நீ அவ்வூரிலே விறகு தலையனாகப்பிறந்து, அவ்விராஜகுமாரத்தியை அடையக் கடவை' என்று பணித்துத் தம் வழியே யேகினார்.

V. அனுமான் தன் உருக்காட்டுதல்

மரத்தின்மேல் தங்கிப் பார்த்துக்கொண் டிருக்கிற அனுமானானவர், இதுதான் பிராட்டியைக் காண்கிறதற்குத் தகுந்த சமயமென்று அறிந்து, அந்த ராக்ஷசிகளுக் கெல்லாம் உறக்கம் வரும்படி ஒரு மந்திரத்தை உச்சரித்தார்; அதனால், அவர்க ளெல்லாம் பிரேதம்போல் உறங்கிவிட்டார்கள். எப்பொழுதும் நித்திரை செய்யாத ராக்ஷசிகளும் நித்திரை செய்வது கண்டு, துக்கத்தைச் சகியாமல் உஜ்ஜீவிக்கின்ற மார்க்கத்தையும் காணாமல், மனந் தளர்ந்து அஞ்சி நெடு நாளாக வருந்துகின்ற பிராட்டியார், சுவாமியினிடத்தில் தமக்கு உண்டான அன்பினால் பிரலாபிக்கத் தொடங்கினார்:

'கல்லா மதியே கதிர்வா ணிலவே
செல்லா இரவே சிறுகா இருளே
எல்லா மெனையே முனிவீர் நினையா
வில்லா ளனையா தும்விளித் திலிரோ'

'ஆகா, தடுக்கப்படாத வலிமை யுண்டான என் விதியே! கார்மேகத்திற்கும், கருங்கடலுக்கும் ஒப்பாகிய கரிய மேனியை யுடைய என் நாயகரானவர்,

நம்மைப் பிரிந்து தனியே யிருக்கின்ற என்னுடைய பிராணனை தருவாரா? பிரளய கால இடி யோசைக்குச் சமமாகிய அவருடைய உக்கிர கோதண்டத்தின் குணத்-தொனியும் இந்த லங்கையிலுள்ளவர்கள் கேட்க வருமா? நீ சொல்' என்றும், 'விசேஷமில்லாத சந்திரனே! பிர-காசமாகிய சந்திரிகையே! தொலையாத இரவே! குறை-யாத இருளே! நீங்க ளெல்லாம் ஒருமிக்கக் கூடிக்-கொண்டு என்னை மாத்திரம் உபத்திரவப்படுத்துகிறீர்-களோ! இதைச் சிறிதாவது நினையாத அந்தக் கோதண்ட-ராமரை இப்படிச் செய்யமாட்டீர்களா?' என்றும், 'ஓ பூங்காவனமே! நெருப்பை வாரி இறைக்கும்படி எங்-கும் சஞ்சரித்து வருகின்ற வாடைக் காற்றுடனே சேர்ந்து என்னைக் கொல்லுகின்றீர்களா? என் உயிர்நிலையை நீங்கள் அறியமாட்டீர்களா? ஸ்ரீ ராமச்சந்திரனுடனே ஆரணியத்தில் சென்ற காலமே யறிகின்றீர்களோ, அவ-ருக்கு நீங்களாவது சொல்லமாட்டீர்களா?' என்றும், 'நம்முடைய பிராணபதமா யிருக்கின்றவர் வாராமற் போகமாட்டார் என்கின்ற நிச்சயத்தினு லல்லவோ அநேககோடி துன்பத்திலும் சகியாம லிருக்கின்றேன்' என்றும், அழிவில்லாத பராக்கிரமத்தையுடைய விசித்திரமணியே! ஸ்ரீமந் நாராயணரே! சநாதிகள் இல்லாத பரம புருஷரே! விருக்ஷங்கள் நெருங்கிய காட்டி-னிடத்தில் உம்முடனே வரும்படி நான் யத்தனப்-பட்டபோது, நீ வந்தால் வருத்தப்படுவாய், வர வேண்டாம், நான் போய்ச் சில காலில் வருகிறேன், நக-ரத்தி னிடத்திலேதானே யிருக்கக் கடவாய் என்று நிய-மித்தீரே? உம்முடைய கிருபை இப்படி யிருக்கு-மானால், இப்போது நீர் தனித்திருந்து தமியளாகிய என்னுடைய உயிரை வருத்தலாமா?' என்றும், 'நான்

கைவிடாதிருக்கிற என்னுடைய அறிவே! என்னுயிரே! வெகுநாளாக நீங்கள் அஞ்சி உழல்கின்றீர்கள்; ஆகையால் என் நாயகரைக் காண்கிறபரியந்தம் என்னை விட்டு நீங்கமாட்டீர்கள்போலக் காண்கின்றதே! நான் அடையும் பழியை நீங்களும் அடையவேண்டுமா?' என்றும், 'இறவாத தம்முடைய பிதாவாகிய சக்கரவர்த்தியானவர் இறக்கவும், தாய்மார் தம்பிமார் முதலானவர்களும் சப்தலோகத்தாரும் துக்கப்படவும், இவற்றைக் குறித்து எவ்வளவும் இரக்கப்படாமல் என்னை அழைத்துக்கொண்டு வனத்தில்வந்து பிரவேசிக்க பண்ணவர் இன்னமும் வருவார் வருவார் என்று நினைத்து, நான குலாவிக்கொண்டு இருக்கிறதா? என்றார், இப்படிப் பலபல விதமாக எண்ணி எண்ணி, உயிர் நடுங்கியிருந்து, பிரலாபித்து, ஜானகியார், 'என் உயிர் இருக்கிறவரைக்கும் துன்பம் இடைவிடாமல் சம்பவித்துக்கொண்டே இருக்கும், இந்தமட்டிலே நான் இறந்து விடுவேனேயானால் சிரமம் நீங்கிக் கீர்த்திகிடைக்கும்' என்று அதற்குத் தக்க யோசனை செய்கின்றார்.

'வீரகண்டையை அணிந்த ரகுராமரைக் காண வேண்டுமென்கிற ஆசையினாலே பலவித வருந்தத்தையும் சகித்துக்கொண்டு என்னுயிரையும் விட்டுவிடாதிருந்தேன்; இப்படி நெடுநாளாக இந்த ராக்ஷசருடைய நகரத்திலே சிறையிருந்த என்னை அந்த மனுகுலோத்தமராகிய துல்லியரானவர் தொடுவாரா? என்னைப் பரபுருஷர் இச்சித்தார் என்றறிந்து, பல பேரும் சொன்ன பழிச்சொற்களெல்லாம் காதிலே விழக் கேட்டும், இந்த உயிரை வைத்துக்கொண்டு எவ்வளவுகாலமா யிருக்கிறேன்? என்னைப்பார்க்கிலும்

கடின சித்தத்தையுடைய ராக்ஷசிகள் வேறே யாவர்? நீங்காத பழியைச் சுமந்துகொண்டு இருக்கின்ற என்னுடைய குடிப்பிறப்பும் நாணமும் நன்றாயிருக்கின்றன! கதைகளிலே சொல்லப்பட் டிருக்கின்ற கற்புடைய ஸ்திரீகளுள், மனைவாழ்க்கையை நீங்கிப் பிராணனோடு இருக்கின்றவர்கள் என்னை யன்றி யாரிருக்கின்றார்கள்! அந்நியருடைய கிருகத்தை அடைந்த பெண்ணை விரும்புகிறது யோக்கியம் அன்றென்று என் பிராண நாயகர் என்னைக் கைவிட்டவராகி, வேறொரு ஸ்திரீயை மணந்து சுகித்திருக்க, நான் வீண்பொழுது போக்கி அநர்த்தத்தைச் செய்து வேறெந்த உபாயத்தைக்கொண்டு அதைச் சகிப்பேன்! எப்பொழுது நான் இந்தப் பெரும்பழிக்கு ஆளானேனோ அப்பொழுதே பிராணத்தியாகம் பண்ணிக்கொள்ளவேண்டும்: அப்படிச் செய்யாமல், உலகத்தார் அளவிடப்படாத நிந்தை கூற, நான் துப்பழிக்கு உயிர்கொண்டு இருப்பது மோக்ஷ சாம்ராச்சியத்தை அடைவதற்கா? என் நாயகரும் என் கொழுந்தனும் மனத்திலே அன்பில்லாதவர்களாய்ப் பொல்லாத பழியைச் சுமந்தாலுஞ் சுமக்கட்டும்: நான் கீர்த்திபெற்ற நல்ல குடியிற் பிறந்தேனே, என் பழியைத் துடைக்கின்றவர்கள் என்னைவிட யாரிருக்கிறார்கள். வஞ்சனையாக வந்த மானின் பின்னே என் பர்த்தாவைப் போக்கிப் பின்பு எனக்குக் காவலாயிருந்த மைத்துனப் பிள்ளையையும் அவர் பின்னே போம் என்று அனுப்பிவிட்டு, காளகூட விஷத்திற்கு ஒப்பாகிய ராக்ஷசன் வீட்டில் வந்திருக்கின்ற நான் உயிருடனிருந்தாலும் உலகம் அங்கீகரிக்குமா? சத்த வீரர்களாகிய ரகுநாயகரும் இளைய பெருமாளும் தங்களுக்கு வந்த குற்றத்தை நீக்கிக்கொள்-

ளூம்பொருட்டு யுத்தஞ்செய்து சத்துருக்களை ஜயித்தாலும் ஜயிக்கட்டும், அல்லவென்று இறந்து போனாலும் போகட்டும், நான் கிருகதர்மம் தப்பி நடந்த பின்பு சொல்லுகின்ற என் பழி அவர்களைச் சுற்றுமோ! கவரிமானுக்குச் சமமாகிய மானமுடைய பதிவிரதைகளுக்கு எதிரே பேதமையையுடைய நான், புருஷோத்தமனாகிய தன் நாயகனைப் பிரிந்து கள்ளர் நகரத்தில் வாசமாயிருந்தவள் இவளென்று அவர்கள் ஏசும்படி கேட்டுக்கொண் டிருப்பேனோ! என் பிராண நாயகர் வந்து ராக்ஷச வர்க்கத்தை யெல்லாம் பற்றறக் கொன்று, என் சிறை மீட்டகாலத்திலும், நீ வீட்டிற்குள்ளே நுழைகிறதற்கு யோக்கியமானவள் அல்லள் என்று சொன்னால், அப்போது என் கற்பை எவ்விதத்தில் பரீக்ஷை கொடுத்து நிலை நிறுத்துவேன்! ஆகையால், இறந்துபோகிறதே தரும நெறி' என்று நினைத்துப் பின்னும், 'என்னைச் சாவாமல் காத்துக் கொண்டிருக்கின்ற ராக்ஷசிகளும் என் அதிர்ஷ்டத்தினால் உறங்கிவிட்டார்கள்; இதுதான் சமயம், இதைவிட வேறு சமயம் கிடைக்க மாட்டாது' என்று ஜானகியார் எழுந்து ஒரு குருக்கத்திப் புதலினிடத்திற் போய்ச் சேர்ந்தார். அதுகண்டு அனுமானானவர், பிராட்டியினுடைய கருத்தையும் குறித்தறிந்துகொண்டு, நடுநடுங்கி, இப்படிச் செய்யவேண்டா என்று இந்த க்ஷணம் போய்க் கையைப் பிடித்துக் கொண்டு தடை செய்யலாம் என்றால், பதிவிரதா சிரோமணியா யிருக்கின்றவரைத் தீண்டக்கூடாதே என்று மனங்கூசினவராய், 'ராம ராம' என்று எதிரே ஓடிவந்து, 'அம்ம! லோககாரணி! லோகபரிபூரணி! லோகநாயகி! லோகமாதா! லோகோத்தமி! அடி-

யேன் தேவர்தேவ ராகிய உமது பிராணநாயகருடைய தூதன்' என்று திருவடியில் விழுந்து சேவித்துச் சொல்லுகிறார்:

'தாயே! ஸ்ரீராமருடைய ஆஜ்ஞையைச் சிரசின்மேற் கொண்டு வந்தவன் நான்; என்னைப்போல அநேக வானர வீரர்கள் தேவரீரைக் குறித்துப் போய்த் தேடுகின்றார்கள்; அடியேன் செய்த தபோபலத்தினாலே உம்முடைய பாதாரவிந்தத்தை வந்து தரிசித்தேன்: தேவரீர் இங்கிருக்கின்றதைச் சர்வலோக நாயகராகிய ஸ்ரீராகவர் அறியார்; இதற்குச் சாக்ஷி என்னவென்றால், இன்னம் ராக்ஷசக் கூட்டங்கள் சாகாமல் உயிருடன் இருக்கின்றனவே, இதுதான்; இதுவன்றி வேறு சாக்ஷியும் வேண்டுமோ! திருவுளத்தில் ஐயப்படவேண்டா; அடையாளங் கொண்டுவந்திருக்கிறேன், அதைப் பார்த்துக்கொள்ளும். அதுவுமன்றிக் கலியாணனவர் திருப்பவளந் திறந்து சாதித்தருளிய திருவாய்மொழியும் இருக்கின்றது. அதைக் கரதலாமலகமாகச் சொல்லுகிறேன். அதையுங் கேட்டு அறிந்துகொள்ளும்; மனத்தில் வேறே யோசனை செய்ய வேண்டா' என்று இந்தப் பிரகாரம் சொல்லித் தாழ்ந்து வணங்கி, மெலிந்து குறைந்து நிற்கின்ற அநுமானைப் பார்த்தருளி, முன்பு ராக்ஷசனென்று கோபங்கொண்டு, பின்பு இரக்கமுற்று, 'இவன் ராக்ஷசன் அல்லன், நல்லொழுக்கத்தில் நின்று, ஐம்பொறிகளையும் வென்ற சர்வோத்தமனாகவேண்டும் அல்லவென்றால், தேவனாகவேண்டும். மேலும், அறிவிலும் வார்த்தையிலும் பார்த்தால், பரிசுத்தனாகவும் குற்றமற்றவனாகவும் காண்கின்றான். ஆகிலும், ராக்ஷசன்தா

னாகட்டும், தேவன்றானாகட்டும், அல்லது இப்போது கொண்டிருக்கிற உருவத்தின்படியே வானர சிரேஷ்டன்றானாகட்டும், இத்தருணத்தில் சொல்லிக்கொண்டு வந்த வார்த்தையானது, கொடுமையாகச் சொன்னதாக இருந்தாலும் இருக்கட்டும், அல்லது உண்மையாக இரக்கமாகச் சொன்னதாயிருந்தாலும் இருக்கட்டும். எம்பெருமானுடைய திருநாமத்தைச் சொல்லி என் மனத்தை யுருக்கி, இந்தச் சமயத்திலேயே நல்லதெளிவைக் கொடுத்தானே இதைப்பார்க்கிலும் உயிருக்கு வேறு உதவி என்ன செய்யவேண்டும்! மற்றென்னதானிருக்கிறது' என்று நினைத்து, பிராட்டியார் கிருபையுடனே பார்த்து, 'பின்னும் என்னுள்ளம் இரங்குகின்றது, இவன் மனத்திலே கள்ளமில்லான், வஞ்சக மார்க்கத்தை யுடையவனல்லன், அந்தரங்கமான வார்த்தையுடனே கண்களில் நீர் பெருகப் புலம்புகின்றான்; ஆகையால், இவனை விசாரிக்கலாம்' என்று எண்ணி, 'நீ யாரப்பா?' என்று கேட்க, அந்தத் திருமொழியைச் சிரசிலே தாங்கிக்கொண்டு, கைகூப்பித் தண்டஞ் சமர்ப்பித்து, 'தாயே! தேவரீரை ஸ்ரீராமர் பிரிந்தபின் சம்பாதித்த சிநேகனும், சூரியனுடைய குமாரனும் வானர குலத்திற் கெல்லாந் தலைவனும், மிகவும் நல்லவனுமாகிய சுக்கிரீவன் என்கிற நாமத்தையுடையவன் இருக்கின்றான். அவனுக்குத் தமையன் வாலி என்பவன். அவன் முன்னாளிலே இந்த ராவணனைத் தன் வால் முனையிலே கட்டிக்கொண்டு எட்டுத் திக்குகளிலும் எழும்பிப் பாய்ந்து ஜயங்கொண்டவன். தேவர்கள் வேண்டிக்கொள்ள மந்தர பர்வதமாகிய மத்தில் வாசுகியைக் கயிறாகச் சுற்றி அமுதமுண்டாகும்படி கடலைக் கடைந்த புஜபராக்கிரமம் உடையவன். அப்படிப்

பட்ட வாலியை உம்முடைய நாயகர் ஓர் அம்பினாலே பிராணனை வாங்கி, அவனுடைய ராஜரிகத்தை அவன் தம்பியாகிய சுக்கிரீவனுக்குக் கொடுத்து அவனைத் தோழனாக்கிக் கொண்டார். அந்தச் சுக்கிரீவன் எங்களுக்கு ராஜாவாயிருக்கின்றவன். அவனிடத்திலிருக்கின்ற மந்திரிமார்களுள் நாயேன் ஒருவன். நான் வாயுகுமாரன், என் பேர் அநுமான் என்பது எங்கள் ராஜாவினிடத்தில் எழுபது வெள்ளஞ் சேனை வீரர்கள் இருக்கின்றார்கள். அவர்களில் ஒவ்வொருவரே இந்த லோகத்தையெல்லாம் பேர்த்தெடுக்க வேண்டுமென்றாலும் எடுப்பார்கள். சமுத்திரத்தையும் தாண்டுவார்கள். அப்படிப்பட்டவர்கள் எல்லாம் கூட்டமாகக் கூடியிருக்கின்றார்கள். உம்முடைய பிராணநாயகர் எதைக் குறித்து அஜ்ஞாபித்தாலும் அதைக் குறிப்பினால் தெரிந்துகொண்டு அந்த க்ஷணமே தவறாமல் செய்வார்கள். அநேக வானரங்கள் எழு சமுத்திரமும், அந்தச் சமுத்திரம் சூழ்ந்த எழுவகைப்பட்ட தீவுகளாயிருக்கின்ற பூமியும், நாக லோகமும், தெய்வ லோகமுமாகிய இந்த அண்டங்களெல்லாம் தேடி உம்மைக் காணாவிட்டால் இந்த அண்டத்துக்கு அப்பாலும் போய்த் தேடும்படி புறப்பட்டுப்போயிருக்கிறார்கள். இராவணன் உம்மை யெடுத்துக் கொண்டு வருகிறபோது, நீர் வஸ்திரத்தில் கட்டிப் பூமியில் எறிந்த ஆபரணக் குறிப்பினாலே ஸ்ரீராமர் என்னை அழைத்துத் தனியே வைத்துக்கொண்டு, சொல்லவேண்டியவைகளெல்லாஞ் சொல்லி, "தென் திசைக்குப் போய் வா" என்று ஆஞ்ஞாபித்தார். அவருடைய கிருபைக்கு விக்கினம் வருமா; அன்று நீர் கழற்றி எறிந்த ஆபரணங்களை எங்கள் ராஜா-

வானவர் சுவாமி சந்நிதியில் கொண்டுவந்து வைத்த போது, அவருக்கு உண்டாகிய துக்கம் என்னால் அறிந்து சொல்லக்கூடுமோ! தேவரீரே யல்லாமல் ராம சந்திரருக்கு உயிர்நிலை வேறுண்டோ! அந்தத் திருவா-பரணந்தான் இந்நாள் வரைக்கும் உம்முடைய மாங்-கல்ய சூத்திரத்தைக் காத்தது. அஃது அப்படியிருக்-கட்டும், வாலியினுடைய குமாரரும், எங்களுக்கெல்-லாம் இளவரசுமாகிய அங்கதப்பெருமான் என்பவர் இரண்டு வெள்ளச் சேனையுடனே தெற்குத் திசையில் தேடுகிறதற்குப் புறப்பட்டு வந்திருக்கின்றார். அவர் "லங்கைக்குப் போய் வா" என்று சொல்லி, என்னை அனுப்பினார்' என்று நின்னையை நீங்கிய திருவடியா-னவர் விண்ணப்பஞ்செய்து அன்புடனே மனம் உருகி நின்றார். இப்படி அவர் சொன்ன வார்த்தைகளைக் கேட்ட மாத்திரத்தில் மகத்தாகிய பிரமானந்தமானது பொங்கி எழுதலும், பிராட்டியார் பெருமூச்செறி-வது தவிர்ந்து, இளைத்திருந்த சரீரம் மிகவும் பூரித்து, நான் உஜ்ஜீவிக்கிறதற்குக் காலம் வந்ததோ என்று கண்களில் அருவிபோல ஆனந்த பாஷ்பம் ஒழுக, 'அப்பா! அந்த ரவிகுலோத்தமருடைய திருமேனி எந்தப்படி யிருக்கும்? சொல்' என்று அருளிச்செய்-தார். அந்த வார்த்தை கேட்ட அனுமானானவர் அதிக மகிழ்ச்சியுடனே; 'அம்மா! ஸ்ரீராமபிரானு-டைய திவ்விய சுந்தரம் இப்படி யிருக்கும் என்று உபமானம் எடுத்துக்காட்ட ஒருவராலும் ஆகாது. ஆகிலும் நாயேன் அறிந்த மாத்திரம் சொல்லிக் கொண்டு வருகிறேன். அவற்றில் ஏதாவது தவறு வந்தாலும் உமது திருவுள்ளத்தில் ஆயாசப் படாமல், அவருடைய திருமேனியைத் தேவரீர் அறிந்திருக்

கிறவர் அனைபடியினாலே, மனத்தினால் சரியாகப் பாவனை செய்து அங்கீகரித்துக் கொள்ளுங்,' என்று சுவாமியினுடைய திருவடிகளைப் பாதாதிகேச பரியந்தம் சொல்லத் தொடங்கினார். ஸ்ரீ ஜாநகீஜாநுடைய திருவடிகளின் விரல்களின் செந்தாமரைப் புஷ்பங்களை என்று தேவர்கள் ஸ்துதி செய்கிறபடியினாலே அந்தக் கமலத்தைவிட உபமானஞ் சொல்லுகிறதற்கு வேறே என்ன வஸ்து இருக்கின்றது. அப்படிப்பட்ட திருவடியின் காந்திக்கு முன் பவள நிறத்தைக் கருங் குவளையைப் போலக் கறுப்பென்றே சொல்ல வேண்டும். அந்தத் திருவடிகளின் விரலழகுக்கு உபமானஞ் சொல்லுகிறதற்குக் கற்பகத்தின் அரும்பும் செம்பவளமும் எவ்வளவு? அவைகள் இருக்கட்டும்: இளஞ்சூரிய கிரணங்களை ஒருவேளை ஒக்கும் என்று சொன்னாலும் சொல்லலாம்: அவ் விரல் நகங்களுக்குச் சிறியவைகளும் பெரியவைகளுமாய்க் களங்கமில்லாமல் பத்துச் சந்திரர் உண்டாயிருந்தால், அவைகளை ஒப்பிடலாம். அப்படித்தான் இல்லையே, இனிப் பிரகாச முண்டாயெ வச்சிரத்தைச் சொல்லுவோம் என்றால், அதில் திரட்சி உண்டாயிருக்கவில்லை. ஆகையால், சுத்தின் திருவடிக்கு உபமானம் அறிந்து சொல்லமாட்டேன். அத்திருவடி பூமியிலே பொருந்தாமல் ஆரணியத்தில் நடந்து வருந்தியதனாலுஞ் சாமுத்திரிக சாஸ்திரத்திற் சொல்லப்பட்ட லக்ஷணத்திற்குள் அடங்காமல் அதிலும் அதிக லக்ஷணத்துடனே பிரகாசிப்பதும் புவனமெல்லாம் கவிந்துகொண்டிருப்பது மாகையால் அதனுடைய மகிமை ஒருவராலுஞ் சொல்லி முடியாது. கணைக்காலுக்கு உபமானம் அம்பறாத்தூணி யென்று சொல்லலாம்;

சொன்னால், அதுதான் சரியாமா? திருத்தொடை-களுக்கு மதயானையின் தும்பிக்கையை ஒப்பாகச் சொல்லுவோம் என்றால், அவைகள், அதை வெட்கிப் போம்படி செய்து, அதிலும் மிக்க அழகாய், பட்சி ராஜனுடைய கழுத்தைப்போல ஜொலித்துக்கொண்டு, இந்த உலகத்தில் வேறே உபமானம் இல்லை யென்று சொல்லும்படி யிருக்கின்றன. அவருடைய திருவுந்திக்-கமலத்திற்கு, வலமாகச் சுழித்தோடுகின்ற கங்கா நதி-யின் நீர்ச்சுழியை உபமானமாகச் சொன்னாலும் சரி-யாகமாட்டாது. ஆகையால், மகிழ மலர்போல் விளங்கு-கிறதென்று சொன்னால் சொல்லலாம். அதைவிட வேறென்ன உவமைதான் இருக்கிறது! மரகத பர்வத-மானது அஞ்சும்படி விசாலித்து உயர்ந்து பிரகாசிக்-கின்ற திருமார்பை, ஸ்ரீமஹாலக்ஷ்மி விட்டுப் பிரியா-திருக்கும்படி தவஞ் செய்யாளாகில், அவளைவிடத் தரித்திர முடையவர்கள் யாரிருக்கிறார்கள்! கமலம் என்று வண்டுகள் சுற்றும்படி முழங்கால் பரியந்தம் நீண்ட திருக்கைகளுக்கு, ஐராவதத்தினுடைய தும்-பிக்கையானது சிறிது உவமை யாகும் என்று சொல்ல-லாம். அது தவிர வேறொன்று உவமை யாகுமா? பகற்காலத்திலே தாமரை மலர்களைக் கண்டதுபோலத் தோன்றுகின்ற அந்தக் கைகளின் நகங்கள், முற்காலத்-திலே இரணியனுடைய வச்சிர சரீரத்தைப் பிளந்தபடி-யினாலே இப்பொழுது அவை கூர் மழுங்கி யிருக்கின்-றன. அந்த அழகிய மணவாளருடைய திருத்தோள்-களுக்கு உபமானமாகப் பர்வதத்தைச் சொல்லுவோ-மென்றால் அது திரண்டு இருக்கவேண்டும், பிரகாச-முண்டாயிருக்கவேண்டும், விஜயலக்ஷ்மி வாசமாயிருக்க வேண்டும், வில்நாரி புரண்டுகொண் டிருக்கவேண்டும்,

கீர்த்தி பொருந்தி யிருக்கவேண்டும், ஒன்றைப்போல் இரண்டும் சேர்ந்திருக்க வேண்டும், இப்படி யெல்லாம் இல்லாததினாலே அந்தப் புஜங்களுக்குப் பர்வதம் உபமானம் ஆகமாட்டாது. தெரியாதவர்கள், சமுத்திரத்தில் உண்டாகிய சங்கத்தையும், கன்னிக்கமுகையும் திருக்கழுத்திற்கு உபமானமாகச் சொல்வார்கள் ; சேஷசாயியாகிய ஸ்ரீ மஹாவிஷ்ணு இடக்கரத்தில் ஏந்துகின்ற பாஞ்சஜன்னியம் இருக்க அவைகளை யெல்லாம் உவமை கூற எனக்குச் சம்மதம் இல்லை. எம்பெருமானது திருமுகத்திற்குச் செங்கமலத்தை உபமானஞ் சொல்லுவோம் என்றால் திருக் கண்களுக்கு உபமான வஸ்து வேறு என்ன சொல்லுவேன்! பூர்ண சந்திரனைச் சொல்லலாகாதா என்று தேவரீர் அருளிச் செய்வீராகில், அந்தச் சந்திரன் தன் பிரகாசத்துடனே உருவமும் நாளுக்கு நாள் மெலிந்து தேய்ந்து போகின்றதனால், திவ்வியமாகிய தேஜசுடனே கூடிய அந்தத் திருமுக மண்டலத்திற்குச் சமானமாகத் தக்கதா! திருவாயின் அழகுக்குச் சிவந்த நிறத்தை யுடைய தாமரை ஒப்பாகும் என்றால் அது லஜ்ஜைப்படும். அப்படி யிருக்க, குளிர்ச்சி பொருந்தி அமிர்தம் ஊறுகின்ற மிருதுவாகிய இன்சொல்லும், குறுநகையும் இல்லாம லிருக்கின்ற பவளமா அதற்கு உவமை சொல்லத் தக்கது? தகாததாயினும் பெரியோர்களாலே அந்தச் செவ்வாய் திருப்பவளம் என்று சொல்லப்பட் டிருக்கின்றது. கேளும்மா, ஜானகியாரே! சுவாமியின் வரிசையாகிய தந்தங்கள் முத்துக்களோ! நிலவின் துளிர்களோ! அமிர்தத்தின் துளிகளோ! தர்மத்தின் முளைகளோ! மெய்ம்மையின் அரும்புகளோ! அல்லது மற்றெவைகளோ! அவற்றின் திருவழகுக்கு உபமா-

ணம் என்ன என்று சொல்லுவேன்! கிருபாநிதியாகிய ஸ்ரீ ராமபிரானுடைய மேல்வாய் அதரத்தைச் சேர்ந்திருக்கின்ற திருமூக்கு, இந்திர நீலக் கொழுந்தும், மரகத ரத்ந காந்தியும் போலப் பசந்த மேனியை யுடையதாய், இந்திரகோபத்தைக் கவ்விய பச்சோந்தியைப் போல் பிரகாசிக்கின்றது என்று சொல்லுவோம் என்றால், அதுவும் உவமை யாகமாட்டாது. அந்தக் கரதூஷண திரிசிரர்களுடைய யுத்தத்திலே அநேக இராக்ஷச கவந்தங்களும், பலவகைப் பேய்களும், தேவர்களும், ரிஷிகளும், தர்மமும், வேதமும் இனி இராக்ஷச குலம் கட்டழிந்து போகுமென்று சந்தோஷித்துக் குதித்துக் கூத்தாடவும், சுவாமியினுடைய பிரசண்ட உத்தண்ட கோதண்டமானது வளையவும், அன்று வளைந்த அவருடைய திருப்புருவத்திற்கு உபமானம் நீரே பார்த்துக்கொள்ளும். நெற்றியின் திருவழகுக்கு உபமானஞ் சொல்லவேண்டுமென்றால் பிறையைத்தான் சொல்லவேண்டும். அதுவும் நடுவே மறுவும், வளர்வதும், தேய்வதும், பாம்பின் வாயில் அகப்படுவதும், உதயமாவதும், அஸ்தமிப்பதும் இல்லாமல் பகற்காலத்திலும் பிரகாசிக்கின்றதாய் இருளின்கீழ் எந்நாளும் சேர்ந்திருக்குமானால் அவருடைய திருநெற்றிக்கு உவமையாகும். கேசமோ நீண்டு, குழன்று, நெய் தோய்ந்து, இருண்டு, நெறிந்து, நெருங்கி, நீல வர்ணமாய் முறுக்குற்றுச் சரிந்து, கடைசுருண்டு, அகிற் புகையுடனே மற்றுமுள்ள வாசனைகளை ஊட்டவும், புஷ்ப மாலைகளைச் சூட்டவும் வேண்டுவதில்லை என்னும்படி இயற்கையாகத் தெய்வமணம் வீசிக்கொண்டு இப்போது ஜடையாயும் இருக்கிறதென்றால் அதை மேகத்திற்குச் சமானமாகுமென்று சொல்வது இழி-

அல்லவோ! பிதாவானவர் "பட்டாபிஷேகம் பண்ணிக்கொண்டு பாக்கியத்தையும், இராச்சியத்தையும் பெற்றிருந்து, இராஜரீகஞ் செய்" என்று சொன்னபோதும், சிறிய தாயார், "இராச்சியத்தை விட்டு அரணியத்திற்குப் போ" என்று சொல்லப் புறப்பட்டு வந்த போதும் ஒரு தன்மையாய் நடந்த அந்த ஸ்ரீராமருடைய நடையை இடபத்தின் இழிவாகிய நடைக்குச் சமானமாயிருக்கின்றது என்று சொன்னால், அப்படி எக்காலும் ஒரு தன்மையாகிய நடையில்லாத இடபத்தை உபமானமாகச் சொல்கிறவர்கள் என்னுடைய நடையைத்தானே சொல்லலாகாதா என்று மதயானை மனம் வருந்துமே; ஆகையால், இரண்டையும் சொல்லக்கூடாதம்மா' என்று இவ்வண்ணமாக அநுமானானவர் சொல்ல, அவற்றையெல்லாம் கர்ணாமிர்தமாகக் கேட்டுக்கொண்டு அந்தப் பிராட்டி அக்கினியிலிட்ட மெழுகுபோல உருகித் தம்மை அறியாமல் பரவசப்பட்டு மனங் கரைந்தார். அப்படி உருகி நின்ற சீதாலக்ஷ்மியை மாருதியானவர் பூமியில் விழுந்து சாஷ்டாங்கமாகச் சேவித்துக்கொண்டு, 'என் தாயே! சர்வலோக சரணியளாகிய உம்முடைய பிராண நாயகர் சொல்லிய சில குறிப்புகளும், அடையாளச் சொற்களும் இருக்கின்றன; அவற்றையுஞ் சொல்லுகிறேன்; கேளுமம்மா, லோக மாதாவே' என்று சொல்லுகின்றார்:

'நீண்டமுடி வேந்தனரு ளேந்தி நிறைசெல்வம்
பூண்டதனை நீங்கிநெறி போதலுறு நாளின்
ஆண்டகந கரையொடு வாயிலக லாமுன்
மாண்டையது காமெனன விசைத்தது மிசைப்பாய்.

'மீட்டுமுரை வேண்டுவன இல்லையென மெய்ப்பேர்
தீட்டியது தீட்டரிய செய்கையது செவ்வே
நீட்டிதென நேர்ந்தனனெ னாநெடிய கையால்
காட்டினனொ ராழியது வாணுதலி கண்டாள்.

'இறந்தனர் பிறந்தபய னெய்தினர்கொ லென்கோ
மறந்தன ரறிந்துணர்வு வந்தனர்கொ லென்கோ
துறந்தவுயிர் வந்திடை தொடர்ந்ததுகொ லென்கோ
திறந்தெரிவ தென்னைகொலிந் நன்னுதலி செய்கை.

'இழந்தமணி பற்றர வெதிர்ந்ததென லானாள்
பழந்தன மிழந்தன படைத்தவரை யொத்தாள்
குழந்தையை யுயிர்த்தமல டிக்குவமை கொண்டாள்
உழந்துவிழி பெற்றதொ ருயிர்ப்பொறையு மொத்தாள்.

'இருந்துபசி யாலிட ருழந்தவர்க ளெய்தும்
அருந்துமமு தாகியத றத்தவரை யண்மும்
விருந்துமென லாகியது வீயுமுயிர் மீளும்
மருந்துமென லாகியது வாழிமணி யாழி'

'சுவாமியானவர் தேவரீரை நோக்கி, "வழிநடக்கிறதோ உனக்குப் பிரயாசம், எனக்குத் தாய்மார்களாகிய உன் மாமிமார்களுக்குச் சிலநாள்மாத்திரம் உரிய பணிவிடைகளைச் செய்துகொண்டு, நீ இவ்விடத்தில் தானே யிரு" என்று சொன்னவுடனே, நீர் உடுத்த வஸ்திரத்தோடும், உயிர் பதைக்கின்ற தேகத்தோடும், அதிக கோபத்தோடும் திருமாளிகையை விட்டுப் பிரயாண சந்நதமாய் அப்பால் வந்து நின்றீராம்; "அதையும் சொல்" என்றும், அதுவுமன்றி மகுடாதிபதியாகிய தசரத சக்கரவர்த்தியினுடைய ஆஞ்ஞையைச் சிரசாவகித்துத் தாம் பெற்ற பரிபூர்ணமாகிய சம்பத்துக்களை யெல்லாம் விட்டு நீங்கி, வனத்திற்கு வரும்போது, பட்டணத்து மதிலையும் கோட்டை வாயிலையும்

தாண்டி வெளிப்படாததற்கு முன்னேதானே, "காடு எங்கே?" என்று கேட்டாராம்; "அதையுஞ் சொல்" என்றும், உங்களைத் தேரின்மேல் ஏற்றிக்கொண்டு வந்து வழிவிட்ட சுமந்திரருடனே செய்தி சொல்லி அனுப்பும்பொழுது, நீர் அவரைப் பார்த்து, "என் தந்தைமாருடனே உங்கள் ரக்ஷையாகிய சீதையானவள் ஸ்ரீராமநாயகர் திருவாய் மலர்ந்தருளுகின்ற வசன சாதுரியத்தால், மனோதுக்கமெல்லாந் தணிந்திருக்கிறாள் என்றும், நான் வளர்த்த கிளிப்பிள்ளைக்கும், நாகணவாய்ப் பறவைக்குஞ் சொற்கள் கற்பித்து அவைகள் இளைத்துப் போகாமல் ஜாக்கிரதையாகக் காப்பாற்றச் சொன்னாள்" என்றுஞ் சொல்லச் சொன்னீராம்: "அதையுஞ் சொல்" என்றும், "மற்றுஞ் சொல்லவேண்டியது என்ன இருக்கின்றது" என்றும் சொல்லித் தமது திருநாமத்தைப் பதித்திருக்கின்றதும், எழுதப்படாத சித்திரவேலையையுடையதும், அழகும் பிரகாசமும் உள்ளதும் ஆகிய ஒரு திருவாழியை எடுத்து, "இதை நீ ஜானகி கையிற் கொடு" என்று கொடுத்தார்" என்று இரண்டு கைகளாலும் அதை வாங்கிக்கொண்டு காண்பித்தார். அந்தக் கணையாழியைப் பிராட்டியார் கண்டார்! கண்டபோது, ஸ்திரீரத்னமாயிருக்கின்ற ஜானகிப் பிராட்டியாருக்கு உண்டாகிய சந்தோஷத்தை என்ன சொல்லுவேன்! மானிடராய்ப் பிறந்தும் மோக்ஷம் பெறவேண்டிய முயற்சியில்லாமல் இறந்தவர்கள் அதை ஸ்ரீசர்வேசுவரனுடைய நிரேதுக கடாக்ஷத்தால் அடைந்தார்கள் என்பதாகச் சொல்லுவேனோ! ஒரு பொருளை வைத்து மறந்துபோய்க் காணாமல் துக்கித்தவர்கள் மறுபடி அந்தப் பொருளை நினைத்தெடுத்தார்கள் என்பதாகச் சொல்லு-

வேனே! உடலை விட்டு நீங்கிப்போன உயிரானது மீளவும் அந்த உடலில் தானே வந்து பிரவேசித்த-தென்பதாகச் சொல்லுவேனே! இந்தப் பிராட்டியா-ருடைய செய்கையை அறிவதெப்படி? நாகமானது தான் இழந்த தனது மாணிக்கத்தைத் தன் கண்ணுக்கு எதிரே யிருக்கக் கண்டது போலவும், தம்முடைய கையைவிட்டு நீங்கிய பிதிரார்ச்சிதமான திரவியம் கிடைக்கப் பெற்றவர்கள் போலவும், பிள்ளைக்கு ஏக்-கற்றிருந்த மலடியானவள் பிள்ளையைப் பெற்றது போலவும், கண்ணில்லாமல் இருந்த ஆன்மா கண்பெற்-றது போலவும், அபரிமித ஆனந்தத்துடனே அதை வாங்கி மார்பினிடத்தில் வைத்துச் சிரசின்மேல் தாங்-கிக் கண்களில் ஒற்றிக்கொண்டு, தோள்கள் பூரித்து மெலிந்து குளிர்ந்து வெதும்பி ஏங்கிப் பெருமூச்செறிந்-திருந்தார். அஃது இப்படிப்பட்டதென்று ஒருவரால் தெரிந்து சொல்லக்கூடுமோ! அந்தத் திருவாழியை மூக்கினிடத்தில் வைத்து ஆக்கிராணிப்பார்; கண்ணீ-ரைத் துடைத்துக்கொண்டு மறுபடியும் கண்களில் நீர்-ததும்ப நெடுநேரம் உற்றுப்பார்ப்பார்; அதனுடனே பேசலாம் என்றும் நினைப்பார்; ஒன்றுஞ் சொல்லாம-லிருப்பார்; மகிழ்ச்சியினால் சரீரம் புளகித்து மயிர்க்-கூச்செறிய இருப்பார். அதை விழுங்குவோமென்றும் இச்சிப்பார். அந்த மோதிரத்தின் பிரகாசத்தினால் மின்னலுக்கு ஒப்பாகிய பிராட்டியாருடைய திருமேனி முழுதும் மாற்றுயர்ந்த பொன்னிறமாய் ஜொலிக்கத் தலைப்பட்டது. அதனால், அந்தக் கணையாழியானது, தீண்டின மாத்திரத்தில் சகல வஸ்துக்களையும் பொன்-னாகச் செய்யும் ஸ்பரிசவேதி என்கிற தெய்விகமாகிய இரத்தினந்தானோ அறியேன்! அது ஜானகியாருக்கு,

அநேக நாள் பசியாயிருந்தவர் தேவாமிர்தம் அடைந்ததுபோலவும், தர்ம சிந்தையுள்ளவர்களிடத்தில் வந்த விருந்தினர் போலவும், பிராணன் போகின்ற சமயத்திலே கிடைத்த சஞ்சீவி மருந்து போலவும் இருந்தது. மாணிக்கமாகிய அந்தக் கிருவாழியானது இவ்வாறாக உயிரை உருக்குதலால் அந்த ஞானமாதாவானவர் கண்ணீர் முத்துப்போல் துளிக்க, பவளம் போலப் பிரகாசிக்கின்ற திருவாயிலிருந்து உற்பத்தியாகின்ற சொற்கள் குழற, 'அதியமானே! நீ என் பிராணனைக் கொடுத்தாய்: ஆதலால், நீயே புருஷோத்தமன்' என்று புகழ்ந்து வாழ்த்தினர்.

VI. சத்திமுற்றப் புலவர்

பண்டைக் காலத்திலே, மதுரையம்பதியில் சங்கம் தமிழ்மொழியைப் பாலித்துவந்த பாண்டி மன்னருள் ஒருவன், தமிழ்மொழியில் மிக்க விருப்புடையனாகிப் பாவலர் பலர்க்கும் ஏற்றவாறு பரிசளித்துப் பாராட்டி வந்தனன். அவன் இல்பொருள் உவமை, உயர்வு நவிற்சி முதலிய அணிகளை வியவாது, இயற்கை நவிற்சி யொன்றினையே பெரிதும் வியந்து இன்பமடையும் இயல்புடையவன்.

அவ் வேந்தன், ஒருநாள் மாலைப்போதில், பூங்காவிற் சென்று, இயற்கைப் பொருள்களின் வளப்பத்தை உற்று நோக்குவானானான். அப்பொழுது, ஆண்டிருந்ததோர் தாமரைத் தடத்தின்கண் நீரையே நாடிநின்ற நாரை யொன்றினைக் கண்டு, மன்னன் அப்-

பறவையின் வெள்ளிய சிறகையும், செவ்விய காலையும் வியந்து நோக்குதலும், அந்நாரை தன் அலகை அகல விரித்தது. அது கண்ட அரையன், 'இதன் அழகிய அலகிற்கு எதனை உவமை கூறலாம்' என நீடு நினைந்தும் அவற்கு ஏற்றது யாதும் நேரவில்லை.

பின்னர், இறைவன் தன் அரண்மனையை யணுகி, இரவின்கண் கண்வளராது எண்ணியும் அதனுக்கியைபுடையது ஏதும் ஏற்பட்டிலது. மறுநாள் அம்மன்னன் தன் அவைக்களத்துள்ள அருங் கவிவாணரை நோக்கி, 'செந்தமிழ்ப் புலவிர்! நாரையின் அலகிற்கு நன்கு அமைந்ததோர் உவமைப் பொருளை நாடி உரைமின்' என்றான். அக்கவிஞர் தனித்தும், ஒன்று குழுமியும் நாடினர்; அதற்கு இயைந்தது ஏதும் ஏற்பட்டிலது.

இன்னணம் நாள்பல செல்ல, ஒருநாள் அவ்வேந்தன் தன் வழக்கமேபோல் நள்ளிரவில் நகரிசோதனைக்குச் சென்றான். ஆண்டுச் செந்நாப்புலவ ரொருவர் வறுமையால் வாடி, தன் மனைவியைப் பொருள்வயிற் பிரிந்து, நாடுபலவும் நாடிச்சென்று, முடிவில் கூடன்மா நகரைக் கூடி, ஆண்டிருந்ததோர் பழுமரத்தின் கீழ்ப் படுத்திருந்து, வானிற் பறந்து செல்லும் நாரையினைக் கண்டு, தன் மனைவிக்கு, 'நாரைவிடு தூது' ஆக ஒரு செய்யுள் கூறுவாராயினர்.

'நாராய் நாராய் செங்கால் நாராய்
பழம்படு பனையின் கிழங்குபிளந் தன்ன
பவளக் கூர்வாய்ச் செங்கால் நாராய்
நீயுநின் மனையும் தென்றிசைக் குமரியாடி
வடதிசைக் கேகுவீ ராயின்
எம்மூர்ச் சத்திமுற்ற வாவியுள் தங்கி

நனைசுவர்க் கூரைக் கனைகுரற் பல்லிப்
பாடுபார்த் திருக்குமெம் மனைவியைக் கண்டு
எங்கோன் மாறன் வழுதி கூடலில்
ஆடை யின்றி வாடையின் மெலிந்து
கையது கொண்டு மெய்யது பொத்திக்
காலது கொண்டு மேலே தழீஇப்
பேழையுள் ளிருக்கும் பாம்பென வுயிர்க்கும்
ஏழை யாளனைக் கண்டனம் எனுமே'

என்று ஓர் அகவற் பாவினை அறையக் கேட்டனன். உடனே அவன் பரிந்து விரைந்தோடி நோக்குதலும் அருங்கவிவாணர் உடுக்கையின்றி இடுக்கணுறக் கண்டான். கண்ட காவலன் அப்புலவர் பெருமானைத் தன் அரண்மனைக்கு அழைத்தேகி, சொல்லொழியச் செல்வம் தந்து, சிறக்க அனுப்பினன். பரிசுபெற்ற அப் பாவலர் களிப்பென்னுங் கடலு ளாழ்ந்து,

'வெறும்புற் கையுமரி தாங்கிள்ளை
சோறுமென் வீட்டில்வரும்
எறும்புக்கு மாற்பத மில்லைமுன்
னுளென் இருங்கலியாம்
குறும்பைத் தவிர்த்த குடிதாங்கி
யைச்சென்று கூடியபின்
தெறும்புற்கொல் யானை கவளங்கொள்
ளாமல் தெவுட்டியதே'

என மற்றோர் செய்யுளையும் இசைத்தனர்.

VII. அறியாமை

இக் காலத்து மாணவர் பலர் படிக்கத் தொடங்கிச் சிறிது கல்விநலத்தை யடைந்தபின்னர், உடல்வருந்த உழைப்பது நம் கல்விக்கும் தகைமைக்கும் ஏற்றதன்றென எண்ணி, அத்தகைய அலுவல்களிற் செல்ல முற்றும் மன மின்றி, உட்கார்ந்து உழைக்கும் உத்தியோகத்தையே பெரிதும் நாடியிருக்கின்றனர். உத்தியோகம் என்பது முயற்சி. அஃது இக்காலத்தே உடலா லுழைக்கும் உழைப்பைக் குறியாது புத்தியால் உழைக்கும் உழைப்பையே பெரும்பாலும் குறிக்கின்றது. இத்தகைய உத்தியோகம் யாவர்க்கும் கிடைப்பது எங்ஙனம்?

‘உடலுழைப்பிற்குக் கல்வி யெற்றேன்?’ எனப் பலர் இக் கொள்கையை ஆக்ஷேபித்தற்கு இடம் உண்டு. கல்விக்கும் மடமைக்கும் உள்ள வேற்றுமையை நன்கு உணர்ந்தோர் அவ்வாறு கருதார். உத்தியோகஞ் செய்து வாழ்பவனே கற்றவன், உழுதுண்டு வாழ்பவன் கல்லாதவன் என்றெண்ணுவது எவ்வாற்றானும் பொருத்தமுடைய தாகாது. கற்றவற்கும் கல்லாதவற்கும் காணப்படும் பேதம் இவ்வளவினதே யன்று; மற்றென்ன வெனின், விலங்கினங்களுக்கும் மானிடப் பகுதிக்கும் உள்ள பெரும் பேதமே கற்றவர்க்கும் கல்லாதவர்க்கும் ஏற்பட்டுள்ள பேதத்திற்கு அமைவுடைத்தாகும்.

இவ்வுலகை எல்லாப் பொருள்களும் ஒருங்கே அமைந்துள்ள அரியதோர் அரண்மனைக்கு உவமிக்கலாகும். அவ்வரண்மனையின் கதவு ஒருவரும் உள்-

நுழையாவாறு என்றும் பூட்டப்பட்டிருக்கின்றது. மானிடன் அந்த அரண்மனையின் வெளிப்புறத்தில் உள்ள பிராணியாம். அப்பிராணியின் அறிவென்னும் திறவுகோல் ஒன்றே அக் கபாடத்தைத் திறந்து, உட்புறத்தில் அமைந்துள்ள இன்பப் பொருள்களை இனிது நுகரவல்லது என உருவகித்துக் கொண்டால், மானிடப்பகுதியிற் சேர்ந்த ஒவ்வொருவனும் அவ்வின்பத்தை அடைதற்பொருட்டு முயல வேண்டுவது அவசியமே யன்றோ? நாம் நம் முந்தாதைகள் காலந்தொட்டு எண்ணிறந்த தலைமுறைகளாக இவ்வின்பப் பொருள்களை அடைந்தனுபவிக்க முயன்றும் முற்றும் நமக்குக் கிட்டியபாடு இந்நாள்காறும் புலப்பட்டிலது. நாம் இன்றுவரையிற் கண்டனுபவிக்கும் இன்பங்கள் அனைத்தும் அவ்வரண்மனையில் அமைந்துள்ளவற்றில் பல்லாயிரத்தி லொருபங்கிற்கும் இணையில்லையென்றே இயம்பலாம்.

அறிவு வளர வளர நமக்கு நேரும் இன்னல்களும் வரவர இல்லையாய் முடியும். ஆராய்ந்தறியுமிடத்து, எந்நாட்டினும் செல்வர் தாம் ஈட்டிய திரவியத்தைச் சேமித்து வைப்பதும், வறியர் வருவாயற்ற காரியங்களில் தலையிட்டுக் கொள்வதும், காலத்திற் சாவவேண்டுநர் அகாலத்திற் சாவதும், நல்லோர் நற்காரியங்களைக் கைவிடுத்து நடப்பதும், செல்வம் மிக்கிருக்க வேண்டியவிடத்தே செல்லல் மிக்கிருத்தலும், சுகத்தை அடையவேண்டியவிடத்துத் துக்கத்தையும் பிணியையும் அடைந்திருத்தலும், இவை முதலாயின பிறவற்றிற்கு நேருங் காரணங்கள் அறியாமையின்பாற் படுமே யன்றிப் பிறிதன்று.

இதனை ஒப்பிட்டு நோக்குவதற்கு நம் சென்னைமா நகரமே சிறந்த திருஷ்டாந்தமாகும். நிலத்திற்குக் கொழுமை யுண்டாக்கும் குப்பைகளை, அவ்வாறு உபயோகியாமல், வீட்டுக்கருகில் கொட்டிவைத்துப் பற்பல தொற்றுநோய்களுக்குத் தொடர்பு உண்டாக்குகின்றனர். இவ்வாறு செய்வது சுகாநுகூலத்திற்கான விதிவிலக்குகளை இந் நகரவாசிகள் முற்றும் அறியாமை யன்றோ காரணமாக நிற்கும். இதனால் விளையுந் தீங்கு என்னவெனின், ஆண்டுதோறும் சற்றேறக்குறைய ஐயாயிரவர் மரிப்பதும் ஐம்பதினாயிரவர் நோய்க்கு ஆளாவதுமேயாம். இவ்வகைய சேதத்தினால் எண்ணிறந்த குடும்பங்கள் இன்னல் அடைந்து அழிந்துபடுவது மன்றி எண்ணிறந்த காரியங்களும் இடையூறு அடைகின்றன. நாகரிக மிக்கதென்று கொண்டாடப்படுகின்ற நகரவாசிகளே இவ்வாறு அறியாராயின் நாகரிகமற்ற குக்கிராம வாசிகள் அறியாதொழிவது அமைவுடைத்தாகுமே யன்றோ?

கொலைஞர்கள் வருடந்தோறும் ஒரு நகரத்திற் புகுந்து ஐயாயிரவரைக் கொன்றும், ஐம்பதினாயிரவரைக் காயப்படுத்தியுஞ் செல்வாராயின், அத்தகைய காரியத்திற்கு இடங்கொடுத்த நம்போலும் பேதை நீரார் இலரென்பது உள்ளங்கை நெல்லிக் கனியென விளக்கமுறும். அத்தகைய கொள்ளை நோயாக்கும் கொலைஞரது சேனை ஒன்று இந்நகரத்தி லுண்டென்று உரைக்கலாம். உரைக்கவே, அச் சேனைக்குத் தலைவனாக அறியாமை என்பவன் அமைந்துள்ளான் என்பது வேற்றுமையாகாது. நமக்கு நல்லறிவு விருத்தியடைந்து சுகாநுகூலத்திற்கு உரிய விதிவிலக்குகளைச்

செவ்வினை புணர்ந்து கைபடுங் காலம் வரும்வரையில் அவ்வேலை தன் காரியத்தில் ஜயம் அடையுமென்றே கூறலாம்.

அறியாமையினால் நேரும் தீங்கு இஃதொன்றே யன்று. இத் தேயத்தின்கண் உள்ள கல்விமான்கள் இதுகாறும் துரைத்தன சாலைகளில் உத்தியோகஞ் செய்வதும், நியாயத்தலங்களில் நியாயவாதமாடுவதும் ஆகிய இரண்டு விஷயங்களில்மட்டும் தமது கருத்தைச் செலுத்திக் கீர்த்தியடைந்து வந்தனரேயன்றி மற்றை விஷயங்கள் யாதொன்றிலும் பிரவேசித்தனர் என்பது புலப்படவில்லை. வேறு சில நாட்டினரைப்போல ஆயுர் வேதம், பௌதிக சாத்திரம், சிற்ப சாத்திரம், இரசாயன சாத்திரம் முதலிய விஷயங்களை ஏன் அப்பியசித்தல் கூடாது? இவற்றால் சாதாரண ஜனங்களுக்கு யாது பயன் என்று சிலர் கூறி மறுப்பர்; அஃது அறியாமையே யன்றி வேறன்று. அறியாமை எவ்வளவு காலம் நீடிக்கின்றதோ அதுகாறும் ஜனங்களுக்கு மேற்கூறிய சாத்திரங்களின் பிரயோஜனங்கள் புலப்படா.

கல்வியின் விளக்கமுண்டாகி அவற்றின் குணங்கள் வெளிப்படத் தலைப்பட்டாலன்றி, மாணிடர் அவற்றைப்பற்றி ஆர்வங்கொள்வதற்கு இடனிராது. கைத்தொழில்களைச் செவ்வனே செய்து முடித்தற்கும் சாத்திர ஞானம் இன்றியமையாததாக இருக்கிறது. வேலையைக் கூடியமட்டும் செவ்வைப்படுத்தி எளிதாக்குமாறு இங்கிலந்து முதலிய தேயங்களில் உள்ள ஒவ்வொரு கைத்தொழிற் சாலையிலும், சாத்திரப் பயிற்சி யுள்ளவர் இரண்டொருவரை அமைப்-

பதே பெருவழக்கம். இந்தியாவும் இனிக் கைத்தொழில் விருத்தியடையுமன்றே. கரும்பொன்னுஞ் சரியும் அண்மையில் உண்டு; சமுத்திரத்தின் சகாயமும் கிடைத்திருக்கின்றது; பஞ்சு, தேயிலை, புகையிலை, காப்பி, அபினி முதலிய பொருள்கள் உற்பத்தியாகத் தக்க நிலவளமும் உண்டு; அநேக ஜீவநதிகளும், எண்ணிறந்த சிற்றாறுகளும் இந் நாட்டிற் பாய்கின்றன. எவ்வகைக் குறைவுமின்றி, சகல சாதனங்களும் உண்டு. ஆயினும், அவ்வசைய சாதனங்களினால் அமைத்துக்கொள்ள வேண்டிய காரியங்களை முடித்துக்கொள்வதற்கு ஏற்ற நுண்ணறிவும், திறமையும் இல்லாமை பெருங் குறையே. அதாவது, கல்வியறிவு மாத்திரம் குறைவடைந்திருக்கின்றது. அக் குறைவும் விரைவில் நீங்கிவிடின், கைத்தொழில்கள் பலவும் விருத்தியடைந்து, நாட்டிற்குச் செல்வமும், வளப்பமும், சிறப்பும் உண்டாகும். ஆதலின், இப் பெருங் காரியத்தின் பொருட்டுக் கல்விமான்கள் யாவரும் தம்மாலியன்ற மட்டும் உழைத்து உதவிபுரிதல் தமக்குரிய கடமைகளில் தலைமையானதாகக் கொள்ளவேண்டும்.

பாடசாலை வருஷோத்ஸவம்

முதலிய காலங்களில் உபயோகிப்பதற்கான

நாடக பாடம்

VIII. கௌரி

முதற் காட்சி

இடம் : எல்லப்பன் வீடு.
காலம் : முற்பகல்.
பாத்திரங்கள் : எல்லப்பன், செல்வமுத்து.

எல்லப்பன் — செல்வா, நானோ காலங்கடந்து கலியாணம் செய்துகொண்டேன். உனக்குத் தக்க காலத்தில் விவாகம் செய்து, உன் கால்வழியில் தோன்றும் குழந்தையை என் கையில் ஏந்திக் களித்தபின் இறக்கவேண்டும் என்பது என் எண்ணம். இவ்வகையில் நீயும் என் கருத்துக்கு இசைந்து நடப்பாயென்று எண்ணுகிறேன்.

செல்வமுத்து — அண்ணா, தங்கள் இஷ்டம்போல் செய்யத் தடை என்ன? அவ்வாறே செய்யலாமே.

எல்லப்பன் — செல்வா, கலியாணம் செய்துவைப்பது என் கடமையாயினும், அதைச் செய்துகொள்வது உன் கருத்தைப்பற்றியதே யன்றோ! உனது அத்தை மகளாகிய கௌரி குழந்தைப்பருவம் முதல் உன்னுடனிருந்து உண்டு உடுத்து வளர்ந்து வருகிறாள்.

(விருத்தம்)

உங்களைக் காணுந் தோறும் உவகையால் உம்மை என்றும்
பொங்கிய உலக வாழ்வில் பொருந்திடச் செய்து பின்னல்
தங்கிய செல்வ மெல்லாம் சமனுற அனுப விக்க
இங்கிவண் புரிவ தென்ன எண்ணியே இருக்கின் றேனே.

ஆதலால், அந்த விஷயத்தில் நீயும் உடன்படுவா யானல், உத்தமமாயிருக்கும்.

செல்வமுத்து — (சற்று யோசித்து) அண்ணா,

சந்தையின் கருத்துக் கேற்பத் தனயனும் நடத்தல்வேண்டும்
இந்தவோர் காரி யத்தில் என்மனம் இசைய வில்லை
பந்தமாம் உலக வாழ்வில் பற்றிய அன்பி னல்தன்
சிந்தையிற் கொண்ட மாதைத் திருமணம் முடித்தல் நன்றாம்.

ஏதோ, கௌரி விஷயமாக என் மனம் சிறிதும் செல்லவில்லை. ஆதலால், தயவு செய்து இந்த விஷயத்தில் என்னைத் தாங்கள் பெரிதும் மன்னிக்க வேண்டும், அண்ணா.

எல்லப்பன் — (கோபத்துடன்) செல்வா, அப்படியா! நீ மறுப்பதாவது, நான் மன்னிப்பதாவது!

(விருத்தம்)

இந்தநற் கௌரி தானும் எழிலெலாம் திரண்டு வந்த
அந்தமார் கன்னி யாவ தறிந்துளாய் அவளோ மிக்க
சிந்தையில் அன்புகொண்டு தெரிந்துனை நாடு கின்றாள்
முந்துமில் லறத்திற் கான மூதறி வுடையா ளன்றே.

ஆதலால், அவளையே நீ மணம்புரிதல் தக்கதாகும். அன்றி, நான் ஒரு காலத்தில் என் சகோதரியுடன் சச்சரவுபட்டு அவளைக் கடிந்து உரைத்தேன். அது காரணமாக நாங்கள் இருவரும் போக்குவர வின்றி இருந்தோம். சில நாட்களின் பிறகு என்

சகோதரியும் இறந்துவிட்டாள். அந்த வருத்தம் என் மனத்தைவிட்டு இன்னும் அகலவில்லை. ஆயினும் நீ என் எண்ணத்தின்படி நடக்க இசை-வையாயின், அந்த வருத்தத்திற்கு ஒரு வகையில் பரிகாரமும் உண்டாகும்.

செல்வமுத்து — அண்ணு,

(பாட்டு)

முடியாதிது முடியாதிது முடியாதிது ஐயா
படிமீதினில் உயிர்போயினும் பகர்வேனிது மெய்யா
மணமென்பது மணமக்களின் மனமோத்தது ஆமே
குணமென்பது இதுவாமெனக் குறிக்கோள்ளுவிர் தாமே

அண்ணு, தாங்கள் இது விஷயமாக என்னை இன்-னும் வருத்தவேண்டா.

எல்லப்பன் — அப்படியா !

(விருத்தம்)

என்னது தந்தை காலத் திட்டது சட்ட மாகும்
பின்னது உனக்கு மிங்கே பேசுவேன் அதனைக் கேட்டு
மன்னிவை யாயின் இங்கு வசித்திட லாகும் இன்றேல்
உன்னுமுன் வழியைப் பார்த்து ஒழிந்திட வேண்டும் கண்டாய்.

இன்னமும் உன்னை நான் மன்னிக்கிறேன் ; இதை நன்முய் யோசித்துப் பார்.

முப்பது நாளு னக்கு முன்னுறத் தவணை தந்தேன்
அப்பொழு தைக்குள் நீயும் ஆய்ந்திவண் என்ம னத்துக்
கோப்பிய விடையை யிங்கே ஓதுவை யானுல் நன்றும்
தப்புவ தானுல் என்றன் தலைக்கடை மிதிக்கோ ணுதே.

போ, நன்முய் யோசி. ‘தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை’ என்பதை எண்ணிப் பார்.

இரண்டாங் காட்சி

இடம் : எல்லப்பன் வீட்டின் பின்புறம்.
காலம் : முற்பகல்.
பாத்திரங்கள் : எல்லப்பன், கௌரி.

எல்லப்பன் — கௌரி, பார்த்தாயா அவன் செய்த காரியங்களை! நான் அவனுக்கு ஒருமாதம் தவணை கொடுத்தும் இருபது நாட்களுக்குள்ளேயே, இஷ்டமில்லை என்று போய்விட்டான். துரோகி, பெற்றோர் மனம் எரிய நடக்கும் பிள்ளை முன்னுக்கு வருவானா! அவன் போன சீக்கிரத்தில் ஓர் எளிய குடியானவன் குமாரத்தியை மணந்து கொள்ளவும் நிச்சயித்துவிட்டானாமே!

கௌரி — ஆம், மாமா, இன்றுதான் கலியாணமாம்.

எல்லப்பன் — இன்றா! சற்று இரு — அதோ மேளச் சத்தம் கேட்கிறதே! ஆஹா, என் வயிறு எரிகிறது; கௌரீ!

(விருத்தம்)

அப்பெரும் பாவி தன்னை அவனது மனைவி யாகச்
செப்புமக் கன்னி தன்னைச் சிந்தையில் நினைக்கோ ணாது
ஒப்பிய அவரோ டேநீ உரைசோலக் கண்டே னால்
தப்புவ தில்லை வீட்டைத் தட்சணம் அகல வேண்டும்.

பத்திரம், இது உன் ஞாபகத்தில் இருக்கட்டும். பிள்ளை யென்னும் எண்ணம் இன்றோடு ஒழிந்தது. என்ன சொல்லுகிறாய்?

கௌரி — தங்கள் இஷ்டப்படியே நடந்துகொள்ளுகிறேன்.

மூன்றாங் காட்சி

இடம் : செல்வமுத்து வீடு.
காலம் : மாலை.
பாத்திரங்கள் : செல்வமுத்து, பார்வதி.

செல்வமுத்து — பார்வதி, இந்தக் காய்ச்சல் என்னை-விட்டு ஒழிவதாகக் காணவில்லை. இதுவே எனக்கு இறுதிக் காலம்போல் தோன்றுகிறது. என்ன செய்யலாம், நீ நமது குழந்தையை வைத்துக் கொண்டு உன் காலத்தைக் கழி. பிள்ளையைக் கைவிடாதே. அவனைத் தக்கபடி வளர்த்து நல்ல வழிக்குக் கொண்டுவா. நீயும் புத்தியுடன் இருந்து பூமியில் நல்லபேர் எடுத்துக்கொள்.

பார்வதி — நாதா, தாங்கள் ஏன் இவ்வாறெல்லாம் எண்ணி வருந்துகிறீர்கள் ? சிலவகையான சுரம் சீக்கிரமாக நீங்கிவிடும் ; சிலவகையான சுரம் நீடித்-திருந்து குணப்படும். ஐயோ ! இந்தக் காலத்-தில் நமக்குத் தக்க உணவுகொடுக்கவும் வழியில்-லையே. தாங்கள் இருக்கவேண்டிய நிலைமையில் இருந்தால் எவ்வளவு செல்வமாக இருக்கலாம். ஏதுக்கும் பயனற்ற என்னை மணந்து என்ன கண்டீர்கள் ! அந்தக் கௌரியைக் கட்டிக்கொண்டு இருந்தால் எவ்வளவு கௌரவமாக இருந்திருக்-கலாம்.

செல்வமுத்து — பார்வதி, அதையெல்லாம் இப்போது நினைப்பூட்டாதே. என் தந்தை எனக்கு இஷ்ட-மில்லாத காரியத்தைச் சொன்னதனால், நான்

அவர் கட்டளையை மறுக்க நேர்ந்தது. அவர் எண்ணத்தை முடிப்பதற்கு எவ்வளவோ முயன்றேன்; முயன்றும் என்ன பலன்! 'பழகப் பழகப் பாலும் புளிக்கும்' என்பதுபோல், கௌரியை என் கண்ணாரக் காணக் காண என் மனத்தில் வெறுப்பே மிகுந்தது. இனி, அங்கே இருந்து பயனில்லை யென்று உணர்ந்து வீட்டைவிட்டு வந்து விட்டேன். பிறகு, நமக்கு வறுமை வந்த காலில் என் தந்தை என்னை மன்னித்து ஏற்றுக்கொள்ளுவார் என்று எண்ணி, அவர் கண்காண அவ்வீதி வழியாகப் பலமுறையும் சென்றேன்: வீட்டுக்கு எதிரிலும் நின்றேன்; அவர் மனம் கல்லாகவே இருந்துவிட்டது. என்ன செய்யலாம்! நான் உன்னை மணந்து கொண்டதற்காக ஒருபோதும் மனம் வருந்தியதே யில்லை.

பார்வதி — இந்தக் காலத்தில் அதையெல்லாம் எண்ணவேண்டா. இது ஏதோ கொஞ்சம் உணவு வந்தது, இதையாவது சாப்பிடுங்கள்.

செல்வமுத்து — உணவா — ஏது? இது யார் கொண்டு வந்தது?

பார்வதி — இது ஏதோ தெரியவில்லை: ஒரு வேலையாள் அவ்வப்போது வந்து, சில பண்டங்களைக் கொடுத்துவிட்டு உடனே திரும்பிப் போய் விடுகிறான். அவைகளை நமது வறுமை காரணமாக வாங்கிக் கொள்ளுகிறேன்.

செல்வமுத்து — அப்படியா! அது யாரோ அனுப்பியதென்று எண்ணாதே; என் அத்தைமகள் கௌரி

தான் அதை அனுப்பி யிருக்கவேண்டும். ஐயோ, என்ன அன்பு! நான் வெறுத்தும் அவள் வெறுக்க வில்லை பார்த்தாயா! இதையும் அவள் என் தந்தை அறியாமலே அனுப்பியிருப்பாள்; அல்லது, தான் அனுப்பியதாகத் தெரிந்தால், நாம் மறுத்துவிடுவோம் என்று எண்ணி, வெளியிட வேண்டா என்று அந்த வேலைக்காரனுக்கு அவள் சொல்லி அனுப்பி யிருப்பாள்.

பார்வதி — ஆனால் சரிதான், அத்தைமகள் அன்புடன் அனுப்பினதையாவது அருந்திப் பசி தீருங்கள்! இதோ இந்தப் பாலைக் குடியுங்கள்.

செல்வமுத்து—ஐயோ, பால் குடிக்கவும் கூடவில்லையே; இதுதான் எனக்குக் கடைசி உணவுபோல் தோன்றுகிறது; இதோ என் உயிர் போகிறதே.

[தலை சாய்கிறது.]

நான்காங் காட்சி

இடம் : செல்வமுத்து வீடு.

காலம் : மாலை.

பாத்திரங்கள் : பார்வதி, கௌரி.

பார்வதி — (சந்த விருத்தம்)

என்னுயி யன்ன துரையேயிங் கென்னை
இந்நாளில் விட்ட தென்னே
பின்னாக வந்த சிறுவன் றனக்கும்
பேசாம லேக லழகோ
எந்நாளு முன்னே டின்புற்று வாழ
இறுமாந் திருந்த என்னை
இந்நாளில் நீங்கி இடர்கொள்ள விட்டாய்
இனியெங் கிருந்து வாழ்வோம்.

ஐயோ, என்ன செய்வேன் ! இந்தச் சிறு குழந்தையை வைத்துக்கொண்டு எவ்வாறு காலம் கழிப்பேன் ! எனக்கு இனி யார் திக்கு ! அந்தக் கௌரியாவது வந்து கவனித்தாளா ! நன்றாயிருந்தால்தான் நாலுபேரும் வருவார்கள்.

(கௌரி வருகிறாள்.)

கௌரி — அம்மா, என்ன செய்யலாம், அழாதே, செல்வருக்கு நேர்ந்த துன்பத்திற் கெல்லாம் நான்தான் காரணமாக இருந்தேன். இப்போது வருந்தி என்ன பலன். நமது வாழ்க்கை துக்கமயமானது. போனவர் தமக்குப் பதிலாக இந்தக் குழந்தையை வைத்துவிட்டுப் போனார். இனி

நாம் இந்தக் குழந்தையை நல்வழிப்படுத்த நாட-வேண்டும். சென்ற ஐந்து வருஷமாக இல்லாத விளைவு இந்த வருஷம் விளைந்திருக்கிறது. எனது மாமனார் அதிக சந்தோஷத்துடன் இருக்கிறார். ஆகையால், நீ இந்தக் குழந்தையை என்னுடன் அனுப்பினால், நான் அழைத்துக்கொண்டுபோய் அவரிடம் ஒப்பித்துவிடுகிறேன். எனக்கு ஒன்-றும் இல்லை, போனவர் போனாலும், இந்தச் சிறு குழந்தையாவது சீரடையட்டும் என்பதுதான்.

பார்வதி — எப்படியாவது செய், இந்தப் பிள்ளை நல்ல நிலையை யடைந்து தன் தகப்பனார் பேரைச் சொன்னால் போதும். (குழந்தையைப் பார்த்து) அப்பா, கண்மணீ, இதோ அம்மா, கிட்டே போ.

கௌரி—(எடுத்து முத்தமிடுகிறாள்) பார்வதி, நான் போய் வருகிறேன்.

பார்வதி — செய், பிள்ளையைப் பார்த்துக்கொள்.

[கௌரி போகிறாள்.]

ஐந்தாங் காட்சி

இடம் : ஒரு வயற் புறம்.

காலம் : முன் மாலை.

பாத்திரங்கள் : எல்லப்பன், கௌரி, குழந்தை.

எல்லப்பன் — கௌரியா இங்கு நிற்பவள் ?

(விருத்தம்)

நெஞ்சினில் துணிவு கொண்ட நீலிநீ நேற்றைப் போது
கொஞ்சமும் அச்ச மின்றிக் கூறும லெங்கே போனாய்
மஞ்சனும் இவனைர் நின்பால் வந்தஅவ் வகைதான் ஏது
வஞ்சனை யின்றி யிங்கு வகையுட னுரைசெய் வாயே.

கௌரி — (அகவல்)

மாமா உமக்கு மறைப்பதும் உண்டோ
சீமான் நந்தம் செல்வமுத் திறந்த
நாளாய் என்மனம் நலிவினை யடைந்தது.

எல்லப்பன் — நான் அவனைக் கனவிலும் கருதக்கூடா-தென்று கட்டளையிட வில்லையா ?

கௌரி — ஆம், மாமா,

மீளாத் துயரம் மிகுவதால் அவர்தம்
குழந்தையை யாயினும் கொணர்ந்து வளர்க்கும்
விழைவுடன் அங்கே விரைந்து சென்றேன்.

எல்லப்பன் — வளர்க்கவா போகிறாய் ! உன் வயிற்றை வளர்க்க முன்பு வழி பார்த்துக்கொள்ளு. இனி என் வீட்டில் நுழையும் எண்ணத்தை விட்டுவிடு. பேச்சைக் கடந்து நடந்தால் பிள்ளை என்ன, பெண் என்ன ! என் சங்கதி தெரியாதா உனக்கு.

வெட்டு ஒன்று, துண்டு இரண்டுதான். இனி-யாவது தெரிந்துகொள்.

கௌரி — மாமா,

என்றவண வீட்டில் ஏற்கா விடினும்
துன்றிய பேரனுத் தோன்றுமிப் பிள்ளையை
அன்புடன் ஏற்றே அன்ன வஸ்திரம்
இன்புடன் தந்து ஈடேற் றிடுமே.

எல்லப்பன் — ஓஹோ, இந்தக் கதையெல்லாம் நான் நன்கு உணர்வேன்! என்னிடம் இந்தப் பஞ்ச-தந்திரமெல்லாம் படியாதே; அகல நட, இனி என்முன் நிற்காதே, இஷ்டமானல் இந்தப் பிள்ளையைமட்டும் இங்கே விட்டு விட்டுப் போ.

ஆறாங் காட்சி

இடம் : செல்வமுத்து வீடு.

காலம் : பின் மாலை.

பாத்திரங்கள் : கௌரி, பார்வதி.

பார்வதி — ஆஹா, அதோ கௌரி திரும்பி வருகிறாள்; பிள்ளை அவளோடுவரக் காணோம், சரிதான் கடவுள் கண்திறந்துவிட்டாற்போல் காண்கிறது. (கௌரி அருகில் வருகிறாள்) கௌரி, என் முற்றத்திலேயே நிற்கிறாய்? முகமும் மாறுபட்டிருக்கிறதே, என்ன காரணம்?

கௌரி — மாறுபாடு ஒன்றுமில்லை; என் மாமனார் பிள்ளையை ஏற்றுக் கொண்டார். ஆனால், நாம் இருவரும் இனி ஒன்றாய் இருந்து காலங்கழிக்க வேண்டும். அவர், 'இனி உன் முகத்தில் விழிக்க மாட்டேன்' என்று சொல்லிவிட்டார்; இதுதான் விஷயம்.

பார்வதி—உன் முகத்தில் விழிக்கமாட்டாரா! அப்படியானால் கூடாது; எனக்காக நீ வருந்துவானேன்? இனி ஒரு க்ஷணமும் என் பிள்ளை அவரிடத்தில் இருக்கக்கூடாது.

(விருத்தம்)

அந்தக்கல் நெஞ்ச னோடேன் அரியநற் குழந்தை சேர்ந்தால்
முந்திய மூர்க்கங் கொண்டு மூடனா யறிவி ழந்து
சொந்தநற் றாயென் றெண்ணான் சொல்மரி யாதை பாரான்
இந்தவா றான மைந்தன் இருப்பதிற் பயனு முண்டோ.

கூடாது, வந்து, என் மைந்தனை என்னிடம் ஒப்பித்துவிடு. பிறகு, இறைவன் விட்ட வழியைப் போல் ஆகிறது. உன்னையும் ஏற்றுக்கொள்ளும்படி அவரை நான் வேண்டிக்கொள்ளுகிறேன்; வா, போவோம்.

கௌரி — பார்வதி, பதறாதே, வெந்நீரில் வீடு வெந்துவிடுமா! இப்போது என்ன முழுகிப்போகிறது. இன்று பிள்ளையை ஏற்றுக்கொண்டவர் பிறகு நம்மையும் ஏற்றுக்கொள்ளுவார்.

பார்வதி — அதெல்லாம் வெறும் பேச்சு; சொந்த பிள்ளையையே சோற்றுக்கில்லாமல் இறக்க விட்டாரே, இந்தப் பிள்ளையால் அவருக்கென்ன. ஒரு கால் அவன் அழுதால் அடித்து ஓட்டி விடப்போகிறார். ஐயோ, வேண்டா, எந்த விதத்திலும் அவரிடம் என் பிள்ளையை விட்டுவைக்க எனக்கு இஷ்ட மில்லை, புறப்படு.

கௌரி — ஆனால் சரி, உன்னிஷ்டம். வா, போவோம்.

ஏழாங் காட்சி

இடம் : எல்லப்பன் வீடு.

காலம் : காலை.

பாத்திரங்கள் : எல்லப்பன், கௌரி, பார்வதி.

எல்லப்பன் — யாரங்கே ?

(அகவல்)

பார்வதி — மாமா என்னை மன்னித் திடுவீர்

பையன் — இதோ வந்தேனப்பா. (ஓடிவருகிறான்)

எல்லப்பன் — ஓஹோ! நீயா, என்ன சங்கதி ?

பார்வதி — தாமே யெல்லாத் தன்மையும் அறிவீர்
என்றனக் காகவும் இறந்து பட்ட
துன்றிய செல்வத் துரைதனக் காகவும்
பால்மணை மருதுப் பாலனுக் காகவும்
சாலவும் வேண்டச் சார்ந்தே னில்லை.

எல்லப்பன் — பின் எதற்காக இங்கே வந்தாய் ?

பார்வதி — என் குழந்தைக்கா இந்தக் கௌரி
துன்ப முற்றுச் சோற்றுக் கலைதல்
ஆகா தாகாது அறைகுவேன் கேளும்
வாகா யிவளை மனங்கொண் டேற்று
என்னரும் புதல்வனை என்னிடம் அனுப்பின்
மன்னிய விதிபோல் வாழ்ந்திடு வோமே.

எல்லப்பன் — பிள்ளையை அனுப்பிவிட வேண்டுமோ !
கௌரியை ஏற்றுக்கொண்டால் — ?

பார்வதி — அப்போதும் அனுப்பவேண்டியதே.

எல்லப்பன் — ஏன்?

பார்வதி — அவன் உம்மிடம் இருந்தால் உமது வன்னெஞ்சம் அவனுக்கும் படிந்துவிடும். பெற்ற தாயாரென்று சற்றும் எண்ணுன்; தன் தந்தையின் பெயரையும் முன்னுக்குக் கொண்டுவர மாட்டான்.

எல்லப்பன் — இவன் தந்தை அவ்வளவு உத்தமனு? தந்தை வார்த்தையைத் தட்டி நடக்காதவனே அவன்?

பார்வதி — மாமா, தந்தை வார்த்தையைத் தட்டி நடந்த குற்றத்தை அவர் எண்ணி வருந்தாமல் இருந்ததில்லை. ஐயோ! அவர் உயிர்விடுந் தருணத்தில், உம்மை நினைத்து வருந்தியதுமன்றி, கடவுள் உமக்கு அருள்புரிய வேண்டுமென்றும், தாம் அடைந்த துன்பங்களில் ஒரு சிறிதும் உமக்கு ஒருபோதும் நேராது ஒழியவேண்டும் என்றும் சொல்லித்தான் உயிர்விட்டார்.

எல்லப்பன் — அப்படியா!

அந்தோ என்றன் அருமைப் புதல்வா
இந்த நாளினில் இழந்தேன் உன்னை
பாரினில் நீங்காப் பழியும் பூண்டேன்
கூறில் நின்னைக் கொன்றவன் யானே
என்ன செய்வேன் எவ்வா றுய்வேன்
மன்னுதெய் வம்எனை மன்னித் திடுமோ.

கௌரி —

(பாட்டு)

மாமா சென்ற விஷயங்களை மனத்தில் வைக்க லாமோ
தாமா வரும் வினைக ளாநாம் தள்ளி னாலும் போமோ
இந்தப் பிள்ளை தனைநாம் கொண்டால் இன்பமடைந் திடலாம்
சொந்தமாக இருந்து கொண்டு துன்ப மெல்லாம் விடலாம்.

எல்லப்பன் — என் அருமை மக்களே, நீங்கள் இப்படியே எல்லோரும் ஒன்றாய்க்கூடி இருந்து எனக்குச் சந்தோஷத்தைக் கொடுங்கள்; உள்ளே வாருங்கள். எல்லாம் உங்களுடையதே, அனுபவித்து ஆனந்தம் அடையுங்கள்.

Printed at the 'Aurora Press,' Madras — 1927.

Caxton Press, Madras.